Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பல்முனைப்பேட்டி

இந்திய உயர்ஸ்தானிகர்- ஜா

Registered in Srilanka

விலை: ரூபா .12.50

# அருவி

இதழ் - 8 இலங்கையில் வெளியாகும் ஜனரஞ்சக மாத இதழ்

1993 தை



# அயோத்தியகாண்டம்

■ வடக்குக் கிழக்கு இணைப்பைக் கைவிடுவதற்கான பேரம்?

■ மீண்டும் தோண்டப்படும் புதைகுழி! ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடியோ சமுத்திரா

VIDEO SAMUDRA
88F, 1/1;Galle Rd
Dehiwala.




**புதிய, பழைய தமிழ், மலையாள, ஹிந்தி, ஆங்கில திரைப்படங்களின் வீடியோ கசற்றுகளுக்கு தெகிவளையில் ஒரு மையம் வீடியோ சமுத்திரா**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**இராமரின் பெயரில் ஒரு வெறியாட்டம்**
ஒரு இதிகாசக் கதைக்கு நிஜவடிவம் கொடுத்துப் பழிவாங்கப் புறப்பட்ட மதவெறி! அரசியலுக்கு இராமபிரான்கூட ஒரு பகடைக்காய் தான்! .................. பக்.14



**மீண்டும் தோண்டப்படும் புதைகுழி!**
வெடிகுண்டுநிபுணர்,புகைப்படச்சான்றுகளைக் கொண்டு கூறிய முடிவு. லெலி கொப்பேகடுவவின் அறிக்கைவடிவில் புதியதோர் பிரச்சினை ................ பக்.30



**சினிமா.........எலிபதாயம்.**
திரையுலகில் பல விருதுகள் பெற்ற அடூர் கோபாலகிருஸ்ணனின் ஒரு அனுபவப் பகிர்வு .......................................... பக்.22


| | பக்கம் |
|---|---|
| **நாட்டு நடப்புகள்** | |
| இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வு சமஷ்டி முறை சாத்தியமானதா? | 4 |
| சிறீனிவாசனின் நடைமுறைச் சாத்தியமான(?) ஒரு தீர்வு. | 5 |
| நான் சமஷ்டிக்கு எதிரானவனல்ல | 6 |
| வடக்குகிழக்கு இணைப்பைக் கைவிடுவதற்கு ஒரு பேரம்- பாராளுமன்றத் தெரிவுக்குழு நாடகம் | |
| கொப்பேகடுவ விவகாரம்.- மீண்டும் தோண்டப்படும் புதைகுழி | 30 |
| வெடிகுண்டுநிபுணர் உவெற்றின் முடிவுகளும் சான்றுகளும் | 31 |
| **அயல்நாடு** | |
| இராமரின் பெயரில் ஒரு வெறியாட்டம் | 14 |
| மதவாதச்சேற்றில் பாரதீய ஜனதா | 16 |
| **சினிமா** | |
| எனது திரைப்படங்கள் கைப்பணிப் படைப்பிற்கு ஒப்பானவை | 22 |
| எலிபதாயம் | 23 |
| **பல்முனைப் பேட்டி-ஜா** | |
| இலங்கையர் தமது பிரச்சினைக்குத் தாமே தீர்வு காணவேண்டும் | 17 |
| **சிறுகதை** | |
| மருத்துவம் | 12 |
| குடை | 26 |
| **விஞ்ஞானம்** | |
| தகவல் தொழில்நுட்பம் - கணனியின் ஒரு புதிய பரிமாணம். | 25 |
| **கவிதாப்பிரவாகம்** | 32 |
| **சிறுசெய்திகள்** | |
| புதிய அகதிகள் குடிவரவுச் சட்டத்திற்கு கனடாவில் எதிர்ப்பு | 9 |
| கனடாவில் அகதிகள்வருகையைக் கட்டுப்படுத்த ஒரு புதிய சட்டம் | 29 |
| **தகவல்கள்.** | 10 |
| **இதைக்கொஞ்சம் கேளுங்கள்.** | 1 |
| **வாசகர்கடிதம்.** | 3 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆசிரியருக்கு,

முன்னர் அருவிக்கு இருந்த உறுதியும், உற்சாகமும், உயிர்ப்பும், இலக்கும் இப்போது வெகுவாகக்குறைந்து, அருவி சிலநேரங்களில் சந்து பொந்துகளில் நுழைகிறமாதிரி எனக்குத் தோன்றுகிறது ....

இந்த இதழில் பின் அட்டை ஆகா என்ன அழகு. எப்படி உம்மை பாராட்டுவதென்றே தெரியவில்லை. கதாநாயகனும் கதாநாயகியும் இன்னும் நெருக்கமாக கட்டிப்பிடிக்கும் படம் போட்டிருந்தால் இன்னும் அழகாகஇருக்கும்.

(போகிறபோக்கைப்பார்த்தால் திரைச் சித்திரா, பருவராகம், வண்ணத் திரைகளை விழுத்தினாலும் விழுத்தலாம்.) அருவியாரே இந்தசினிமா விமர்சனம் தேவையற்ற ஒன்று என நினைக்கிறேன். இது என்னைப்போன்ற பலரின் ஓலங்கள்.

முடிந்தால்....

கவிதைகள் அனைத்தும் நன்றே. இன்றைய எமது சமூகப்பிரச்சினைகளை அழகாக, தெளிவாகக் காட்டுகின்றன. மற்றும் சிந்தனை நல்ல ஒரு விடயம். தொடரட்டும்.....

**-ரவிவர்மன்-**

ஆசிரியருக்கு,

நான் ஒரு கவிஞனல்ல, எனவே என் கவிதையின் தரம் பற்றி எனக்குத் தெரியாது. ஆனால் "குணம்" பற்றி எனக்குச் சந்தேகமில்லை. எனது சமூகத்தின் குரல் இதுதான். பிரசுரம் எனது அவாவல்ல. ஏதோ ஒரு நெருடல். அனுப்புகின்றேன். பிரசுரிக்கவேண்டிய கட்டாயமில்லை. தகாததாயின் குப்பைத்தொட்டியைக் கட்டித்தழுவும் அடிமைப்புத்தி அக்கவிதைக்கும் உண்டு. அருவியின் அறிவியற்பணி தொடர வாழ்த்துக்கள்.

**பொ. பிரபாகரன்.**
**பொகவந்தலாவை.**

அருவி,
நீ என் சோகமயமான
கவிதையினை
சுமந்து வருவாயா
என்ற ஏக்கத்தில்
உன்னை எதிர்பார்க்கின்றேன்.
அருவியே உன் ஆருயிர்
காதலி இவளை இலவு காத்தகிளியின்
நிலைக்குத் தள்ளிவிடாமல்
அருவியே கொஞ்சம் ஆதரி என்னை.
-இவள் அருவியின்
காதலி

**ஏ. டபிள்யூ. நிஸ்வா.**
**ஹைத்தவாவெல.**

ஆசிரியருக்கு,

இலங்கைப்பொருளாதாரம் சம்பந்தமாக( கடன் வருவாய், அத்தியவசியப் பண்டங்களின் விலையேற்றம், உணவு முத்திரை போன்றவை பற்றி ) கட்டுரைகள் வருவதும், மலையகமக்களின் தற்போதய நிலைபற்றியும் கட்டுரை வருவதும் வரவேற்கத்தக்கது.

சகாதேவன்-
கோயம்புத்தூர்
தமிழ்நாடு

ரவிவர்மன் குறிப்பிட்ட பின் அட்டைப்படம் ஒரு விளம்பரமே. விளம்பரம் ஒரு சஞ்சிகைக்கு தவிர்க்க முடியாதது. இருப்பினும் அவற்றையும் ஒழுங்கமைப்பதில் கவனமெடுக்கிறோம்.

கவிதைகள் தொடர்பாக அருவி ஒரு கொள்கையைக் கடைப் பிடிக்க வேண்டியுள்ளது. ஒருபுறம் தரமான கவிதைகளை தேர்ந்தெடுக்க வேண்டியும் மறுபுறம் வளரும் கவிஞர்களை ஊக்குவிக்க வேண்டியும் உள்ளதால் இவ்வையிரண்டுக்குமிடையில் ஒரு சமநிலையைப் பேணவேண்டியுள்ளது. கூடுதலான கவிதைகளைப் பிரசுரிப்பதற்கு இடவசதி மட்டுப்படுத்துகின்றது. எனவே ஓரளவு தரமாகத் தோன்றுபவற்றை, வேறு சிறந்த கவிதைகளுடன் சேர்த்து பிரசுரிக்கின்றோம். நிஸ்வாவின் ஆர்வத்தை நிறைவேற்றக்கூடிய வகையில் அவரின் கவிதையை வெளியிட இடவசதி இடம் கொடுக்கவில்லை. (அவரின் கடிதமே கவிதையாகி உள்ளது)

பிரபாகரனின் கவிதையை, அதன் உள்ளடக்கம் காரணமாக- ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் குரலாக இருப்பதால்- அழகியல் அம்சக் குறைபாடுகளை பெரிது படுத்தாமல் வெளியிடுகின்றோம்.

சகாதேவன் சுட்டிக்காட்டியுள்ள விடயங்கள் வாசகர்களின் தரத்திற்கேற்ப அருவியின் வளர்ச்சியுடன் உரிய காலத்தில் சேர்த்துக்கொள்ளப்படும். இவை சம்பந்தமான விடயதானங்கள் ஆர்வமுள்ளவர்களிடம் இருந்து வரவேற்கப்படுகின்றது. குறிப்பாக மலையகமக்கள் பிரச்சினை பற்றி இனி வரும் இதழ்களில் கவனமெடுத்துக் கொள்ளப்படும். மலையக எழுத்தாளர்களின் பங்களிப்பை அருவி எதிர்பார்க்கிறது.

**—ஆசிரியர்-**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ராமாயணத்தில் ராமனைப் போக்குக் காட்டி சீதையைக்கவர்ந்து வர மாரீசன் மான் வேடத்தில் அனுப்பப்பட்டான். மானை உண்மையென நம்பி ராமன் தொடர்ந்தான். இறுதியில் அவலக்குரல் எழுப்பி மான் மறைந்தது. திரும்பி வந்து பார்த்தபோது, சீதையையும் இழந்து நின்றான்.

வடக்குக்கிழக்கு இணைப்பைத் துண்டிக்க சிறீனிவாசன் சமஷ்டி என்னும் வடிவில் திடீரென வந்தார். சமஷ்டியை பெரியவரவேற்புடன், யாவரும் ஏற்பதாய்க் கூறினர். இறுதியில் சமஷ்டி மறைந்தது. வடக்குக் கிழக்கு இணைப்பும் நிராகரிக்கப்பட்டது. சிறீனிவாசன் திரும்பவும் லண்டன் பயணமானார். பாராழுமன்றத்தெரிவுக்குழுவின் இறுதிநிலை இப்படித்தான் முடிந்துள்ளது.சமஷ்டி என்ற கழுதை, "இந்திய மாதிரி" (INDIAN MODEL) எனத் தேய்ந்து நிற்கின்றது. கட்டெறும்போ, இந்தியமாதிரி என்று தனக்குப் பெயர் சூட்டியது கூட போலிப்பெயர் தான். உண்மையில் அது சாட்சாத் "இலங்கைமாதிரி"யே தான் என்று கூறிநிற்கிறது.

இந்தியாவில் அரசியலமைப்பு முறை ஒரு சமஷ்டி ஆட்சிமுறையல்ல. அதேவேளை இலங்கையைப்போல் ஒற்றையாட்சியுமல்ல. அது ஒன்றிணைந்த மாநிலங்களின் ஆட்சியமைப்பாகும்(Union of States). இலங்கையின் தமிழர் பிரச்சினைக்கு இநதிய மாதிரியைத் தீர்வாகத் தரமுடியுமென்று தெரிவுக்குழுவின் சிங்களக்கட்சிகள் கூறுவதுகூட எந்தளவு அர்த்தபுஷ்டியானது என்பது ஆரம்பத்திலேயே சந்தேகமாக உள்ளது. இலங்கை தனது அரசியலமைப்புத் திட்டத்தை ஒற்றையாட்சி என்றநிலையிலிருந்து மாநிலங்களின் ஒன்றிணைந்த ஆட்சியமைப்பாக மாற்றத் தயாரா? அப்படியானால் சமஷ்டியை ஏற்படுத்துவதற்கு என்னென்ன தடைக்கற்கள் உள்ளதோ, அதாவது, பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை, சர்வஜனவாக்கெடுப்பொன்றின் மூலமாக மக்கள் அங்கீகாரம் போன்றவை இங்கும் பிரச்சினையாகத்தான் இருக்கும். ஏனெனில் இது ஒரு அரசியலமைப்புத்திட்ட மாற்றம்.

அடுத்து, இந்தியமாதிரி என்று கூறும் போது இந்தியாவின் மாநிலங்கள் மொழிவாரி மாநிலங்களாகும். அப்படியானால் இலங்கையிலும் மொழிவாரிமாநிலங்களாக வகுக்கத்தயரா? அப்படியானால் வடக்குக் கிழக்கு இணைந்த ஒரு மாநிலமாக தமிழ் பிரதேசத்தைக் கருதவேண்டும். ஆனால் சிங்களக்கட்சிகள் வடக்குக் கிழக்கைப் பிரிக்கவேண்டும் என்ற நிலைப்பாட்டையே கொண்டிருக்கின்றன. தெரிவுக்குழுவிலும் அவ்வாறே தெரிவித்துள்ளன. அப்படியானால் இந்திய மாதிரியைத் தருவதாகக் கூறிக்கொள்வதும் இதயசுத்தியானதா?

அடுத்து இந்தியாவில் காணியைப் பொறுத்தமட்டில் அவை மாநில அரசுகளின் அதிகாரத்துக்குட்பட்டவையாக இருந்து, மத்திய அரசுக்குத் தேவைப்படுமிடத்து மாநிலஅரசிடம் கேட்டுப்பெறுவதாக உள்ளது. ஆனால் தெரிவுக்குழுவில் நடந்த காணிசம்பந்தப்பட்ட விவாதத்தில், சிங்களக்கட்சிகள், காணி மத்தியஅரசின் அதிகாரத்துக்குட்பட்டவையாகவே இருக்கவேண்டுமென்று வலியுறுத்தின. இதேபோல் சட்டம் ஒழுங்கை எடுத்துக்கொண்டாலும் இந்தியாவில் பொலிஸ் மாநிலஅரசுகளின் கட்டுப்பாட்டிலேயே இயங்குகின்றது. மத்திய அரசு தனக்குத் தேவையான பொழுது கடமையில் ஈடுபடுத்த ஒரு றிசேவ் படையை வைத்துள்ளது. ஆனால் இங்கு தெரிவுக்குழுவில், சட்டம் ஒழுங்கு பற்றி விவாதித்தபொழுது பொலிஸ் ஒரு ஐ.ஜீ.பி தலைமையில் இயங்க, அந்தந்தமாகாணங்களில் வெவ்வேறு டி.ஐ.ஜி க்களைக் கொண்ட படைப்பிரிவுகள் ஐ.ஜீ.பி யின் நேரடிக்கட்டுப்பாட்டின்கீழ் செயற்படும் என்ற கருத்தையே சிங்களக்கட்சிகள் முன்வைத்தன. இதில் இந்தியாவின் மாநிலப்பொலிசிற்கு ஒத்த மாகாணப்பொலிஸ் என்ற பேச்சிற்கே இடமில்லை. இப்படியிருக்க, எப்படி இந்தியாவின் மாதிரியைப் பின்பற்றி போதுமான அதிகாரங்கள் வழங்கப்படுமென்று மிகஇலகுவாகச் சொல்ல முடிகிறது?

இறுதியில் இணைப்புமில்லை, சமஷ்டியுமில்லை, இந்தியமாதிரியுமில்லை. அப்போ எது? இதுவரை அதிகாரப்பரவலாக்கல் விடயத்தில் தொட்டுப்பார்க்கப்பட்டவை இவையே. இவற்றிலும் ஒரு உடன்பாடான தீர்மானம் எடுக்கப்படவில்லை. அதைவிட இன்னும் பல விடயங்களில் அதிகாரங்கள் பற்றிய பிரச்சினை தீர்க்கப்படவேண்டியுள்ளது. இப்படியிருக்க வெறும் சொற்களைக்கூறுவது அர்த்தமற்றது. உண்மையில் இந்தியமாதிரி என்பதிலாவது அக்கறை இருக்குமேயானால் இந்திய அரசியற்சட்ட நிபுணர்களுடன், இலங்கையில் "இந்திய வகை மாதிரி" யை எப்படிச்செயற்படுத்தலாம் என்று ஆலோசித்து ஒரு வரைவை உருவாக்கிக்கொண்டு பேசுவது உசிதம்.

இப்போது இறுதியாக உள்ள கேள்வி இதுதான். பாராளுமன்ற தெரிவுக்குழுவில் நம்பிக்கை இழந்து போகுமாயின் அடுத்தது என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இனப்பிரச்சினைக்கு தீர்வு

# சமஷ்டிமுறை சாத்தியமானதா?

இலங்கைத் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் இப்போது சடுதியான திருப்பங்கள் தோன்றியுள்ளன. ஒன்று சில தமிழ் கட்சிகள் முதல் முறையாக வடக்குக்கிழக்கு இணைப்பை நிபந்தனையுடன் கைவிட முன்வந்துள்ளன. மறுபுறம் சிங்களக்கட்சிகள் இவ்வளவு காலமும் மறுக்கப்பட்டு வந்த சமஸ்டிக் கோரிக்கையை நிபந்தனையுடன் ஏற்க முன்வந்துள்ளன. ஆனால் இம் மாற்றங்கள் பிரச்சினையைத் தீர்க்க வழி வகுக்குமா என்றால், அதுதான் சிக்கலான விடயமாக உள்ளது.

இணைப்புக் கோரிக்கையைக் கைவிட்டு தமிழ் கட்சி ஒன்றால் முன்வைக்கப்பட்ட முதலாவது முன்மொழிவு – ரெலோ அமைப்பை பிரதிநித்துவப்படுத்தும் சட்டத்தரணி சிறீக்காந்தாவின் முன்மொழிவாகும். இதில் வடக்குக் கிழக்கு இணைப்பைக் கைவிடுவதற்கான மாற்றுநிபந்தனை; இவ்விரு மாகாணமக்களாலும் நேரடியாகத் தேர்தல் மூலம்தெரிவு செய்யப்படும் ஆளுனர் ஒருவரை அங்கீகரிக்க வேண்டும் என்பதுவாகும். இதன் படி இவ்வாறான ஒரு ஆளுனரின் கீழ் வடமாகாணத்திற்கும் கிழக்கு மாகாணத்திற்கும் இருவேறு மாகாணசபைகள் தொழிற்படும். இது இன்றைய ஜனாதிபதி ஆட்சிமுறையினைப்போன்ற மாற்று வடிவமாகும். ஜனாதிபதிக்கும் பாராளுமன்றத்திற்குமான உறவு போன்று ஆளுனருக்கும் மாகாணசபைக்குமான உறவு இருக்கும். ஒரு வித்தியாசம், அங்கு ஒரு பாராளுமன்றம் இங்கு இரண்டு மாகாணசபைகள்.

ஆனால் இலங்கையில் அண்மையில்தான் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிரான எதிர்ப்பு பெரும் பரபரப்பை ஏற்படுத்தி சற்று தணிந்துள்ளது. இவ் வேளையில் ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு ஒத்தஒரு ஆளுனர் ஆட்சியை ஏற்றுக்கொள்ள எதிர்க்கட்சிகள் முன்வருவது சாத்தியமானதல்ல. அத்துடன் இப்படி ஒரு ஆளுனரை மட்டும் வடக்குக் கிழக்குக்குப் பொதுவானவர் ஆக்குவதன் மூலம் வடக்குக் கிழக்கு மக்களின் அபிலாசைகள் எந்தளவிற்கு சட்டப்படும் என்பது தெளிவானதாக இல்லை.

எனினும் இந்த முன்மொழிவு தமிழ் கட்சிகளின் கூட்டத்தில் நிராகரிக்கப்பட்டதால் மேற்கொண்டு தெரிவுக் குழுவின் யோசனைக்கு முன் வைக்கப்படவில்லை. ஆனாலும் இதை அடுத்து வடக்குக்கிழக்கு இணைப்பைக் கைவிட்டு பதிலாக சமஷ்டி ஆட்சியைக் கோரி



சிறீனிவாசன்: வடக்கு கிழக்கு இணைப்பைக் கைவிட்டால் தான் சமஷ்டி ஆட்சிக்கு ஒப்புக்கொள்ளலாம் என்ற நிபந்தனை

முன்வைக்கப்பட்ட இன்னொரு முன்மொழிவுதான், சிறினிவாசன் (பா. உ) வின் முன்மொழிவு.

இது தான் தற்போது மிகுந்த சர்ச்சையை அரசியல்வட்டாரங்களில் ஏற்படுத்தியுள்ளது. காரணம் – இதில் குறிப்பிட்டுள்ள சமஷ்டி ஆட்சிமுறைக்கு சிங்களப் பெரும்பான்மைக் கட்சிகளான ஐ. தே. க வும் சிறீலங்கா சுதந்திரக்கட்சியும் சம்மதித்திருப்பதாகச் செய்திகள் வெளிவந்திருப்பதுதான்.

சமஷ்டி ஆட்சிமுறைக்கான கோரிக்கை செல்வநாயகம் காலம் தொட்டு வலியுறுத்தப்பட்டு நிராகரிக்கப்பட்டு கைவிடப்பட்டுப்போன ஒன்றாகும். 1972இல் சி. சு. க- கம்யூனிஸ்ட் கூட்டரசாங்கத்தினால் புதிதாக வரைவு செய்யப்பட்ட அரசியல் யாப்பு, தமிழ் கட்சிகளின் எதிர்ப்புக்கு மத்தியில் ஒற்றை ஆட்சி முறையை ஏற்படுத்தியதன் பின் அன்றைய சமஷ்டிக் கோரிக்கை எட்டாத ஒன்றாகப் போய்விட்டது. ஆனால் இந்தக்கோரிக்கை முன்னர் பண்டாரநாயக்காவாலேயே வலியுறுத்தப்பட்டிருந்தது. இலங்கை சுதந்திரமடைய முன்னர் டொனமூர் காலத்தில் பண்டாரநாயக்கா இதைப்பற்றிப் பேசியிருந்தார். அவர் கண்டியச் சிங்களவர்க்கும், கரையோரச் சிங்களவர்க்கும், தமிழ் பேசும் மக்களுக்குமாக மூன்று பிரதேசங்கள் கொண்ட சமஷ்டி ஆட்சிமுறை ஒன்றைப்பற்றிப்பேசிவந்தார். ஆயினும் அப்போது இது சேர் பொன் இராமநாதன் போன்றவர்களால் எதிர்க்கப்பட்டது. பின்னர் பண்டா- செல்வா ஒப்பந்த காலத்தில் செல்வநாயகத்தால் வலியுறுத்தப்பட்ட இக்கோரிக்கையின் பேரில் கணிசமான உடன்பாடு காணப்பட்டிருந்தது. எனினும் அவ் ஒப்பந்தத்தில் சமஷ்டி என்ற பதம் நீக்கப்பட்டே இருந்தது. இவ் ஒப்பந்தம் கூட பின்னர் கிழித்து எறியப்பட்டது தெரிந்த ஒன்றே. இவ்வாறு சமஷ்டி என்ற விடயம் பல்வேறு சந்தர்ப்பங்களில், முன்னரும் ஆலோசிக்கப்பட்ட ஒன்றாக இருந்தாலும் அது பெரும்பான்மைக் கட்சிகளுக்கு ஒரு "அலேர்ஜி" ஏற்படுத்தும் விடயமாக மாறிப்போயிருந்தது.

அதனால் தான் சிறீனிவாசனின் சமஷ்டிக் கோரிக்கைக்கு இக்கட்சிகள் சம்மதித்து விட்டன என்ற செய்தி அரசியல் வட்டாரங்களில் ஆர்வத்தைத் தூண்டும் பரபரப்பான செய்தியாக மாறி முக்கிய இடத்தைப் பிடித்துள்ளது. ஆனால் இந்த முன்மொழிவில் வடக்குக்கிழக்கு இணைப்பு கைவிடப்பட்டுள்ளமைதான், தமிழ்கட்சிகளின் பக்கத்தில் அதிருப்தி தரும் விடயம். அத்தோடு இந்தசமஷ்டிக் கோரிக்கையை பெரும்பான்மையினக் கட்சிகள் வார்த்தையளவில் ஏற்றுக் கொண்டாலும் அதை அமுலாக்குவது சாத்தியப்படக் கூடிதா என்பது மற்றய கேள்வி. இதைச் சரியான முறையில் சொல்லப் போனால்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுலாக்க முடியாது என்று தெரிந்துதான். வடக்குக்கிழக்கு இணைப்பைக் கைவிடச்செய்யும் யுக்தியாக இதை அவை அங்கீகரித்தனவா என்ற சந்தேகம்தான் அது. ஏனெனில் இந்த சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்படுத்துவதானால் தற்போதுள்ள ஒற்றை ஆட்சி அரசியல் திட்டத்திற்குள் ஏற்படுத்த முடியாது. அதற்கு அரசியலமைப்புத்திட்டத்தை மாற்ற வேண்டும். வெறுமனே அரசியலமைப்புத்திட்டத்திற்கு திருத்தங்கள் கொண்டு வருவதால் இதைச் செய்ய முடியாது. ஏனெனில் இது அடிப்படைகளில் செய்யும் மாற்றமாகும். எனவே இதற்கு சர்வஜனவாக்கெடுப்பு ஒன்றின் மூலம் இலங்கை மக்களின் பொது அங்கீகாரம் பெறவேண்டும். அத்தோடு பாராளுமன்றத்திலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மையால் இத்திட்டம் அங்கீகாரம் பெறவேண்டும். இக் கோரிக்கை சர்வஜனவாக்கெடுப்பிற்கு விடப்படும் போது நிராகரிக்கப்படுவதற்கான சாத்தியப்பாடுகள் அதிகம். இதற்கு ஏற்றாற் போல் சிறீனிவாசன் அளித்துள்ள முன் மொழிவில் "இலங்கை சமஷ்டி அமைப்பைக் கொண்டிருக்க வேண்டுமா இல்லையா என்ற கேள்வி ஜனநாயகரீதியான சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் இலங்கைமக்களின் தீர்மானத்துக்கு விடப்பட வேண்டும் என்பதுடன் தெரிவுக்குழுவில் பங்குபற்றும் கட்சிகள் இதில் பங்கு பற்றவோ ஆதரவுதிரட்டவோ மாட்டாதென உறுதி அளிக்க வேண்டும்." என வலியுறுத்தப்பட்டுள்ளது. அப்படியானால் சமஷ்டியை ஏற்றுக்கொண்ட கட்சிகள் அதற்கு ஆதரவாகப் பிரச்சாரம் செய்யாது இருக்க, எதிரான சக்திகள் மட்டும் அதற்கு எதிரான பிரச்சாரத்தில் முழுமூச்சாக ஈடுபடும். ஏனெனில் சமஷ்டியை எதிர்ப்பவர்கள் சிறீனிவாசனின் இக் கோரிக்கைக்குக் கட்டுப்படவேண்டிய எந்த அவசியமும் இல்லை. வெளிப்படையாக ஏற்றுக்கொள்வதாகக் கூறியவர்கள்கூட இரகசியமாக எதிராக வேலைசெய்தாலும் எதுவும் செய்வதற்கில்லை. எனவே இந்த நிபந்தனை சர்வஜனவாக்கெடுப்பில் சமஷ்டிக் கோரிக்கைக்கு எதிரான பக்கத்தில் தான் செயற்படும்.

இப்படியான பிரச்சினைகள் இந்த விடயத்தில் உள்ளன. ஆனால் இவற்றையெல்லாம் சமாளித்து ஏதாவது வழியில் சமஷ்டி ஆட்சியை ஏற்படுத்த முடியுமானால் அது மிகவும் வரவேற்கப்படவேண்டிய ஒன்று. இன்று உலகில் முன்னேறிய பல நாடுகளில் இந்த சமஷ்டி ஆட்சிமுறை இனத்துவப் பிரச்சினைகளைத்தீர்த்து முன்னேற்றத்துக்கு வழிகாட்டிய வெற்றிகரமான ஆட்சிஅமைப்பாகத் திகழ்வதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் அவ்வகையான சமஷ்டி ஆட்சியை வழங்கக்கூடியதாக இருந்தால், அதை ஏன் வடக்குக்கிழக்கு இணைந்த பிரதேசத்திற்கு வழங்க முடியாதென்பது இன்னொரு கேள்வி.

இதை இன்னொரு விதத்தில் கேட்பதானால், வடக்குக்கிழக்கு இணைப்பைக் கைவிட்டால் தான் சமஷ்டி ஆட்சிக்கு ஒப்புக் கொள்ளலாம் என்ற நிபந்தனை ஏன் இங்கு அவசியம்?

ஆக மொத்தத்தில் வடக்குக் கிழக்கு இணைப்பைக் கைவிடுவதற்கான ஒரு பேரப்பொருளாக இந்த சமஷ்டி என்ற விடயம் பாவிக்கப்படுகிறதா? இவ் விடயத்தில் தமிழ்கட்சிகளின் தரப்பில் எழுந்துள்ள சந்தேகம் என்னவென்றால் இது தமக்காக விரிக்கப்பட்ட வலையாக இருக்குமோ என்பதுதான். முதலில் வடக்குக்கிழக்கு இணைப்பைக் கைவிட்டால் சமஷ்டி தரலாம் என்பார்கள். அதை நம்பி ஒப்புக்கொண்டால் பின்னர் சர்வஜன வாக்கெடுப்பிற்கு விடும்போது அது தோற்கடிக்கப்பட "நாம் என்ன செய்வது மக்கள் தீர்ப்பு அது" என்று

## சிறீனிவாசனின்
# நடைமுறைச்சாத்தியமான(?) ஒரு தீர்வு!

1. ஒற்றையாட்சித்தன்மையுடைய சிறீலங்கா அரசியலமைப்பு சமஷ்டி முறைக்கு மாற்றப்பட வேண்டும். - அதற்கு முன்னிபந்தனையாக தெரிவுக்குழுவில் பங்குபற்றும் சகலகட்சிகளும் ஸ்ரீலங்கா சமஷ்டி அமைப்பை கொண்டிருக்க வேண்டுமா இல்லையா என்பதை மக்கள் தீர்மானிக்க நடைபெறும் ஜனநாயகமுறையிலான சர்வஜன வாக்கெடுப்பில், பங்குபற்றவோ அல்லது பிரச்சாரத்தில் ஈடுபடவோ மாட்டோமென உறுதி கூறவேண்டும்.

2. வடக்குக் கிழக்கு மாகாணங்கள் ஒவ்வொன்றும் அதிகாரப் பரவலாக்கத்திற்கான தனித்தனியான அலகுகளாக (பகுதிகளாக) கருதப்பட வேண்டும்.

3. ஒவ்வொரு பகுதிக்கும் எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அதிகூடிய அதிகாரங்கள் பரவலக்கப்படவேண்டும்.

4. அதிகூடிய அதிகாரத்தைக்கொண்ட அடி (கீழ்) மட்ட இனஅடிப்படையிலான ஸ்தாபனங்களை உருவாக்க, எல்லைகளை வரையறுப்பதற்காக எல்லைக்கமிஷன் ஒன்று வரையறுக்கப்படவேண்டும்.

5. அவ்வாறான கீழ்மட்ட ஸ்தாபனங்களின் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்தில், முடியுமான வரையில் அதேஇன சமூகத்தைச் சேர்ந்த மக்கள், மற்றும் அவர்களின் குடியிருப்பு, விவசாய மற்றும் கால்நடைவளர்ப்பு நிலையங்கள் ஆகியவற்றின் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

6 ஒவ்வொரு பகுதியிலும் முஸ்லீம்களின் பாதுகாப்பிற்கான விசேட ஒழுங்குகள் செய்யப்பட வேண்டும்.

7. ஒவ்வொருகுறித்த பகுதியிலும் உள்ள அரசின் தரிசுநிலங்களை அப்பகுதி இருக்கும் பிரதேசத்தில் வாழும் வெவ்வேறு சமூகங்களிடையே, அவர்களின் குடிசனப்பரம்பலுக்கேற்ப பகிர்ந்தளிப்பதற்கான நிலக்கமிஷன் ஒன்று அமைக்கப்படவேண்டும்.

8. ஒவ்வொரு பகுதியிலும் 1971ம் ஆண்டு இருந்த இனப்பரம்பல் நிலையில் மாற்றம் இல்லாது வைத்திருக்க ஆவன செய்தல் வேண்டும். நடந்து முடிந்த குடியேற்றங்களை ஏதோ ஒருவகையில் அப்புறப்படுத்தாமலும் வைத்திருக்க ஆவண செய்தல் வேண்டும்.

9. நிலப்பங்கீட்டின் போது, எங்கெல்லாம் மக்கள் தமது இடத்தில் இருந்து பெயர்ந்துள்ளனரோ அவர்களுக்கு முன்னைய நிலங்கள் மீளவும் அவர்கள் வசம் செல்வதற்கு உத்தரவாதம் இருத்தல் வேண்டும்.

10. மேற் கூறப்பட்ட நிலப்பங்கீட்டுக்கொள்கைகள் சகலமாவட்டங்களிலும் குறிப்பாக அம்பாறை உட்பட ஒவ்வொரு அதிகாரப்பரவலாக்கப் பகுதிகளுக்கும் நடைமுறைப்படுத்தும் அதே வேளை மிகுதியாக வரும் முன்னைய அம்பாறைத் தேர்தல்தொகுதியின் நிலப்பரப்பு மொனறாகலை மாவட்ட எல்லைகளுடன் இணைக்கப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைவிரிப்பார்கள். இப்போது வடக்குக்கிழக்கு இணைப்பையும் கைவிட்டு சமஷ்டியும் கிடைக்காமல் நாம் நிற்போம். இது தான் அவர்களின் திட்டமாக இருக்குமோ என்பது தான் அந்தச் சந்தேகம்.

இது இவ்விதமிருக்க,சமஷ்டிக்கோரிக்கைக்கு இந்தக்கட்சிகள் சம்மதித்து விட்டதாக செய்தித்தொடர்புச் சாதனங்கள் பெரிய விளம்பரப்படுத்தியுள்ள போதும், இந்த வாக்குறுதிகள் எவ்வளவு தூரம் வலிதானவை என்ற சந்தேகமும் இப்போது தலை தூக்கத்தொடங்கியுள்ளது. ஏனெனில் அவை இரு பெரும்பான்மைக்கட்சிகளினதும் தலைமைப் பீடங்களால் இன்னமும் உத்தியோக பூர்வமாக உறுதிப்படுத்தப்படவில்லை. பாராளுமன்ற தெரிவுக்குழுவில் அதன் தலைவரும், சி. சு. க உறுப்பினருமான மங்களமுனசிங்க தனக்கு, சி. சு. க இன் தலைவி சிறீமாவோ பண்டாரநாயக்கா இச் சம்மதத்தைத் தெரிவித்ததாகத் அறிவித்திருந்தார். அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீத் ஐ. தே. க வின் சார்பில் இதற்கு சம்மதிப்பதாக தெரிவித்திருந்தார். ஆனால் இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடந்த விருந்தொன்றில் இந்தியப்பத்திரிகையாளருக்கு அளித்த பேட்டியில் திருமதி பண்டாரநாயக்கா, அப்படித் தான் கூறவில்லையென மறுத்துள்ளார்.

ஆனால் சிறீனிவாசன் (பா. உ) நம்பிக்கை தளராமல் உள்ளார். அவர் தனது திட்டங்கள் வெற்றி அளிக்குமென்றும் எம்மைப் பொறுத்திருந்து பார்க்கும்படியும் கேட்கிறார். ஆம் பொறுத்திருப்போம். அதை விட நாம் எதைச்செய்வது? ◘

### தொண்டமான்

# நான் சமஷ்டிக்கு எதிரானவனல்ல.

**இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக சிறீனிவாசன் (பா.உ) முன்வைத்திருக்கும் தீர்வுதொர்பாக இ. தொ. கா வின் கருத்தை தொண்டமான் தெரிவுக்குழுவில் முன்வைத்துள்ளார். அது முழுமையாகக் கீழேதரப்பட்டுள்ளது.**

அரசியலின் சாராம்சம் சாத்தியப்பாடானவற்றைக் கையாளும் நுட்பமே! அசாத்தியமானவற்றைப் பற்றிப் பேசி நேரத்தை விரயமாக்குவது பொதுமக்களை முட்டாளாக்கிக் குழப்புவதாகவே இருக்கும். சந்தேகத்துக்கிடமான சமஷ்டிவார்த்தைகளால் மூடி மறைத்த வடக்குக் கிழக்கு மாகாணங்களுக்கான இரு கவுன்சில் சூத்திரம் ஒருவரையும் ஆர்கசிக்கப்போவதில்லை. தமிழ்மக்களின் அரசியல் சாதுரியத்தைப்பற்றி அறிந்திராதவரே சமஷ்டிமுறையையும் சமஷ்டி அலகைத்துண்டாடுவதையும் போட்டுக் குழப்புவார்கள். திரு சிறீனிவாசனால் முன்வைக்கப்பட்டுள்ள சமாதானச்சூத்திரம் காத்திரமான எதையும் கொண்டிருக்கவில்லை என்பதை நான் வெளிப்படையாகவே கூற விரும்புகின்றேன். மக்களின் உணர்வு நிலைகளை இனம் கண்டுகொள்ளும் போது அல்லது அவர்களிடம் இருந்து ஆணையைப்பெற்ற பின்னரே ஒரு அரசியல்வாதி ஒரு கருத்தை முன்னெடுத்தல் வழக்கமாகும். இவை இரண்டும் இல்லாதவிடத்து சிறீனிவாசனின் இரு கவுன்சில் தீர்மானம் அரசியல் பூர்வமற்றதாகும். அது எவ்வித அங்கீகாரமோ அல்லது எதுவித மதிப்போ உடையதானதல்ல. அதனை ஆராய்வதற்கு கூட அதில் எந்தவித உள்ளடக்கமும் இல்லை. அதனை நிராகரிக்கவேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அது தானாகவே வலுவிழக்கிறது. இலங்கைமக்களின் அங்கீகாரத்துடன் சமஷ்டி அரசியல் அமைப்பை அமுல்செய்யவேண்டும் என்று. இவ்வா



றான இலகுவான வழிகள் இருக்குமானால் 1949இல் இருந்து, அதாவது சமஷ்டிக்கட்சி உருவாகிய காலத்தில் இருந்து, இதற்காக ஏன் போராடி இருக்க வேண்டும்? 1970,1972 இல் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்ட போது, 1977, 1978இல் இன்றைய அரசியலமைப்பு எழுதப்பட்டபோது இது கவனத்தில் எடுத்துக் கொள்ளப் படவில்லை. சிறீனிவாசன் போன்ற ஒருவர் இப்படியான தீர்வு ஒன்றைக்கண்டுபிடிக்காததன் காரணமாகவா கடந்த 15 வருடமாகப் பிரிவினைப் போர் நடைபெறுகின்றது? மக்களால் சர்வஜனவாக்கெடுப்பில் அங்கீகரிக்கப்பட்டு, பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையைப் பெற்று சமஷ்டி முறையை அமுல்படுத்துவதால் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்பதனைக்கூறுவதற்கு ஓர் வெளிநாட்டில் வதியும் இலங்கையர் வரும்வரை எமது நாடு மூச்சுத் திணறிகொண்டிருந்ததா? என்னைப்பொறுத்தவரை சமஷ்டி முறையே சிறுபான்மையினரின் உரிமையைப் பாதுகாக்ககூடிய ஓர் சிறப்பான முறையாகும். எனவே நான் எந்தவகையிலும் சமஷ்டி முறைக்கு எதிரானவனல்ல. ஆனால் ஒருவர் அரசியலமைப்பு வரையறைகளையும், அரசியல் யதார்தத்தையும் கவனத்திற் கொள்ள வேண்டும். அரசியலமைப்பின் ஷரத்து- 2 இலங்கை ஒற்றைஆட்சி எனக்கூறுகின்றது. ஷரத்து 83 இன்படி இதனைமாற்ற மக்கள் அங்கீகாரத்தையும், பாராளுமன்றத்தில் 2/3 பெரும்பான்மையையும் பெறவேண்டும் எனக்கூறுகின்றது. இத்தகைய ஓர் சீர்திருத்தத்தை பாரா ளுமன்றத்தால் முன்னெடுக்கவோ, சர்வ ஜனவாக்கெடுப்பில் ஆதரவைப் பெறவோ முடியாத தொன்றாகவே நான் கருதுகின்றேன். அரசாங்கமும் எதிர்க்கட்சியும் மனப்பூர்வமாக விரும்பினாலன்றி சமஷ்டி முறை பற்றி பிரஸ்தாபிப்பதே வீண்வேலையாகும். இலங்கைத் தமிழருக்கு சிறீனிவாசனின் "அதிபுத்திசாலித்தனமான" நடைமுறைசாராந்த தீர்வு சிரிப்பிற்கிடமானதாகும். அரசியல்சாதுரியமின்மை காரணமாக தமிழர்களின் உரிமை மறுக்கப்படலாம். ஆனால் அவர்களின் மீது குதிரைச்சவாரி விடமுனைவது எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது. அது கண்டிக்கத்தக்கதாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வடக்குக்கிழக்கு இணைப்பைக் கைவிடுவதற்கு ஒரு பேரம்?

# பாராளுமன்ற தெரிவுக்குழு நாடகம்.

பாராளுமன்றத்தெரிவுக்குழு ஏறத்தாழ இப்போது ஒரு முடிவுநிலையை எய்தியுள்ளது. இலங்கைப்பிரச்சினையில் அக்கறைகொண்ட உலகத்தோரும் இலங்கைமக்கள் யாவரும் இந்தத் தெரிவுக்குழுவின் முடிவை மிகஆவலோடு எதிர்பார்த்திருந்தனர். ஆனால் இச் செய்தியை ஒரு மகிழ்ச்சிகரமான செய்தியாக அறிவிக்க முடியாமைதான் எல்லாவற்றிலும் ஏமாற்றகரமானது. ஏனெனில் இத்தனை பிரதாபங்களுக்கு மத்தியிலும் பெருந்தன்மை, கூட்டுணர்வு, ஒருமித்த கருத்து, விட்டுக்கொடுப்பு, சகவாழ்வு என்ற வார்த்தைகளின் அளவுகணக்கற்ற பிரயோகங்களின் பின்பும் மீண்டும் வந்து கதவைத்தட்டி நிற்பது பழைய குருடிதான். இந்தப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கு டின் இருந்த ஒரேயொரு அரசியல் அடிப்படை 13ம் திருத்தச் சட்டமான மாகாணசபைத் திருத்தச்சட்டம். அதாவது இந்திய இலங்கை ஒப்பந்தம். இன்று அதிலிருந்து சிறுஅடி தன்னும் முன்னே செல்லாத நிலையில், மாறாக அதில் தொத்துப்பறிநிலையில் விடப்பட்டிருந்த வடக்குக் கிழக்கு இணைப்பு என்பதையும் முறித்து விடுகின்ற கைங்கரியத்தோடு சபையை முடிவுக்கு கொண்டுவருகின்ற போக்கைத்தான் உண்மையில் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் சமஷ்டி அமைப்பு முறைபற்றி அண்மையில் பரபரப்பாக காட்டப்பட்ட ஆர்வம் பலருக்கு இலங்கை அரசியற் போக்கில் ஏதோவொரு குணாம்சரீதியான மாற்றம் ஏற்படுகின்றதோவென்ற மெல்லியதோர் நம்பிக்கையைக் கூட ஏற்படுத்தியிருக்கலாம். என்னும் வெளியே பத்திரிகைகள், தகவல் தொடர்புச்சாதனங்கள் தூக்கிவந்த செய்திகள் சித்தரித்ததற்கு முற்றிலும் மாறாக, உள்ளே அடிமனதில் இந்தக் கருத்திற்கு எந்தவிதமான சிறப்பார்த்தமும் இருந்ததாகத் தெரியவில்லை. இது தெரிவுக்குழு இறுதியாக சமஷ்டிபற்றி எடுத்த தீர்மானத்தில் வெளிப்படையாகிவிட்டது.

இங்கே 1½ வருடமாக பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணலாம் என்று நம்பி, தெரிவுக்குழு பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட தமிழ்கட்சிகள், இறுதியில் விரக்தியடைந்த நிலையில் கூட்டாக வெளியிட்ட அறிக்கையை கீழே தருகின்றோம்.

பாராளுமன்றத்தெரிவுக்குழுவில், மீண்டுமொருமுறை தமிழ்மக்களின் அபிலாசைகள் மறுக்கப்பட்டமையால், நாம் இப் பா. தெ. குழுவில் நடந்தவற்றை மிகுந்தமனவருத்தத்துடன் வெளியில் சொல்லவேண்டிய நிர்ப்பந்தத்துக் குள்ளாகியுள்ளோம். 1992 மார்கழி 11 அன்று பா.தெ.குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகள் பெரும்பான்மை வாக்குக்களின் அடிப்படையில் எடுக்கப்பட்டவையேயன்றி தமிழ் சிங்கள கருத்தொருமைப்பாட்டின் அடிப்படையில் எடுக்கப்பட்டவையல்ல. எனவே, இது திரும்பவும் இழைக்கப்பட்ட நம்பிக்கைத் துரோகம் என மீண்டும் வலியுறுத்துகின்றோம். இந்தப் பா.தெ.குழுவின் செயற்பாடுகள் யாவும் வெறும் கண்துடைப்பே.

1991ம் ஆண்டு இநத பா.தெ.குழு ஆரம்பித்த நாளில் இருந்து ஒழுங்கற்று, அது நீண்ட இடைவெளிகளுடன் இடைக்கிடை கூட்டப்பட்டு, அப்போதும் கூட கூட்டத்தை நடத்த தேவையான குறைந்தபட்ச உறுப்பினர்களின் எண்ணிக்கையை ஈட்டுவதே சிரமமானவாறு நடந்து வந்தது. இது எமக்கு மத்தியில் இப் பா.தெ.குழு விற்கு தமிழர் பிரச்சினையைத் தீர்க்கும் ஆர்வம் இல்லையோ என்ற ஐயப்பாட்டை ஆரம்பத்திலேயே தோற்றுவித்திருந்தது. ஐ.தே.க வும் (அரசாங்கமும்). சிறீலங்கா.சு.க வும் (எதிர்க்கட்சியும்) தீர்வுக்கான எந்த முன்மொழிவுகளையும் முன்வைக்க மறுத்ததன் மூலம் இந்த சந்தேகங்கள் ஊர்ஜிதப்படுத்தப்பட்டது. இருந்தாலும் நாம் தனியாகவும் கூட்டாகவும் முன்மொழிவுகளை வைத்தோம். பேச்சுவார்த்தைக் கூடாக தீர்வைக்காணும் இந்த நேர்மையான முயற்சிகளின் விளைவாக, 7 தமிழ்க்கட்சிகளும், இ.தொ.காவும் தற்போது நான்கம்சக்கோரிக்கையென அழைக்கப்படும் ஆவணமொன்றை பா.தெ.குழு முன் ஆனி 92 இல் சமர்ப்பித்தனர். இத்துடன் நில்லாமல், பா.தெ.குழுவில் அங்கம் வகிக்காத கட்சிகளுடனும், அங்கம் வகிக்கும் கட்சிகளுடனும் சந்தித்து இக் கோரிக்கையை விளக்கி ஆதரவு தேடினோம். இந்த நான்கம்சக் கோரிக்கையை எந்த [illegible] நிராகரிக்கவில்லையென்பதையும் இவ்விடத்தில் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

பத்திரிகை மற்றும் தகவல்தொடர்புச் சாதனங்களால் பெரும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்ட இந்த நான்கம்சக் கோரிக்கை, 92 ஆனி 17 இல் தெ.குழுவிற்கு கையளிக்கப்பட்டது. இருந்தாலும் இந்த நான்கம்சக்கோரிக்கையை புறக்கணித்துவிட்டு தெ.குழுவின் தலைவர் ஒரு கருத்துப் பத்திரத்தை (Concept paper) சமர்ப்பித்தார். அதை நாம் நிராகரித்து எமது நான்கம்சக் கோரிக்கையை வலியுறுத்தினோம். இதையடுத்து நீண்ட இடைவெளிக்குப்பின் மாற்றுப் பத்திரமொன்றை (Option paper) சுற்றுக்கு விட்டார். இவ் வறிக்கையை சமர்ப்பிக்க முன்னர், குழுவின் தலைவர், தமிழர்விடுதலைக்கூட்டணி அங்கத்தவர்களுடன் 7.10. 1992 இல் கலந்துரையாடல் ஒன்றை நடத்தினார். இக் கூட்டத்தில் திருவாளர்கள் ரணில் விக்கிரமசிங்க, ஏ.சி.எஸ். ஹமீட், சந்திரா ரணதுங்க, ஹரேந்திரக் கொரியா, அனுரா பண்டாரநாயக்கா, லச்ஷ்மன் ஜெயக்கொடி, ஹலீம் ஈஷாக், ஏ.எச்.எம். அஷ்ரஃப் ஆகியோர் பிரசன்னமாகியிருந்தனர். இக் கூட்டத்தில் முன்மொழியப்பட்ட பிராந்திய சபைகளுக்கு கணிசமான சட்டவாக்கங்கள், நிறைவேற்றதிகாரங்கள் அளிக்கப்படுமென உறுதியளித்தார். இதே போன்று வாக்குறுதிகள் வெவ்வேறு பேச்சுவார்த்தைகளின் போது ஈ.பி.ஆர்.எல்.எஃவ் இற்கும், புளொட் அமைப்பிற்கும் அளிக்கப்பட்டிருந்தது. ஆயினும் இந்த மாற்றுப்பத்திரம் சுற்றுக்கு விடப்பட்டபோது எமக்கு வாய்மூலம் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கும் அதற்கும் பெருமளவு வேறுபாடுகள் இருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தோம். இது எமக்கு அதிருப்தியைத் தந்தபோதிலும், தமிழ்க்கட்சிகளாகிய நாம் மீண்டுமொரு முறை மாற்றுப்பத்திரத்துக்கான பதிலை 92.ஐப்பசி.21ம் திகதி சமர்ப்பித்தோம்.

அதன் பின்பு சம்பவங்கள் மிக விரைவாக நடந்தேறின. ஒரு புறம் தெ.குழு தீர்வுக்கான முழுமுயற்சியில் ஈடுபட்டிருக்கின்ற தோற்றப்பாட்டை தமிழ்மக்களுக்கு காண்பித்துக்கொண்டு அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேளை திரைமறைவில் தமிழ்மக்களின் நலன்களுக் கெதிராக விடயங்களை வடிவமைக்க முயற்சிகள் மேற்கொள் ளப்பட்டன.

இவ்வேளையில்தான், பாராளுமன் றத்திலோ, தெ.குழுவிலோ மிக அரிதாகப் பிரசன்னமாகின்ற ஒரு பிரமுகர் திடீரென தெ.குழு முன் மார்கழி 16ம் திகதி தோன்றி 10 அம்சத் திட்டமொன்றை முன்வைத்தார். அதுவே சிறீனிவாசன் முன்மொழிவுகள் என இப்போது அழைக் கப்படுகின்றது.

1991ம்ஆண்டு புரட்டாதிமாதம் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு விசுவாசம் தெரிவித்து, கூட்டறிக்கை விடுத்த நான்கு தமிழ்பேசும் பா.உறுப்பினர்களில் ஒருவரான இவர், இதற்காக ஈ.என்.டீ.எல்.எஃவ் இலிருந்து நீக்கப்பட்டவர் என்பதை மறத்தலாகாது.

இலங்கையின் ஒற்றையாட்சி முறையை சமஷ்டி அமைப்பு முறையாக மாற்றுவதும் வடகிழக்கு மாகாணங்கள் இரு தனித்தனி மாகாணங்களாக இருக்க வேண்டுமென்பதுவே இவரின் யோசனையின் முக்கிய அம்சங்களாகும்.

இவருடைய யோசனைகள் பா.தெ.குழுவில் விவாதிக்கப்படுமுன்பதாகவே, ஏ.சீ.எஸ். ஹமீட் அவர்கள் கார்த்திகை 21ம் திகதி முஸ்லீம் பாராளுமன்ற உறுப்பினர்களைக் கூட்டி சிறீனிவாசனின் முன்மொழிவுகளுக்கு ஆதரவைப் பெற்றுக்கொண்டார். இம் முன்மொழிவுகளுக்கு ஒரு அங்கீகாரத்தை அளிப்பதாகவும், அதேநேரத்தில் கூட்டணி முஸ்லிம்காங்கிரசுடன் 4 அம்சக்கோரிக்கையின் அடிப்படையில் நடத்திவந்த பேச்சுவார்த்தைகளைக் குழப்புவதாகவுமே இது அமைந்தது.இதன் பின் கார்த்திகை 21ம்திகதி கூடிய தெ.குழுவின் கூட்டத்தில், மங்களமுனசிங்க, தமக்கு திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கா தொலைபேசிமூலம் சிறீனிவாசனின் முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்வதாக இரு முறை கூறியதாக அறிவித்ததார். இவ் அறிவித்தலைத்தொடர்ந்து, சு.கட்சியின் நிலைப்பாடு அதுவானால், ஐ.தே.கட்சியும் சிறீனிவாசனின் முன்மொழிவுகளை ஏற்றுக்கொள்வதாக ஐ.தே.கட்சி சார்பில் ஏ.சீ.எஸ்.ஹமீட் கூறினார். திரைமறைவில் தமிழ்மக்களின் நலன்களுக்கெதிராக முன்கூட்டியே திட்டமிட்டுச் செயற்படுவதை இத்திடீர்த் திருப்பங்கள் காட்டின.

இதையடுத்து ஐ.தே.க, சு.க யினது உத்தியோகபூர்வ நிலைப்பாடுகள் இதுதானா என்று கூட்டணி, ஈ.பி.ஆர். எல்.எஃவ் கட்சிகள் கேட்டபோது, தலைவர் அடுத்த கூட்டத்தில் எல்லாக் கட்சிகளும் தங்கள் நிலைப்பாடுகளைத் தெரிவிக்கும்படி கூறினார்.

அன்று மாலையே திருமதி பண்டாரநாயக்கா, தான் சமஷ்டி ஆட்சி யை ஏற்றுக்கொள்ளப்போவதில்லை என சில இந்தியப் பத்திரிகையாளர்களுக்கு கூறிவிட்டார். அதைத் தொடர்ந்து ஐ.தே.கவும் சு.கவும் தெரிவுக்குழுவில் ஏற்படும் பொதுக்கருத்துக்கு தாம் உடன் படுவ 'தாக பத்திரிகை அறிக்கைமூலம் தெரிவித்தனர். இவ் அறிக்கைகளில் சமஷ்டி ஆட்சிமுறை பற்றியோ அல்லது



மங்கள முனசிங்க:
(பா. தெ. குழு தலைவர்)

அதற்கான அலகைப் பற்றியோ ஒன்றுமே கூறப்படவில்லை. இவர்களின் இவ் முன்னுக்குப்பின் முரணானான அறிக்கைகளாலும், சிங்களக்கட்சிகள் சமஷ்டி ஆட்சிமுறையை ஏற்றுக்கொண்டு விட்டார்கள் என்று உள்நாட்டு வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களின் வியாக்கியானங்களாலும் ஏற்படுத் தப்பட்ட குழப்பத்தின் மத்தியில் மார்கழி 3ம் திகதி மீண்டும் தெ.குழு கூடியது. இதில் தான் அரசியல்கட்சிகள் யாவும் தமது உத்தியோகபூர்வ நிலைப்பாட்டை வெளிப்படுத்துவதாக இருந்தது. ஆனால் தமிழ்க்கட்சிகளைத் தவிர ஏனையகட்சிகள் எதுவுமே தமது நிலைப்பாடுகளைத் தெரிவிக்கவில்லை. இக் கூட்டத்தில் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எஃவ் பிரதிநிதிகள் சமஷ்டி ஆட்சி பற்றி ஐ.தே.கவின் கருத்து என்னவென்று கேட்டபோது, சமஷ்டியென்பது வடக்குக்கிழக்கு இணைப்பைக் கைவிடுவதற்கான பேரம் என்று ஹமீற் கூறினார்.

ஒரு முடிவொன்றை தெ.குழு மீது திணிப்பதற்கும் அன்றே தெ.குழுக் கூட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதிலும் திட்டம் போடப்பட்டிருந்தது தமிழ்க்கட்சிகளின் பிரதிநிதிகளுக்குத் தெளிவானது. அதையறிந்த தமிழ்க் கட்சிகள், 4 அம்சத்திட்டத்தை மீண்டும் பரிசீலனைக்கெடுக்கும்படி வற்புறுத்தின. இதனால் மிகுந்த தயக்கத்துடன் விவாதத்திற்கு எடுத்துக்கொண்ட போதிலும் அதிகாரப் பரவலாக்கத்திற்கான அலகு எது என்பதுபற்றிய விவாதத்தை ஒத்திவைத்து.

அடுத்த இரு கூட்டங்களிலும் காணி, சட்டம் ஒழுங்கு ஆகிய இருவிடயங்களும் விவாதிக்கப்பட்டாலும் ஒரு முடிவும் எட்டப்படவில்லை. உதாரணமாக சமஷ்டியைப்பற்றி பெரிதாக முன்னர் கூறிவிட்டு, இன்று இந்திய மாதிரியைப்பற்றிக் கூறுபவர்கள் எல்லா அரசநிலங்களும் மாகாணசபைகளின்கீழ் வரவேண்டுமென்ற கோரிக்கையை விளங்கிக் கொள்ளாதது மட்டுமன்றி முற்று முழுதாக நிராகரிக்கின்றனர்.

இதன்பின் அதிகாரப்பரவலாக்க அலகைப்பற்றி விவாதிப்பதற்கு கூட்டம் மார்கழி 11ம் திகதி பிற்போடப்பட்டது. இக்கூட்டத்தில் 4 அம்சக்கோரிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படாமல் எதிர்பாராதவாறு சிறீனிவாசனின் முன்மொழிவின் இரண்டாவது பந்தி விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அது தற்போது இணைந்துள்ள வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்பை துண்டிப்பதற்கான யோசனையாகும். இதற்கு ஆம் அல்லது இல்லைஎன்ற பதிலைக்கூறுமாறு தெ.குழுவின் தலைவர் கேட்டார். இ.தொ.கா, மற்றும் தமிழ்க்கட்சிகள் தவிர்ந்த ஏனையகட்சிகள் ஏற்றுக்கொண்டன. இதையடுத்து கூட்டணி, ஈ.பி.ஆர்.எல். எஃவ் பிரதிநிதிகள் சிறீனிவாசன் முன்மொழிவின் 1ம் பந்தியில் குறிப்பிட்டுள்ளபடி ஒற்றையாட்சி முறையை மாற்றி சமஷ்டி ஆட்சிமுறையை அமைக்கும் யோசனைக்கு சம்மதிக்கின்றீர்களா என ஏனையகட்சிகளை வினவினர். இதற்கு சமஷ்டி முறைக்கு ஒருதேவையே இல்லை, இன்றைய சூழ்நிலையில் அதற்குச் சாத்தியமும் இல்லை, அத்துடன் அது யதார்த்தத்திற்குப் புறம்பானது, இந்தியமாநிலங்கள் அனுபவிக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைக்குச் சமமானதை உங்களுக்கு நாங்கள் தருவோம் எனக் ஹமீட் கூறினார். சு.கட்சியும் இந்த நிலைப்பாட்டை ஏற்றுக்கொண்டது. ஐ.தே.கவும் சு.கட்சியும் ஒரு சில நாட் களுக்குள்ளாகவே சமஷ்டி சம்பந்தமான தமது நிலைப்பாட்டை கைவிட்டு விட்டார்களென்று தமிழ்க்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்தனர். இவ் எதிர்ப்புக்கு மத்தியில் ஒரு இடைக்கால அறிக்கையை சமர்ப்பிக்கப்போவதாக தெ.குழுவின் தலைவர் கூறினார்.

தமிழ்மக்களின் பிரச்சினையை நேர்மையாக அணுகி அதற்கு ஒரு நியாயமான தீர்வைக்காண, சிங்களக்கட்சிகள் மீண்டும் ஒருமுறை தவறிவிட்டன என்பதையே மேற்குறிப் பிட்ட சம்பவங்கள் காட்டுகின்றன. ஐ.தே. க வின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாப னத்தில் குறிப்பிட்டிருந்தபடி, வடக்குக் கிழக்கு இணைப்பை ரத்துசெய்வதாகக் கூறிய வாக்குறுதியை நிறைவேற்றவே தெரிவுக்குழுவின் சகல நடவடிக் கைகளும் திட்டமிடப்பட்டிருந்தது என்பது இப்போது தெளிவாகின்றது. இது சுதந்திரக்கட்சிக்கும் ஏற்புடைய தாகவே இருந்தது. இவ்விரு கட்சிகளாலும், இந்த முடிவுகளை எய்துவதற்காக காட்டப்பட்ட மாயமான் தான் இந்த சமஷ்டியாகும். பா.தெ.குழுவின் முழுநடவடிக்கையின் பொழுதும் அக்கறையிக்க கலந்தாலோசனை எதுவும் நடக்கவில்லை. ஐ.தே.க அல்லது சு.க வின் பக்கத்தில் விட்டுக்கொடுப்பிற்கானஎந்த அறிகுறியும் இருக்கவில்லை. நிட்சயமாக தமிழ்க்கட்சிகளுடன் எந்தவிடயத்திலாவது கருத்தொருமைப்பாடு ஏற்படவில்லை. கலந்தாலோசனை என்பது வெறுமனே திசைதிருப்பலாகவும் , விட்டுக்கொடுப்புகள் நேரடியான நேர்மையற்ற ஏமாற்றல்களாகவும் அமைந்ததை வரலாறு நிட்சயப் பதிவு செய்யும்.

அத்துடன் இங்கு சுட்டப்பட்ட கருத்தொருமைப்பாடு என்பது நீண்டகாலமாக வேதனைகளை அனுபவித்து வரும் தமிழ்மக்கள் மீது மேற்கொள்ளப்பட்ட சிங்களக்கட்சிகளின் குறுகிய இனவாதக் கண்ணோட்டத்தின் ஒருபக்கச் சார்பான திணிப்பேயன்றி வேறொன்றுமல்ல.

14.12.1992

இவ்அறிக்கையில் கையொப்பமிட்ட கட்சிகள்–

TULF, EPRLF, PLOT, ENDLF, EROS, ACTC

# புதிய அகதிகள் குடிவரவுச்சட்டத்திற்கு கனடாவில் எதிர்ப்பு.

கனடாவின் குடிவரவுச்சட்டத்தில் பல பாதகமான மாற்றங்களை கொண்டு வரும் மசோதா (Bill 86) இற்கு பலமான எதிர்ப்பு அங்கு கிளம்பியுள்ளது. தொழிற்சங்கங்கள், வழக்கறிஞர்கள் தேவாலயங்கள், திருச்சபைகள், மனித உரிமை அமைப்புகள், குடிமக்கள் சேவை மன்றங்கள் என்று பல துறைகளில் இருந்தும் இவ் எதிர்ப்பு கிளம்பியுள்ளது. ஒன்ராறியோவில் உள்ள 40 க்கும் மேலான பொது அமைப்புகள் இணைந்து மசோதாவின் பாதக விளைவுகளை மக்களுக்கு எடுத்துச் சொல்வதற்கென கூட்டமைப்பொன்றினை "நீதியான அகதிகள் மற்றும் குடிவரவுக் கொள்கைகளுக்கான கூட்டமைப்பு" என்ற பெயரில் அமைத்துள்ளனர். மேற்படி கூட்டமைப்பின் எதிர்ப்பு நிகழ்ச்சி ரொரன்ரோவில் பிரதமர் மல்ரோனியின் கொன்சவேட்டிக்கட்சி அலுவலகத்தின் முன்னால் நடைபெற்றது. Kill Bill C86 என்று சுலோக அட்டைகளுடனும் பதாகைகளுடனும் நூற்றுக்கணக்கானோர் இரண்டு மணிநேர ஆர்ப்பாட்ட நிகழ்ச்சியில் பங்குபற்றினர். இதற்கு முன்னரும் வெகுஜன தொடர்புச்சாதனங்களின் மகாநாடொன்றினை இக் கூட்டமைப்பினர் நடத்தி இம்மசோதாவின் பாதகமான தன்மைகளை எடுத்துக்கூறினர். பின்னர் ரொறன்ரோ குயின்ஸ் பார்க்கிலும் இதையிட்டு ஒரு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இம்மசோதாவைக் கொண்டு வந்த அமைச்சர் திரு. வால்ட் கூட் அகதிகள் கனடாவின் அகதிக்கொள்கையைத் துஷ்பிரயோகம் செய்பவர்கள் என்று நாடாளுமன்றத்தில் கூறியுள்ளதுடன், பத்திரிகைப் பேட்டி ஒன்றில் தனது மனப்பாங்கைப் பின்வருமாறு வெளிப்படுத்தினார். "அகதிகளை அவர்களது சொந்த ஊருக்கோ அல்லது எவ்வூரின் ஊடாக வருகிறார்களோ அவ்வூருக்கோ அதாவது அமெரிக்காவுக்கோ திருப்பி அனுப்பக்கூடியதாக இருக்கையில் கனடாவில் உள்ள நாம் ஏன் இந்த சிரமத்துக்குள் மாட்டிக் கொள்ள வேண்டும்?" பாராளுமன்ற உபகுழுவுக்கு 91 கார்த்திகை 25 இல் குடிவரவு தொடர்பாக இவர் அளித்த அறிக்கையில் "நாம் இது விடயமாக மிக கணக்கத்துடனேயே இயங்கி, இந்த நாட்டில் இருப்பதற்கு எவ்வித உரிமைகளும் அற்றவர்களை அகற்றவும், நாடுகடத்தவும் செய்யும் நோக்கமுடை




மசோதாவிற்கு எதிரான ஆர்ப்பாட்டம்.



கனடாவில, அகதிகளைக்கட்டுப்படுத்தும் இவரின் கடுமையான நடைமுறைகளுக்குப்பின் அகதிகளை அகற்றும் வீதம் 1990இலும்பார்க்க 235%இனால் அதிகரித்தது. அத்துடன் 1992இன் முதல்3 மாதங்களில் அகதிகளை ஏற்பது 1991இல் இருந்த 64%இலிருந்து 54% ஆகக் குறைந்தது. சி.86எனும் இம்மசோதா ஏன் தேவையென்று அவர் இப்படிக் கூறுகின்றார். "இந் நாட்டை முன்னேற்ற வரவிரும்பிய நூறாயிரக்கணக்கான மக்களின் கியூவைத் தாண்டி பொய்யான அகதிகள் வருவதை கனடியர்கள் விரும்பவில்லை."

தகவல்: தமிழர் தகவல் (கனடா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒலிப்பதிவு நாடா

இயந்திரமயமாக வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் ஆறஅமர இருந்து வாசிக்கும் பழக்கத்தைக் குறைத்துக்கொள்வார்கள். அங்கே ஒலிப்பதிவு நாடாக்கள் மூலம் கவிதைகளை சிறுகதைகளை நாவல்களைக் கேட்கும் நிலை ஒன்று உருவாகும்.

இக்கருத்தை நிரூபிப்பது போன்று வைரமுத்துவின் கவிதைகளை அவரே சொல்லவும் இந்துமதியின் கதை




களை அவரே உரைக்கவும்– இவ்வாறு பல ஒலிப்பதிவு நாடாக்கள் இந்தியாவில் வெளியாகி வெற்றி காணுகின்றன. நமது நாட்டில் முதன் முதலாக, தமிழில் ஒலிப்பதிவு நாடாவாக வெளிவந்த பெருமையை கே.எஸ். பாலச்சந்திரனின் "கிராமத்துக்கனவுகள்" பெற்றது. தொடர்ந்து பல நாடகங்கள் இதேமுறையில் வெளிவந்து கொண்டிருக்கிறது. நம் நாட்டுக கவிதைகளை, சிறுகதைகளை கேட்கும் காலமும் வெகு தூரத்தில் இல்லை! ■

## இசை




இந்தியவானொலிக்கு. நமது இலங்கை வானொலி பலவிடயங்களில் முன்னோடியாகத் திகழ்ந்திருக்கிறது. ஒன்று வர்த்தக ஒலிபரப்பு.

பாமர மக்களிடையேயும் கர்நாடக இசை ரசனையை உருவாக்கும் முயற்சியாக, இலங்கை வானொலியில் திரை தந்த இசை பகுதியில் திரைப் படப்பாடல்களின் ராகங்களை இனம் கண்டு ஒலிபரப்பி. பல ஆண்டுகளின் பின்னர்– தென்னிந்தியாவின் பிரபல பாடகரும் சாகித்தியகர்த்தாவுமான பாலமுரளிகிருஷ்ணா, ஒலிநாடாவிலும் ஒளிநாடாவிலும் இதேமுயற்சியை செயற்படுத்திய போது இதற்கு திரைதந்த இசைதான் முன்னோடி என்று இந்தியப் பத்திரிகையான இந்தியன் எக்ஸ்பிரஸ் எழுதிஇருந்தது.

திரைதந்தஇசை தந்தவர் அண்மையில் சர்வதேசவிருதும் பாராட்டும் பெற்ற "விவிதகலாவினோதன்" எஸ். கே. பரராஜசிங்கம் தான்!

சிறிது காலத்துக்கு முன்பு ரூபவாகினியில் இதே அடிப்படையில் சங்கராபரண ராகச்சிறப்பை காட்டும் நிகழ்ச்சியையும் "பரா" வழங்கி இருக்கிறார்! ■

## பரிசு

அண்மையில் விபவியும், இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கமும் இணைந்து, சுதந்திர இலக்கிய விழாவினை நடத்தியது.

இதில் 1992ம் ஆண்டுக்கான சிறந்த தமிழ்க் கவிதைக்கானபரிசு, "காகம் கலைத்த கனவு" தொகுப்புககாக சோலைக்கிளிக்குக் வழங்கப்பட்டுள்ளது. முருகையனுக்கு . அவரது இலக்கிய சேவைக்கு விசேட பரிசு வழங்கப்பட்டது. 1991ம் ஆண்டு வெளிவந்த தமிழ்நாவல்கள், சிறுகதைகளில் பரிசுக்குரியவை என எதுவும் தெரிவு செய்யப்படவில்லை.




## நோபல் பரிசு

கொலம்பஸ், அமெரிக்காவைக் கண்டுபிடித்த 500வது ஆண்டைக் கொண்டாடிக் கொண்டிருக்கும் இவ்வேளை 1992ம் ஆண்டிற்கான, சமாதனத்திற்கான நோபல் பரிசு பெற்ற ரிகோ பெர்டோ மெஞ்சு (33) பின்வருமாறு கூறி இருக்கின்றார். கொலம்பஸ் அத்லான்டிக் சமுத்திரத்தைக் கடந்த பின் 500 வருடங்களாக நாங்கள் கொடுமையை அனுபவித்து வருகின்றோம்." கௌதமாலாவைச் சேர்ந்த இந்தியப் பெண்ணான இவர், பழங்குடி மக்களுக்காக, அவர்களின் உரிமைகளுக்காகப் போராட்டம் நடத்தி வருகின்றார். மெஞ்சுவின் தந்தை விவசாயப்புரட்சி செய்ததற்காக சுட்டுக் கொல்லப்பட்டார். சகோதரன் 16 வயதில் இராணுவத்தால் எரிக்கப்பட்டான். தாய் இராணுவத்தால் கற்பழிக்கப்பட்டு பின் மரம் ஒன்றில் கட்டப்பட்டு, பல நாள் கழித்து கவனிப்பாரற்று இறந்துபோனாள்.


மெஞ்சு

1981இல் மெஞ்சுவும, மெக்சிக்கோவுக்கு நாடு கடத் தப்பட்டாள்.

மேற்கிந்திய இனத்தின் மாயா கலாச்சார பரம்பரையில் தோன்றிய இவர் குடும்பம் விவசாயம் செய்து வந்தது. விவசாயம் இல்லாத காலங்களில் காப்பித் தோட்டங்களில் வேலை செய்தது. எழுதப் படிக்கத் தெரியாத மெஞ்சு, ஆளும் வர்க்கத்தின் கொடுமையை எதிர்க்க வேண்டுமானால், அவர்களுடைய ஸ்பானிய மொழியை முதலில் கற்றாக வேண்டும்" என்பதற்காக, ஒரு வீட்டில் வேலைக்காரியாகச் சேர்ந்து ஸ்பானிய மொழியைக் கற்று பாண்டித்தியம் பெற்றார்.

"என் மக்களுக்கு நான் செய்ய வேண்டிய கடமை முடிந்த பிறகே என் சொந்த வாழ்க்கைச் சந்தோசங்களைப் பற்றிக் யோசிக்க வேண்டும்" என்று கூறியுள்ளார் இன்னும் திருமணமாகாத மெஞ்சு. □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சஞ்சிகை



"கண்ணீர் வடிக்கும் பொழுதும், கை கொட்டிச் சிரிக்கும் பொழுதும் கலைக்கு இடமுண்டு.... கலையின் வடிவங்கள் காலத்தை, இடத்தை, சூழ்நிலையைக் கடந்து வாழ்வன- வளர்வன" எனக் கூறும் "கலைமுகம் " காலாண்டுச் சஞ்சிகை யாழ்ப்பாணம் திருமறைக் கலா மன்றத்தினரால் வெளியிடப் படுவது. நாடகம், இசை , ஓவியம், சிற்பம், நாட்டுக் கூத்து, நாட்டார்கலை, இலக்கியங்கள் என நேர்மையான கலைச்சேவை புரியும் இம்மன்றத்தின் ஜீவநாடி வண.நீ. மரியசேவியர்.

ரமணி முதலான ஓவியர்களின் அட்டைப்படங்களும், காத்திரமான கலை நுட்பங்கள் கூறும் கட்டுரைகளும் கலைமுகத்தைப் பெறுமானமுள்ளதாக ஆக்குகின்றன. □

## தீர்ப்பு

தொழிற்சங்கப்போராட்டத்தின் பயனாக, கடந்த 20 ஆண்டுகளுக்கு மேலாக தொழிற்சங்கச் சந்தா, தொழிலாளர்களின் சம்பளப்பணத்திலிருந்து பிடித்து வரப்பட்டது.இவ்வருடம் முதல் தோட்டத்தில் உள்ள ஒரு டிவிசனில் 25வீதத்திற்கு குறைந்த அங்கத்தவர்கள் உள்ள சங்கத்திற்குசந்தா பிடிக்கமுடியாதெனத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இந்த ஜனநாயக விரோதச்செயல் காரணமாக தொழிற்சங்கக் கூட்டுக்கமிட்டியில் உள்ள 9சங்கங்களும் 2தொழிலாளர்களும் உயர்நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

வழக்கை விசாரித்த உயர்நீதிமன்ற நீதியரசர்கள் அரசின் செயல் மனிதஉரிமைமீறும் செயல் என்றும் தொழிலாளர்களின்தொழிற்சங்கச்சந்தாவை வழமைபோல் பிடிக்கலாம் என்றும் உத்தரவிட்டுள்ளனர். இந்த வழக்கில்இலங்கைத் தொழிலாளர்காங்கிரசும் அரசுடன் சேர்ந்து வழக்குத் தாக்கல் செய்திருந்தது.

## அஞ்சலி

நாற்பதுகளின் நடுப்பகுதியில் இருந்து கிட்டத்தட்ட தன் வாழ்க்கைக்காலம் முழுவதையுமே, மனித வாழ்வின் மேம்பாட்டிற்காக போராடுவதற்கு அர்ப்பணித்த கம்யூனிஸ்ட் வி.ஏ.கந்தசாமிஅவர்கள் தனது 70வது வயதில் - (9.11.92இல்) - தனதுசிந்தனையை, செயற்பாடுகளை நிறுத்திக்கொண்டார்.

ஒரு சுருட்டுத்தொழிலாளியாக தன் இளமைக்கால வாழ்வை ஆரம்பித்த கந்தசாமி, இலங்கைக் கொம்யூனிஸ்ட் கட்சியில் இணைந்து தொழிற்சங்கநடவடிக்கைகளிலும், போராட்டங்களிலும் தீவிரபங்காற்றியவர்.சீவல் தொழிலாளர் சங்கம், சுருட்டுத்தொழிலாளர் சங்கம், சாப்புச் சிப்பந்திகள் சங்கம், நகர சுத்தித் தொழிலாளர் சங்கமென பல்வேறு தொழிற்சங்கங்களை உருவாக்கி ஒடுக்கப்பட்ட மக்களையும், சாதிரீதியாக ஒடுக்கப்பட்ட மக்களையும் அணிதிரட்டி அவர்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்காக தமிழர் மகா சபையையும் உருவாக்குவதில் முதன்மையான பங்கு வகித்தார்.

இலங்கையின் போராட்ட வரலாற்றில் அழியாத இடம்பெற்ற தீண்டாமை ஒழிப்புப் போராட்டத்தை முன்னின்று நடத்துவதில் தீவிர கவனம் செலுத்தியவர் கந்தசாமியவர்கள். அகில இலங்கை விவசாயிகள் சங்கம் உருவாக்கப்பட அதன் ஆரம்பகர்த்தாவாகவும் இருந்து செயற்பட்டு, அதன்வடபகுதிப்பிரதிநிதியகவும் விளங்கினார். 1960இல் கம்யூனிஸ்ட் கட்சி பிளவடைந்த பின்னர், இ. க. கட்சி (பீக்கிங்) இல் மத்தியகுழு உறுப்பினராகவும், பொலிட்பீரோ உறுப்பினராகவும் இருந்து கட்சியை வழிநடத்திச் சென்ற கந்தசாமி அவர்கள், அதன் அரசியற்கருத்துக்களிலும், செயற்பாட்டிலும் முரண்பட்டு மாக்சிஸ்ட்- லெனினிஸ்ட் கட்சியை உருவாக்குவதிலும் முக்கியபங்காற்றினார். மா- லெ கட்சியில் மத்திய குழு உறுப்பினராகவும், பொலிட்பீரோ உறுப்பினராகவும், காரியதரிசிகளில் ஒருவராகவும் இருந்து செயற்பட்டார். போராட்டங்கள், அமைப்பு நடவடிக்கைகளில் மாத்திரமல்லாது பத்திரிகைத்துறையிலும் அக்கறை காட்டினார். முற்போக்கெழுத்தாளர் சங்கத்துடன் சேர்ந்து அந்தந்தக் காலகட்டத்தில் வெளிவந்த - தேசாபிமானி.தொழிலாளி - போன்ற பத்திரிகைகள் வெளிவர பிரதான பாத்திரம் வகித்தார்.

மா- லெ கட்சி செயலிழந்த பிற்பாடுகூட தனது வயதான காலத்திலும், ஒரு இளைஞரைப்போல செயற்பட்டு இலங்கைத தேசியப்போராட்டத்தில் பெரும்திரளாக வந்த இளைஞர்களுக்கு இடதுசாரிக்கருத்துக்களைப் போதிப்பதில் தனது காலத்தைச் செலவு செய்தார்.தமிழ்த் தேசியவிடுதலைப் போராட்டத்தில் விலகி நின்ற கம்யூனிஸ்டுகளுக்கு கந்தசாமி அவர்களின் இறுதிக்கால அரசியற்பாடுகள் மனக்கசப்பை ஏற்படுத்தியிருந்த போதும், அவர் ஒரு போராளியாக, போராட்டத் தலைவராக வாழ்ந்து, தன் இறுதிக்காலம் வரைக்கும் தன்னைப் போராட்டங்களுக்கு அர்ப்பணித்தவர் என்பதில் யாருக்கும் முரண்பாடுகள் இருக்கமுடியாது. இன்று அரசியலை ஒரு பிழைப்பாகவும், பொழுது போக்காகவும் கொள்ளும் பலர் மத்தியில், கட்சியையும் தோழர்களையுமே தன் குடும்பமாகக் கருதி, திருமணம் கூடச் செய்துகொள்ளாமல், அரசியல்வாழ்க்கை வேறு குடும்ப வாழ்க்கை வேறு என்ற பேதம் எதுவுமின்றி ஒரு முன்னுதாரணமாக வாழ்ந்த வி. ஏ. கந்தசாமி அவர்கள் நம்மிடையே இல்லை. இருந்தும் அவர் மக்கள் மனங்களில் வாழ்கிறார்.



கந்தசாமி: மக்கள் மனங்களில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவம்

ஈழத்து தமிழ் இலக்கியத்துறையில் முஸ்லீம்களின் பங்களிப்பு கணிசமானது அண்மையில் வெளி வந்திருக்கும் எஸ். எல். எம்.ஹனிபாவின் மக்கத்துச்சால்வை சிறுகதைத்தொகுப்பு அப்படிச் சொல்லக்கூடிய ஒன்றாகும். அத் தொகுப்பில் இருந்து இச் சிறுகதை பிரசரமாகின்றது.

"செத்தியாகக் காலெ எட்டிவெய்யங்கெ" சலவாத்து சப்தத்துக் கிடையில் முஅத்தின் குரல்விட்டான். மையத்தைத் தொடர்ந்தவர்கள் காலை எட்டிப் போட்டார்கள்.

இடையில் மையித்து-

சந்தூக்கை சுமந்து வந்தவர்களில் மஜீதும் ஒருவன்.

அவன் தோளில், அவன் மனைவி செய்நம்பு மையத்தாகி

நேற்று- நிறைமாசத்தோடெயும் அவனுக்கு அவள்தான் ஆக்கிப் போட்டாள் பச்சரிசிச் சோறும் மாங்காவெச்சிச் சூடெமீன் பாலாணமும் நாவுக்கு ருசிய்யா எப்பிடி ஆக்குவாள். இண்டெய்க்கி பொல பொலத்து விடியக்கொள தலப்புள்ளத்தாச்சி- செப்புக்குடம் போலெ- அவள் வயிறு மினுமினுத்து அவன் கண்ணுக்குள் வாளிப்பாஞ்சாள்.

இப்போ-

அவன் தோளில் அவள் மையத்தாகி-

நினைவுகள் மட்டும் அவனை விட்டு நீங்கவில்லை.

கருமாரி வீடு அமளி துளிப்பட்டது.

"முகைதீன் ஆண்டவரே! என்டபுள்ளெட வவுத்துச் சுமயநீங்கான் இறக்கோணும்."

"புள்ளெ! ஒப்பாரி வெச்செ போதும்- இந்தெ விளக்கிலெ எண்ணெயெ ஊத்திட்டுவா. ஊடு இரிட்டாக் கிடக்கு."

"போட்டெ போட்டெ இடத்தலெ சாமாஞ் சக்கட்டுகள். ஆரோ தடார் புடாரென்று ஒதுங்கப் பண்றாங்கெ..."

"இந்தெக் கதவ அடைக்கவுமேலா; துறக்கயுமேலா. ஓடாவிர்ரெ வூட்ட நாய் பூர்ரெண்டு சும்மாவா சொன்னானுகள்."

கதவ இழுத்து ஆரோ அடைக்காங்கெ- வாசலிலெ மடாப் பானையிலே தண்ணி கொதிச்சுக் கிடக்கிது ஆவி புகைபோலெ மேலெ கிளம்புது. அடுப்பச் சுத்தி உரிமட்டய்கள் பத்தியும்...பத்தாமலும்... அடிக்கொருதரம் மூககலும் முனகலுமாக வீட்டுக்குள்ளிருந்து சத்தம்- மஜீத்துக்கு குரல் குலையப் பிணைஞ்சிது.

"ஆண்டவனே! என்ட வூட்டுக்காரிரெ சுமய்ய இறக்கிப்போடு..."

"கஸ்ஸா மருத்துவிச்சி வந்திட்டா"

"உங்கெளெ எங்கயெல்லாம் தேடிறயோ?"

"என்னெ தம்பி செய்யிறெ - நாம ஆஸ்பத்திரிக்கெல்லாம் போவலாமா? மவுத்தாயினாலும் வூட்டோடெ கிடந்து சாவம்."

"மறுவாலைக்கி நஞ்சூசப் போட்டாலும் போடுவானுகள். ஆரும் ஆஸ்பத்திரிப் பக்கம் போற கதய்யக் கதைக்கப் படாது."

"குளப்பந் துடங்கினத்திலிருந்து ஆரும் ஆஸ்பத்திரிப் பக்கம் போறலியே. அதாலெ இப்பெ மருத்துவிச்சிக்கித்தான் செரியான வாசி."

"ஒரு புள்ளெ கழுவெ முன்னூறு. என்னத்தெ வித்தும் குடுக்கணும்."

"ஆல வூட்டுத் திண்ணையிலே கூடின பொண்டுகெள் கதைச்சி கொட்றாங்கெ... உள்ளெ-

"எங்கெ பாப்பெம் விலவுங்கெ." கஸ்ஸா மருத்துவச்சி இந்தக் கதையெல்லாம் காதுக்கு எடுக்காதவளாக- பிள்ளைத்தாச்சியின் அருகில் வந்து, இடுப்பத்தொட்டு-வவுத்தத் தடவிளதையோ ஊகித்துக் கொண்டவளாக-

"மன்சூரெக் கூட்டி வாங்க. ஊசி போட்டாத்தான் புள்ளெ பறக்கும்."

"தம்பி! சைக்கிளத் தள்ளுங்கெ" மஜீதிட மாமி.

பத்து வருஷமாகக் கிறவலைக்காணாத அந்த ரோட்டிலே மஜீதின் சைக்கிள் பந்து போல் உருண்டது.

மன்சூரின் டிஸ்பென்ஸரி மெள்ள மெள்ள பெரிய ஆஸ்பத்திரியாகிக்கொண்டு வந்தது. பக்கத்து ஊர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு நோய்க்கி ஒவ்வொரு வாட்டாகிக் கொண்டு...

போட்டா போட்டியில்...

"பாருங்கெளன் உங்கட ஊரிலெ ஆஸ்பத்திரி போட்டிருக்கிற மன்சூர், எங்கட ஊரிலெ அத்துறகுமான்டெ ஆஸ்பத்திரியில துண்டு குடுத்த பொடியன். எட்டாம் வகுப்புத்தான் படிச்செ... என்னமாத்தான் மருந்து செய்றான்" புதுசாக ஊருக்குள் வரும் மன்சூரின் ஊரவர்கள் - இந்தக்கெட்டித்தனத்தில் சொக்கிப்போய் மூக்கில் விரலை வைப்பார்கள்.

"மன்சூர் இப்பவெல்லாம் பல்லும் புடுங்கிறாரு." கொழும்பிலிருந்து பெரிய்ய கதிரயும் பெரிய்ய குறடும் வாங்கியந்திரிக்காரராம். சின்னச் சின்ன ஒப்பரேசனும் நல்லாச் செய்ய பழகிட்டாராம்."

ஊரவர்கள் அவர் புகழ் பாடத் தொடங்கினார்கள்.

ஆனால் - அவர் கண் வைத்தியம் பார்த்ததில் முஸ்தபாடெ பெண்சாதியின் வலது கண் பொட்டயாகப் போன சங்கதி யாருடைய கண்களிலும் படவில்லை. கூப்பன் கடை மனேச்சருக்கு கையிலே தையல் போட்டு கையே முடமான கதய இந்த ஊருல யாரும் கதைக்கல்ல...

அவர் பல் புடுங்கிய வகையிலே உசனாருக்கு புத்து நோய் வந்து மகரகமயிலே மவுத்தாப்போன விசயம் யார்ரெ காதிலயும் தைக்கல்லெ...

மஜீதுக்கும் அவர் மேலே நம்பிக்கை புடிச்சது.

"கொஞ்சம் இரிங்கெ இன்னம் நாலு பேர்தான்."

சோத்துக்கடையின் அடுப்படி ஆளைப்போல ஒருவன் வந்து மஜீதுக்கு விசளம் சொல்லிப்போனான்.

அவன் கையில் பல வண்ணங்களில் போட்டுத் தோய்த்தெடுத்த- கருந் தழும்பேறிய மருந்து கலக்கும் தடி. மஜீது வாங்கின் மூலையில் அமர்ந்து கொண்டான்

"ஆ...ஊ...! ஆண்டவனே...ய்!"

"சத்தம் போடாமெ... கதிரய்ய ஊண்டிப்பிடிங்கெ. இன்னா புடிங்கிட்டேன்."

"தமர்!"

யாரோ ஒருவருடைய கொடுப்புப்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாலாப் பீங்கானுக்குள் குப்புற விழும் சப்தம்.

"தம்பி! இந்தக் குளிசையெல்லாம் ரெண்டு நாளைக்கிப் போடணும். ரெத்தம் நிக்காட்டி ஊசி போடணும். பிறகு வாங்கெ.எல்லாத்துக்கும் நூத்தி அம்பது."

கொடுப்பு நிறைஞ்ச பஞ்சுடன்-தன் சட்டப்பையிலிருந்து இரண்டு மஞ்சல் நோட்டுகளைக் கொடுத்து மீதியை வாங்கிக் கொண்டான்.

எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த மஜீது உள்ளே போனான்.

"ஆ...! வாங்கெ. எப்ப வருத்தம் கண்ட?"

விடியச் சாமம் பன்னிக் குடம் புறந்திட்டிது. இன்னம் புள்ள புறக்கல்லெ."

"ஆர்ரு மருத்துவிச்சி. நம்மட கஸ்ஸம்மாவா?"

"ஓம்... ஓ...ம்!"

அவ்ரின் கையிலிருந்து மருததுவப்பெட்டி அவன்கைக்கு மாறியது.

"வூட்டுக்குள்ளெ இரிக்கிறவெங்கெ வெட்டக் கிறங்கிங்கெ. டாகுத்து வாறாரு."

ஒரு பட்டாளம் பொண்டுகள் வீட்டிற்குள்ளிருந்து தள்ளினார்கள்.

மண்ணெண்ணெய் விளக்கின் வாடையும், மனித நெடியும் வருத்துக்காரிக்கு இன்னும் அதிக வேதனையைக் கொடுத்ததுபோலெ...

கஸ்ஸா மருத்துவிச்சி வேறு. முக்கச் சொல்லிச் சொல்லி வானலைப் போக்கியிருந்தாள்.

"சுடுதண்ணியெ எடுங்கெ." டாக்டர் துரிதப்படுத்தினார். கொஞ்செ நேரத்தில் ஊசி மருந்து அவளின் சோர்ந்த உடலினுள் புகுந்தது.

"பிரசரும் 260யில இரிக்கிது. சாச்சலும் 104ல காய்து சா...

சேலனும் குடுக்கணும்."

வழமையான நோயாளிக்கு அவர் ஊட்டுகின்றதென்பு வார்த்தைகள்.வீட்டு உலாத்தையில் உலக்கையைக் குறுக்கால போட்டு சேலன் கொடுக்கத் தொடங்கினார்.

காரியமெல்லாம் கச்சிதமாக முடிந்தது. முப்பதே நிமிடங்களில் ஒரு பைந்து சேலன் செய்னம்பூவின் உடலில் பாய்ந்தது.

கஸ்ஸா மருத்துவச்சிக்கும், கூடயிருந்தவர்களுக்கும் நிம்மதி தட்டியது. மற்றப்படி செய்னம்பூ என்னவோ மரண அவஸ்தையில்...

"இனி என்ன? குழந்தெ கிடச்சிடும்".

மஜீதின் நெஞ்சில் ஆம்புளப் புள்ளெ துள்ளி மிதிச்சான்.

பொழுதுசாய்ந்தது.

என்ன புள்ளயாம்"

"ஆம்புளப்புள்ளயாம்

இன்னம்மாக் கொடி உழலயாம்."

"தலயிலெ சன்னியும் அடிச்சிட்டாம்"



**நேற்று நிறைமாசத்தோடேயும்அவள் தான் ஆக்கிப் போட்டாள். இன்றோ அவன் தோள்களில் அவள் மையத்தாகி.....**

பேறுவீடு...மையத்து வீடு போல... சனம்அடிச்சி விலகாது...

அந்த ஊரில் உள்ள இன்னொரு டாக்குத்தரையும் மஜீது கூட்டிவருகிறான்.

"தம்பி! எதையும் பாக்காதெ.அவசரமா ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோ .எம்.ஓ கிட்ட காட்டினாத்தான் நல்லது."

இந்தடாக்டருக்கு, கொஞ்சம் நெஞ்சில் ஈரம்.

"அங்கெ ஆரு போறெ. அதுதமிழன்ட ஆஸ்பத்திரி. எல்லாம் புலிகள். இவருக்கு இதெல்லாம் தெரியாது. நீ போய் மன்சூரைக் கூட்டிவா. இன்னொரு ஊசியைப் போட்டுப்பாப்பம்."

கஸ்ஸா மருத்துவிச்சி மஜீதை விரட்டினாள்.

"தம்பி நான் சொல்றதக் கேளு. புள்ள பொறந்துநாலு மணித்தியாலமாகிறது. இன்னம் மாக்கொடி உழல்லெ. தாய்ர உடம்பில நஞ்சும் கலந்திடும். நீ உடனெ ஆஸ்பத்திரிக்கித் தான் போகணும்."

"புள்ள புறந்து நாலு மணித்தியாலமாகிது புள்ளய்கிம கல்கண்டு தண்ணி தான். தாய்க்கி பால்வருத்தமும் கூடெ."

மஜீதுக்கு தலை வெடிச்சிடும் போலிருந்தது.

முச்சந்திக்குப்போய்-கார் ஒன்றைக் கூட்டிவந்து-பிள்ளையையும் தாயையும் காரில் ஏற்றிக்கொண்டு- பெற்றேல் சென்றியில் நிற்பாட்டி- மஜீதுக்குத் தெரிந்த சிங்களத்தில் ஏதோ சொல்லிவிட்டு.... கார் அவசரவேகத்தில் ஆஸ்பத்திரிக்குள் நுளைந்தது.

"என்னயிது சவத்தைக்கொண்டு வந்திரிக்கியள்?

சோனிகளுக்குப் புத்தியில்லெ...."

மஜீது கூனிக் குறுகினான்.

கங்காணிப் பொம்புள்ளெ ஒருபாட்டம் திட்டித்தீர்த்துவிட்டு, எம்.ஓ விடம் போய்ச சொல்ல- அவர் வந்து பரிசோதித்து... முகத்தில் பரபரப்பும்..... வேகமும் இணைந்து

"யார் கொண்டுவந்தது?"

"நான்தான் சேர்!" மஜீது.

"உங்கட மனைவிதானெ. வருத்தம் கண்ட கையோட கொண்டு வந்திருக் கலாமெ. இந்த நேரத்தில என்னாலெ என்ன செய்யமுடியும்?"

டாக்டரின் முகத்தில் இயலாமையின் தவிப்பு.

"இரண்டுமணிக்குத் தான் செஞ்சிலுவைச் சங்கத்தின் ஜீப்பு பொலநறுவைக்குப் போனது." நேரகாலத்தோட வந்திருந்தால் அந்தஜீப்பில அனுப்பி இருப்பன்."

அவர்குரல் தொய்ந்து இழுபட்டது.

மீண்டும் காரில் அவன் மனைவியை பக்குவமாகத் தூக்கிஏற்றினான்.

உதவிக்கு அவன்மாமி சுலைகாராத்தாவும்...

"இதுக்குத்தானே இஞ்சை வாறலெ..."

"வாயப் பொத்திக்கிட்டு இரிக்கணும்- எல்லாம் அறிவு கெட்டதுகள்றெ கதய்யக் கேட்டு வந்தது..."

கார் பறந்து ஆறாம் கட்டை இராணுவ முகாமைத் தாண்டும்வேளை... மஜீதின் மனைவி செய்னம்பூ காலையும் கையையும் போட்டு அடித்தாள். துவாலையும்இறைக்கத் தொடங்கிற்று. கார் புனானை சென்றியில் நிற்க- செய்னம்பூவின் கண்கள் மேலே சொருகிக் கொண்டன.

வெட்டுண்ட கழுத்து விழுந்ததைப் போல அவள் தாயின் மடியில் செளித்தாள்.

"என்டெ...மகளேய்...எங்களயெல்லாம் உட்டுப்போட்டுப் பெய்த்தியாடிய்...!" □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அயோத்தி

# இராமர் பெயரால் ஒரு வெறியாட்டம்



## காவியா, போர்க்கொடியா?



இந்திய மக்களை பெரிதும் கவர்ந்த அந்த தொலைக் காட்சித் தொடர் - இராமாயணம் - தூரதர்சனில் ஒளி பரப்பப் பட்ட போது இராமர் இந்த அளவுக்கு, இந்தியாவிலும் இந்திய எல்லைகளைத் தாண்டியும மூர்க்கமும் மதமும் கொண்ட தாக்கத்தை ஏற்படுத்து வாரென்று எவரும் கற்பனை செய்து பார்த்திருக்க மாட்டார்கள்.

ஒரு மத்திய அரசும் மாநில அரசும் கவிழ்ந்து போகக் காரணமான, 16ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட அந்தப் பழைய பாபர் மசூதி, இறுதியில் கரசேவகர்களால், இந்து மதவாத அமைப்புகளின் தலைமையில் இடித்துத் தகர்க்கப்பட்டது. இதன் எதிரொலியாக இந்தியாவின் பல நகரங்களில் வன்முறை வெடித்தது. நிலைமையைக் கட்டுக்குள் கொண்டுவர ஊரடங்கு உத்தரவு பிறப் பிக்கப் பட்டது. இப் பிரச்சனை இந்தியா விற்கு வெளியே பாகிஸ்தானிலும், பங் களாதேசிலும், பல்வேறு இஸ்லாமிய நாடுகளிலும் இந்துக் கோயில்களை எரிப்ப திலும் வெளிப்பட்டது. இலங் கையில் கூட எப்போதோ கொழும்பில் நடந்து முடிந்துவிட்ட ஆடி வேல்திருவிழாவும் (தமது பெருந்தன் மையால்தான்) அமைதியாக நடந்த தாக சிலர் முட்டாள்தனமாக சவால் விடும் அளவுக்கு இது எதிரொலித்தது இப்போது எழுந்துள்ள கேள்வி இதுதான். எப்போதோ யாராலோ மேற்கொள்ளப் பட்ட அநீதி ஒன்றிற்காக இப்போது அவர்களும் அவர்களது அரசாட்சியும் மறைந்து போய் பல நூற்றாண்டுகள் கடந்து விட்ட பின், பழிவாங்க முற்படு வது சரியானதா? இது அயோத்திக்கு மட்டுமே உரிய கேள்வியல்ல. உலகின் பல நாடுகளிலும் இக் கேள்வி இருக்கத் தான் செய்கின்றது.

அன்று ஒரு காலம் இருந்தது. அரச காலம். மாறிமாறி படையெடுப்புகள் நடந்த காலம். தனிமனிதர்களான அரசர்களின் விருப்பு வெறுப்பு களுக்கேற்ப அரசியல் நடவடிக்கைகள் தீர்மானிக்கப்பட்டகாலம். அதற்கெல் லாம் அன்றிருந்த மக்களையே முற்று முழுதாகப் பொறுப்பாளிகளாக்க முடியாமல் இருக்கும் போது, இன்று அவர்களின் வழித்தோன்றல்களாக இரு ப்பவர்கள் மீது அப் பழியைச் சுமத்துவது எந்தவிதத்திலும் நியாயமாக மாட்டாது. இந்தியா ஆரம்பத்தில், இப்போது உள் ளது போல் ஒரு தேசமாக இருக்க வில்லை. அதன் ஒவ்வொரு பகுதியையும் ஒவ்வொரு மன்னர்கள் தத்தமது ஆதிக்க பலத்திற் கேற்ப ஆண்டு வந்தார்கள். படை எடுப்புகள் வீரச்செயல்களாகக் கருதப்பட்டு போற்றப்பட்டன. இவ்வாறு நோக்கு கையில், தமிழ் மன்னர்களின் படை எடுப்புகள், தமிழ் இலக்கியங்களில் இன்றும் கூட வீரகாவியங்களாகத்தான் உள்ளன. (கலிங்கத்துப்பரணி இதற்கு நல்ல உதாரணம்.) நாடுகளைக் கைப்பற்றி சூறையாடி குடியிருப்புகளையும் வயல் நிலங்களையும் எரிப்பது எரிபந்தெடுத்தல் என்ற ஒரு போர் நெறியாக உபதேசிக்கப்பட்டிருந்தது. இவ்வாறு இருக்கும் போது, பாபரின் செயற்பாடுகளை மட்டும் தனித்தெடுத்து குறைகாண முடியாது.

இந்தியாவில் முதலில் ஆரியப் படையெடுப்புகளின் போது, இந்துமதம் பரப்பப்பட்டது. பின்னர் நடந்த முகலாயப்படையெடுப்பின் போது இஸ்லாமிய மதம் பரப்பப்பட்டது. அதன் பின் ஐரோப்பியப் படையெடுபின் போது கிறிஸ்தவ மதம் பரப்பப்பட்டது. இன்று அந்தந்த மதங்களைப் பின்பற்றிய மக்கள் அந்தந்த மதங்களை, தம்மீது திணிக்கப்பட்டதாக அல்லாமல் மனதார நம்பிக்கையுடன் ஏற்றுக்கொண்டவர்களாகவே உள்ளார்கள்.

மொகலாயர் காலத்தில், 450 வருடங்களுக்கு முன் பாபரால், இந்துக்கோயிலொன்றை இடித்துக்கட்டப்பட்டதாகக் கூறப்படும் பாபர் மசூதியையும், இவ்வாறே இஸ்லாமிய மக்கள் ஒரு புனிதச்சின்னமாக கருதி வருகின்றனர். இந்துக்கள் கூட இதுவரைகாலமும், இஸ்லாமியர்களுடைய இந்த உணர்வை மதித்துத்தான் வந்தனர். இந்திய சுதந்திரத்தின் போது நடந்த மிகப்பெரிய இந்து -முஸ்லீம் கலவரத்தின் போதுகூட பாபர் மசூதியில் கைவைக்கப்படவில்லை. ஆனால் இன்றோ, அண்மைக்காலமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடந்து வரும் அரசியல்வாதிகளின் குறுகிய நலன்களுக்கு மதவெறியும், ஒரு சாதனமாகப் பயன்படுதப்பட்டு, தப்பான கருத்துக்களை தெய்வ நம்பிக்கை யுடன்கலந்து,தேசிய ஒற்றுமைக்கே ஊறு விளைவிக்கும் நிலைக்கு கொண்டு செல்லப்பட்டிருக்கிறது. அமைதியாக வாழ்ந்த இந்துக்கள் மத்தியில், இந்த அரசியல் சக்திகள்தூவிவிட்ட நச்சு விதைதான்„ பாபர் இடித்ததாகக் சுறப்படும் இந்துக் கோயில்இருந்த இடத்தில் தான் இராம பிரானும் பிறந்தார் என்ற எந்த வரலாற்று ஆதாரமும் அற்ற கதை. இராமயணம் என்பது வால்மீகியால் இயற்றப்பட்ட புராணக்கதை. அதில் மிருகங்கள் பேசுவதையும், சாபம் பெற்று கல்லாக மாறிய பெண், காலடி பட்டு மீண்டும் பெண்ணாக மாறுவதையும், மலையைப் பெயர்த்தெடுத்து கடலைத்தாண்டி இலங்கைக்கு தாவுவதையும். மாரீச மானையும், மாயம் புரியும் அரக்கர்களையும் வெறுமனே ஒரு இதிகாசமாகச் சுவைக்க முடியுமேயன்றி அறிவுபூர்வமாக யாரும் ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. அவ்வாறு இருக்க ராமர்பிறந்த இடமாக, பாபர் மசூதியை அச்சொட்டாக குறித்துக் காட்டுவதை எப்படி அறிவு பூர்வமாக ஏற்றுக்கொள்ள முடியும்? இன்று தமிழ்நாட்டில் உள்ள பல இந்துக் கோயில்கள் முன்பு சமணர்களுடைய வழிபாட்டுஸ்தலங்களாக இருந்தவை. இவை திருஞான சம்பந்தர் காலத்தில், அவருடைய தலைமையில் இடித்து தகர்க்கப்பட்டு இந்துக்கோயில்களாக மாற்றப்பட்டவை. இன்று சமணர்கள் பழைய சம்பவங்களுக்கு உரித்துக் கேட்டால் இந்துக்கள் விட்டுக் கொடுப்பார்களா? இது போன்ற கேள்விகள், வெவ்வேறு நாடுகளிலும் வெவ்வேறு வடிவங்களில் இருக்கத்தான் செய்கின்றது. பைபிளில் புனிதஸ்தலமாகக் கருதப்படும் ஜெருசலம் தமது பிரதேசம் என்றுகூறித்தான் முஸ்லீம் பிரதேசங்களின் மீதான தமது படையெடுப்பிற்கு கிறிஸ்தவர்கள் நியாயம் கூறிக்கொண்டார்கள். தென்னாபிரிக்கா வில் உள்ள கருப்பு இனத்தவர்கள் கூறுவார்கள் "வெள்ளையர்கள் வரும் போது எம்மிடம் நாடு இருந்தது. பைபிள் இருக்கவில்லை. இப்போது பைபிள்இருக்கிறது ஆனால் நாடு இல்லை"என. இந்த வரலாற்று உண்மைகளுக்கே விடைகாண முடியாமல் இருக்கும் போது வரலாற்று ஆதாரமற்ற விடயங்களுக்கு விடைகாண முற்படுவது இன்று அத்தியவசியமான ஒன்றுதானா? இன்று இந்தியாவில்



**கரசேவகர்கள்: இராமருக்கு வெற்றி?**

தீர்க்கப்படவேண்டிய பிரச்சினைகள் இராமர்கோயில் பிச்சினையா அல்லது பிரிவினைப்போராட்டங்கள், வேலையில்லாத்திண்டாட்டம், பொருளாதார முன்னேற்றங்களுக்கான சவால்கள் போன்றவையா?

இது இவ்வாறு இருக்க மறுபுறத்தில், சில குறிப்பிட்ட இந்துத் தீவிரவாதிகளால் பாபர் மசூதி இடிக்கப்பட்டு விட்டதற்கு முழு இந்துமக்களையும் குற்றவாளியாக இனம் காணுவதும் அவகளை வெவ்வேறு நாடுகளிலும் முஸ்லீம் தீவிரவாதிகள் பழிவாங்க முற்படுவதும் மிகவும் தவறானதும், நிறுத்தப்பட வேண்டியதுமாகும். மசூதியை இடித்த இந்துத் தீவிர வாதிகளின் செயல் முஸ்லீம்மக்களின் உணர்வுகளைப் பெருமளவில் பாதித்தபோதும், நிதானமாகப்பார்க்குமிடத்து இச்செயல் முஸ்லீம்மக்களுக்கு எதிரான ஒரு ஒட்டு மொத்தமான செயற்பாடாகச் செய்யப் படவில்லை என்பதையும் கண்டுகொள்ள வேண்டும். அப்படிச் செய்வதாக இருந்திருந்தால் இந்தியாவின் பல்வேறு பகுதிகளிலும் பரவலாக முஸ்லீம் பள்ளிவாசல்கள் தாக்கப்பட்டிருக்கும். பாபர்மசூதி இடிக்கப்படும்போது இராமருக்கு வெற்றி எனக் கோஷம் எழுப்பட்டதேயன்றி முஸ்லீம்களுக்கெதிராக எந்தக் கோஷமும் வைக்கப்படவில்லை.இதில் அவர்களுக்கிருந்த உணர்வு இராமபிரான்பிறந்தஇடம் என்ற முட்டாள்தனமான நம்பிக்கையின் அடிப்படையில் ஏற்பட்டதேயன்றி முஸ்லீம்க ளை ஒடுக்கவேண்டும் என்ற மதவாதத்தின் அடிப்படையில் ஏற்பட்டதல்ல. எனவே இதை மதப்பூசல்களாக முற்படுவது இழிவான செயற்பாடாகவே இருக்கும். ஆனால் பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளில் இந்துக்கோயில்கள் பலவும், பல இந்துக்களும் எரிக்கப்பட்டமையும், தாக்கப்பட்டமையும் எந்தவகையிலும் நியாயப்படுத்தபட முடியாதவை. எவ்வகையில் இந்தியாவில் சில அரசியல்சக்திகளால் இந்த மதஉணர்வு பயன்படுத்தப்பட்டதோ அது போலவே இந்நாடுகளிலும் இப்பழிவாங்கும் உணர்வுகள் தம் குறுகிய அரசியல் நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டது. மதங்கள், மனிதவாழ்வினை உன்னதமானதாக ஆக்கும் உயர் சித்தாந்தக் கருத்துக்களை போதனை செய்வதாகக் கூறப்படுகின்ற போதிலும் அதன் செயற்பாட்டுவடிவம், அந்தந்தக்காலகட்டங்களில் அந்தந்தநாடுகளில் நிலவிய அரசாட்சிகளுக்கமைய, அவற்றின் நோக்கங்களுக்காகப் பயன்பட்டுப் போனமையே வரலாற்று உண்மையாகும்.

□

**இராமர் கோவிலுக்கு அஸ்திவாரம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதவாதச் சேற்றில் பாரதீய ஜனதா

"அசிங்கமான அரசியல் ஆதாயத்திற்காக, ஒருபிரச்சினையை வலுக்கட்டாயமாகக் கையாள்கிறார்கள் என்பது அப்பட்டமாகத்தெரிகிறது. கடந்த இரண்டு ஆண்டுகளாக பாரதீய ஜனதாக் கட்சிக்கு அகோரமான வோட் பசிதான். அரசியல் ஆதாயத்திற்காக கோயில் பிரச்சினையை கொழுந்து விட்டெரியச் செய்ய பா. ஜ. கட்சி தலைகீழாக நிற்கிறது நிட்சயம். சர்ச்சை அயோத்தியில் கோயில் கட்டுவதல்ல." - இந்தியா டுடே. 6 - 20 ஆவணி 92.

பாராளுமன்றத்தில் இரண்டாக இருந்த ஆசனங்களை, 1989 பொதுத் தேர்தலில் 86 ஆக உயர்த்த காரணமாக இருந்தது. 16ம் நூற்றாண்டில் பாபரால் கட்டப்பட்ட மசூதி உள்ள இடத்தில் இராமர் கோவில் கட்டுவதென்ற தேர்தல் பிரச்சாரம் தான். வி. பி. சிங் ஆட்சியின் போது மண்டல் கமிசன் பரிந்துரைகளை - வேலை வாய்ப்பில் பிற்படுத்தப்பட்டோருக்கு 27 வீத ஒதுக்கீடு. - அமுல் படுத்தப்போவதாக அறிவித்ததும், பா. ஜ. கட்சி, இந்த முடிவு தனது இந்து வோட்டுக்களைக் கூறுபோடும்என்ற அச்சம் காரணமாக பதிலடியாக மீண்டும் இந்துத்துவத்தைத் தூக்கிப்பிடித்தது. தாம் ஆட்சியைப் பிடிப்பதற்கு மண்டல் பிரச்சினை, பெரும் அச்சுறுத்தலாக இருக்கும் என்பதைப் புரிந்து கொண்ட பா. ஜ கட்சி, அத்வானி தலைமையில் அயோத்திக்கு ரதயாத்திரை செல்வதன் மூலம் அவரை ஒரு தேசியத்தலைவராகக் காட்ட முனைந்தது.

இந்த அலையில் பா.ஜ.க, R.S.S, V.H.P, பஜ்ரங்தள் ஆகிய இந்து மதவாத அமைப்புகள் ஒருங்கிணைந்தன. ரத யாத்திரை, "ராமர் மேல் ஆணை. அதேஇடத்தில் கோவில் கட்டுவோம்" எனக் கோசங்களை முன் வைத்தபடி சென்றது. யாத்திரை உத்தரப்பிரதேச எல்லையை அடைந்தபோது பீகார், உத்தரப்பிரதேச மாநிலங்களில் கிட்டத்தட்ட 200000 பா.ஜ.கட்சி, ஆர். எஸ். எஸ் உறுப்பினர்கள் கைதுசெய்யப்பட்டனர். இதற்கு முன்னர் ஒரு பொழுதும் இவ்வளவு தொகையானோர் கைதுசெய்யப் படவில்லை.

அயோத்திக்குச் சென்ற கரசேவகர்கள் பாதுகாப்புப் படைகள் ஏற்படுத்திய தடைகளை உடைத்தெறிந்து, ஜெய் ராம், "ராமரின் குழந்தைகள் நாம்" எனக் கோஷம் எழுப்பியபடி மசூதியின் மேலேறி வெற்றிக்கொடியைப் பறக்கவிட்டனர். இதன் போது மசூதியின் சில பகுதிகள் சேதமாக்கப்பட்டது. இந்த ரகளையின் பின் கைதான அத்வானி "அயோத்தியில் கோவில் கட்டுவது தேசத்தின் நம்பிக்கை பற்றிய பிரச்சினை. அரசில்பிரச்சினையல்ல" என்று குறிப்பிட்டார்.

இதனைத்தொடர்ந்த அரசியல்மாற்றங்களைத் தொடர்ந்து, 1991இல் நடந்த பொதுத் தேர்தலில் 120 பாராளுமன்ற ஆசனங்களையும், உத்தரப்பிரதேசம் உட்பட நான்கு மானிலஆட்சியையும்



அயோத்தியில் கோவில் கட்டுவதென்பது, தேசத்தின் நம்பிக்கை பற்றிய பிரச்சினை

பா.ஜ.கட்சி கைப்பற்றியது. இந்தத் தேர்தலில் பா.ஜ.கட்சி தனது தேசியத் தன்மையை, "ஒவ்வொரு தேசத்திற்கும் சொந்தமான வழமான கலாச்சாரமும் பாரம்பரியமும் உண்டு. அது இந்தியாவில் இந்துத்தன்மை." என அத்வானியின் கூற்றின் ஊடாக வெளிப்படுத்தியது.

நான்கு மானிலங்களில் ஆட்சியைப் பிடித்தபின்பு பா.ஜ.கட்சி தன்னை ஒரு பொறுப்பான கட்சியாகக் காட்டிக்கொள்ள விரும்பியது. ராமர் கோவில் கட்ட உருவாக்கிய தொண்டர்களுக்கும் பா. ஜ. கட்சிக்கும் ஏற்பட்ட விரிசல் விஸ்வ இந்து பரிஷத் தீவிரவாதிகளூடாகவும் இந்துச்சாதுக்களூடாகவும் வெளிப்பட்டது. பா.ஜ. கட்சி உத்தரப்பிரதேசத்தில் ஆட்சிக்கு வந்து 10மாதகாலத்தில் கோவில் கட்ட எந்த முயற்சியும் எடுக்கவில்லை என வி. இ. பரிஷத் குற்றம் சாட்டியது.இதனைத் தணிக்க உ. பி. முதல்வர் கல்யாண் சிங் பாபர்மசூதி வளாகத்தில் 2.77ஏக்கர் நிலத்தை கையகப்படுத்தப்போவதாக அறிவித்தார். உயர் நீதிமன்றமும் "குறிப்பிட்ட காரணத்திற்காக அதாவது சுற்றுலா மேம்பாட்டிற்காக நிலத்தைக் கையகப் படுத்திக்கொள்ள அரசுக்கு அதிகாரம் உள்ளதெனத் தீர்ப்பளித்தது. ஆனால் மசூதிக்கமிட்டியின் வக்கீல்கள் எழுப்பிய ஆட்சேபணையினால் கையகப்படுத்திய நிலத்தை தனியாருக்கோ அல்லது அமைப்பிற்கோமாற்றவோ நிரந்தரக் கட்டம் எழுப்பவோமுடியாதென இடைக் காலத்தடை விதித்தது."

விஸ்வஹிந்துப்பரிஷத் தீவிரவாதிகள் மீண்டும் தமது கையை ஓங்கச்செய்ய பா.ஜ. கட்சி எம்.பி. யும் மானில பஜ்ரங்தள் தலைவருமான வினய் கட்டியார் தலைமையில் சர்ச்சைக்குரிய வளாகத்தில் புகுந்து (2. 11. 92இல்) மசூதிமீதுஏறி காவிக்கொடி நாட்டி சுற்றுச்சுவரைச் சேதப்படுத்தியபோது கரசேவகர்கள் கைது செய்யப்பட்டனர். இந்நிலையில் "முன்வைத்த காலைப்பின் வைப்பதென்ற பேச்சிற்கே இடமில்லை .அரசைக்காப்பாற்ற கோவில் விடயத்தில் சமரசம் செயதுகொள்ள மாட்டோம்" என பஜ்ரங்தள் தலைவர்கள் அறிக்கை விட்டனர். மீண்டும் ஆடி 92 இல் பா. ஜ.க, வி.ஹி.ப. ஆர். எஸ். எஸ், பஜ்ரங்தள் கூட்டுத்தலைமையில் கரசேவகர்கள் பாபர் மசூதியின் கிழக்குப்பக்கமாக அஸ்திவாரமேடை கட்டியதன் மூலம் நீதிமன்ற உத்தரவை உதாசீனம் செய்தனர். "கோவில் கட்ட உத்தரவிட்டது மக்கள். பா. ஜ. கட்சி அதன்படி நடக்கும்" என்றார் அதன் தலைவர் முரளி மனோகர் ஜோஷி.

இராமர்கோவில் பிரச்சினை மூலம் தேர்தலில் பெருவெற்றி பெற முடிந்தது என்றால் சட்டத்தைச் சிறிதும் யோசிக்காமல் ஒதுக்கி வைத்துவிடலாம் என ஜோஷி நினைத்தார். இந்த அடிப்படையிலேயே மார்கழி 6இல் அயோத்தியில் கூடிய கரசேவகர்களால் பாபர் மசூதி இடித்து தகர்க்கப்பட்டது. இறுதியில், தேர்தல் பிரச்சாரத்துக்காக உருவாக்கிய வியுகத்தில் சிக்கி பா. ஜ. கட்சி தானும் நெருக்கடிக்குள்ளாகி வெளியேற முடியாமல் இந்தியாவையும் நெருக்கடிக்குள் தள்ளியுள்ளது. □

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இலங்கையர்கள்

# தமது பிரச்சினைக்குத் தாமே தீர்வு காணவேண்டும்.

**இந்தியத்தூதர்-ஜா**

**35வருடங்களாக இந்திய இராஜதந்திர சேவையில் இருந் துவரும் திரு. ஜாஅவர்கள் பல ஐரோப்பிய, ஆபிரிக்க நாடுகளில் தூதுவராகப் பணியாற்றி இருக்கிறார். கடந்த இரண்டு வருடங் களாக இலங்கையில் பணிபுரிந்து வரும் ஜா, இரண்டு தடவை களாக இலங்கையில் 6 வருடம் பணியாற்றியுள்ளார். தற்போதைய சேவையுடன் ஓய்வு பெறுகின்றார்இலங்கை இனப்பிரச்சினை, இன்று நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் பல கேள்விகளுக்குப் பதிலளிக்கிறார்.**

**அருவி:** ஜனாதிபதி பிரேமதாசாவின் இந்திய விஜயத்தின் பின்பு, விடுக் கப்பட்ட கூட்டறிக்கையில் இலங்கை இந்திய ஒப்பந்தத்தைப்பற்றி ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை. இங்கு இலங்கையிலும், இந்தியாவில் சிலராலும், இது ஒப்பந்தத்தின் முடிவுக்கான அறிகுறி என வியாக்கியானம் கொடுக்கப் படுகின்றது. உண்மையில் ஒப்பந்தம் சம்பந்தமாக இந்தியாவின் நிலைப்பாடு என்ன?

**ஜா:** ஒப்பந்தத்தின் முடிவுக்கான அறி குறி எதனையுமே இந்தியா காட்ட வில்லை. அப்படி ஒரு அபிப்பிராயம் இங்கு எப்படி ஏற்பட்டதென எனக்குத் தெரியாது. நான் ஒப்பந்தத்தின் முடிவுக் கான அறிகுறி எதனையும் காணவில் லை ஏன், இது ஒப்பந்தத்தின் முடிவுக் கான அறிகுறி எனக் கருதுகின்றீர்கள்?

**அருவி:** இலங்கைஜனாதிபதியின் இந்திய விஜயத்தின் பின்பு இருதரப் பாலும் கூட்டாக விடப்பட்ட அறிக்கை யில் ஒப்பந்தம் சம்பந்தமாக ஒன்றுமே குறிப்பிடப்படவில்லை.

**ஜா:** ஆனால் இந்திய ஜனாதிபதியின் உரையிலே அதுபற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. இரண்டு வாய்க்கியங்கள். நான் ஒன்றைத் தீர்க்கமாகக் கூறவிரும் புகின்றேன். இந்திய அரசாங்கத்தைப் பொறுத்த வரையில்ஒப்பந்தம் இன்னும் செல்லுபடியானது. அது இறக்க வில் லை. அகாலமரணம் அடையவுமில் லை. செல்லுபடியாகாது என்ற கேள் விக்கே இடமில்லை.

**அருவி:** ஆனாலும், ஒப்பந்தம் கைச்சாத் திடப்பட்டு 5 வருடங்களாகிவிட்டன. ஒப்பந்தத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட மாகாணசபைகளின் ஆட்சிக்காலமும் முடிவு பெறுகின்றது.



**ஜா: நீங்களே உங்கள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுங்கள். மூன்றாவது நபரின் பிரசன்னம் விரும்பத்தக்கதல்ல.**

அதே நேரத்தில் தேசிய இனப்பிரச் சினைக்கு தீர்வாக உருவாக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மாகாணசபை 15 மாதங்களில் தனது ஆயுளை முடித்துக்கொண்டது. இதனால் ஒப்பந்தம் நடைமுறையில் ஒன்றையும் சாதிக்கவில்லை...

**ஜா:** ஒப்பந்தம் சரியாக நடை முறைப் படுத்தப்பட்டதா? அல்லது ஒருபகுதி தான் நடைமுறைப்படுத்தப்பட்டதா? அல்லது நடைமுறைப்படுத்தப்படவே இல்லையா? என்பதையிட்டு கருத்து வேறுபாடு இருக்கலாம். ஆனால் ஒப்பந்தம் ஒன்று உண்டு என்பதில் கருத்து வேறுபாடு இருக்க முடியாது. ஒப்பந்தம் இறக்க வில்லை. அது உயிருடனும் உதை த்துக்கொண்டும் தான் இருக்கிறது.

**அருவி:** இலங்கைத் தமிழ் மக்களின் பெரும்பான்மையினரின் கணிப்பு என்னவென்றால், இந்தியா இலங் கைத்தமிழ் மக்களைக் கைகழுவி விட்டது. குறிப்பாக திரு ராஜீவ் காந்தியின் கொலையின் பின்பு, இந்தியா, இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையின் மேல் அதிகம் அக்கறை காட்டவில்லை என்பது தான்.

**ஜா:** இலங்கையில் ஏற்படும் எந்தவொரு பிரச்சினையையும் இந்தியா அலட்சியம் செய்யவும் முடியாது. புறக்கணிக்கவும் முடி யாது. ஏனெனில் நாம் பூகோள ரீதியாக மட்டுமன்றி பல விடயங் களில் நெருக்கமாக உள்ளோம். ஆகவே அக்கறை கொள்ள வில் லையென்பது தவறு. மேலும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில், குறிப்பிட்ட விடயம் சம்பந்தமாக பகிரங்கமாக ஒன்றும் நடைபெறவில்லை யென்பதால் அவ் விடயத்தின் மீது அக்கறை கொள்ளவில்லை யென்று பொருளாகாது. திரை மறைவிலும், அமைதியாக ஆடம் பரமற்றமுறையிலும் செயற்பட வேண்டிய காலங்களும் உண்டு.

**அருவி:** ஆனால் தமிழ்மக்களின் பொதுவான அபிப்பிராயம் என்ன வென்றால் இந்தியா அக்கறை கொள்ள வில்லை.

**ஜா:** அது தவறு. தயவு செய்து அந்த அபிப்பிராயத்தை மாற்ற உதவுங்கள்.

**அருவி:** 1983ம் ஆண்டிற்குப்பின் கணிச மான ஈழத்தமிழ் அகதிகள் இந்தியாவிற்கு வந்தார்கள். மொழியாலும் கலாச்சா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aayanaham.org



**இந்தய இலங்கை ஒப்பந்தம் இன்னும் சாகவில்லை**

ரத்தாலும் ஒன்றான ஈழத்தமிழர்களின் பிரச்சினை, தமிழகத்தமிழர்களின் மத்தியில் அனுதாப உணர்வலைகளை ஏற்படுத்தியது. ஈழத்தமிழர் பிரச்சினை முற்று முழுதாக இலங்கையின் உள்நாட்டு விவகாரமல்ல என்ற நிலைப்பாட்டை இந்திய அரசு கொண்டிருந்தது. அத்துடன் ஈழத்தமிழ் மக்களின் பாதுகாப்பையும் கௌரவத்தையும் அவர்களது நியாயமான அபிலாசைகளையும் ஐக்கிய இலங்கைக்குள் உறுதிப்படுத்தும் ஒரு தீர்வுக்குப் பின்னரே அகதிகள் திருப்பி அனுப்பப்படுவர் என்று கூறியுள்ளது. ஆனால் தற்சமயம் தொடர்ந்து கொண்டிருக்கும் யுத்தத்தின் மத்தியில் அவர்களின் உயிர்களுக்குப் பாதுகாப்பற்ற சூழ்நிலையில், எந்த ஒரு அரசியற்தீர்வும் புலப்படாத நிலையில் ஆயிரக்கணக்கான அகதிகள் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இதையிட்டு உங்கள் கருத்தென்ன?

**ஜா:** தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு முகாம்களில் இருந்து 33,000 அகதிகள் இலங்கைக்குத் திரும்புவதற்கு சம்மதம் தெருவித்துள்ளனர். அவர்கள் தாமாகவே முன்வந்துள்ளனர். மனதுக்குள் அவர்கள் என்னென்ன நினைக்கின்றார்களோ தெரியாது. ஆனால் யாரையும் நாம் கட்டாயப்படுத்தவில்லை. கட்டாயப் படுத்துவதென்றால் ஏன் 33,000. முழு 90,000 அகதிகளையும் கட்டாயப்படுத்தியிருக்கலாமே. சிலர் உண்மையிலேயே திரும்பிவர எண்ணியிருக்கலாம். வேறுபல சொந்தக்காரணங்கள் இருக்கலாம். யாருமே ஒரு வேற்று நாட்டில் அகதிமுகாம்களில் நீண்டகாலம் வாழ இஷ்டப்படமாட்டார்கள். ஆகவே யுத்தத்தின் மத்தியிலும் திரும்பி வருகின்றார்கள் என்பது அவர்கள் சொந்த விருப்பத்தின் பெயரிலேயே.

**அருவி:** ஐரோப்பாவிலும், கனடாவிலும் இந்தியாவை விட கூடுதலான இலங்கைத்தமிழ் அகதிகள் உள்ளனர். அந்த நாடுகள் அவர்களைத் திருப்பி அனுப்பவில்லை. ஆனால், இந்தியா மட்டும்....

**ஜா:** இந்தியாவுக்குள்ள பிரச்சினை ஐரோப்பியநாடுகளுக்கில்லை. தீவிரவாதம். அது அங்கில்லை கணிசமான தொகை அகதிகள் ஓரிடத்தில் இருந்தால் அங்கு தீவிரவாதம் வளர்வதற்கு சாத்தியங்கள் அதிகம். ஆகவே தீவிரவாதம் தோன்றுவதற்கான அபாயத்தைக் குறைக்கவேண்டுமானால் அகதிகளின் எண்ணிக்கையும் குறைக்க வேண்டும். அத்துடன் ஐரோப்பாவில் உள்ள அகதிகள் யாரும் திரும்பிவர நினைக்கமாட்டார்கள். அவர்கள் அங்கு வேலைசெய்கிறார்கள். பணம் சம்பாதிக்கிறார்கள். ஆனால் இந்தியாவில் உள்ள அகதிகள் அப்படியல்ல. அவர்களால் தொழில் செய்யமுடியாது. வேறு வருமானம் கிடையாது.

**அருவி:** ஆனாலும் ஐரோப்பியநாடுகளில் இருந்து எந்தவொரு அகதியும் திருப்பியனுப்பப்படவில்லை. அகதிகள் அந்தஸ்து நிராகரிக்கப்பட்டாலும் மனிதாபிமான அடிப்படையில் அவர்களை அங்கே தங்குவதற்கு அனுமதியளித்துள்ளனர்.

**ஜா:** எந்தவொரு நாடும் அன்னிய அகதிகளை இருகரம் நீட்டி வரவேற்றது கிடையாது. ஐரோப்பாவில் அகதிகள் வரவேற்கப்படுகிறார்கள் என்பது தவறு. உண்மையில் அவர்கள் அகதிகளை பொறுத்துக்கொள்கிறார்கள். ஆனால் சுமை அதிகமானால் நிட்சயமாக அகதிகளையகற்றுவதற்கு வழிகளைக் காண்பார்கள். ஐரோப்பாஅகதிகளை வரவேற்கிறதென்றும் இந்தியா அவர்களை வெளியேற்றுகிறதென்றும் கூறுவது தவறு. ஈழத்து அகதிகள், இந்தியாவில்தான் கூடுதல் அங்கீகாரம் பெற்றுள்ளார்கள். ஐரோப்பாவிலல்ல.

**அருவி:** கிழக்குமாகாணத்தில் இன்று யுத்த[illegible]க்கிறது. 1987ம் ஆண்டிற்கு முன்பிருந்ததை விட உயிரபாயம் கூடுதலாக உள்ள இந்த நிலையில் அகதிகளை அந்த இடங்களுக்குத் திருப்பியனுப்பலாமா?

**ஜா:** அகதிகள் தங்கள் சுயவிருப்பத்தின் பேரில்தான் திரும்புகிறார்கள். ஒரு வேற்றுநாட்டில் அல்லல்படுவதை விட தனது சொந்தநாட்டில் இறந்தாலும் பரவாயில்லை என்று கூட நினைக்கலாம். அல்லது வேறு காரணிகள் இருக்கலாம் அவர்கள்திரும்புவதற்கு. அகதிகள் திரும்பிவருவதற்கான சிறந்த சூழ்நிலை தற்போது இலங்கையில் உள்ளதென்று நான் கூறவில்லை. ஆனால் அவர்களை கட்டாயமாக இந்தியா திருப்பியனுப்புகின்றதென்பதில் உண்மையில்லை.

**அருவி:** ராஜிவ்காந்தியின் படுகொலை இதற்கான காரணமாக இருக்குமா?

**ஜா:** இல்லை. அப்படி என்றால் முழு 90,000 அகதிகளையுமல்லவா அனுப்ப வேண்டும். ஏன் 33,000.

**அருவி:** பாராளுமன்றத் தெரிவுக்குழுவிற்கூடாக பேச்சுவார்த்தைகள் மூலம் ஒரு தீர்வைக்காண்பதற்கான முயற்சிகளில் சகல தமிழ்க்கட்சிகளும் இறங்கியுள்ள இந்த வேளையில் புலிகளுக்கும் அரசுக்கும் இடையில் இரகசியப்பேச்சுவார்த்தைகள் நடப்பதாக வதந்திகள் அடிபடுகின்றன. இவையிரண்டையும் பற்றி உங்கள் கருத்து என்ன?

**ஜா:** தெரிவுக்குழுக்கூட்டங்கள் கடந்த ஒருவருடமாக நடைபெறுகின்றது. அவை நிச்சயமாகத் துரிதப்படுத்த வேண்டும். அதே நேரத்தில் திரு. மங்கள முனசிங்க மும்மரமாக இதில் ஈடுபட்டுள்ளார். மிகவும் சிக்கலான ஒரு சூழ்நிலையில் அவர் செயற்படவேண்டியுள்ளது. அப்படியிருந்தும் அவரால் தீர்வுக்கான ஏதோவொரு வகை அடிப்படையை உருவாக்கமுடிந்துள்ளது. ஒருபக்கம் ஒரு தீர்வை முன்வைக்கும் பொழுது மறுதரப்பினர் அதைக்குழப்புவதில்தான் மும்மரமாக நிற்பதையும் அவதானிக்கமுடிகின்றது. இரு தரப்பிலும் பரஸ்பர நம்பிக்கையில்லை. மாறாக ஆழ்ந்த சந்தேகங்களேயுள்ளன. இந்தப் பின்னணியில்தான், திரு மங்கள முனசிங்க வேலை செய்யவேண்டியுள்ளது. சிங்களத்தரப்பினரில் வடகிழக்கு இணைப்புச் சம்பந்தமாக ஒரு சந்தேகத்தையே காணக்கூடியதாக உள்ளது. ஒருசிலர் இதிலிருந்து விடுபட்டாலும் அடிப்படையில் வடக்குக்கிழக்கு [illegible]ணைப்பையிட்டு, வலுவான சந்தேகமும், அதனால் எதிர்ப்பையும் காணக்கூடி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யதாக உள்ளது. இந்தச்சிக்கல்களின் மத்தியில் அவர் ஏதோவொரு வகை ஆவணத்தை தயார்செய்துள்ளார். ஆனால் நீண்டகாலமாக இது இழுபட்டுக்கொண்டே போகிறது. நிட்சயமாகத் துரிதப்படுத்த படவேண்டும்.

**அருவி:** கடந்த 40 வருட அனுபவங்களில் இதைத் தமிழ்மக்கள் பலமுறை கண்டுள்ளனர். – கிழித்தெறியப்பட்ட ஒப்பந்கள், நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள்.

**ஜா:** ஆனால் இம்முறை சில வித்தியாசங்கள் உண்டு. இம்முறை வேறு சில உறுத்துகின்ற காரணிகள்உண்டு. அரசியல் பொருளாதார இராணுவ நெருக்கடிகள் போன்றவை 1956இல் இல்லை. உலகவங்கி, சர்வதேசநாணய நிதியம் அல்லது கணிசமான இலங்கை அகதிகள் உள்ள ஐரோப்பிய நாடுகள் போன்ற சர்வதேசக் காரணிகளும் உள்ளன. இராணுவச்செலவுகள் பொருளாதாரத்தை உறிஞ்சுகின்றது. இராணுவத்தில் உயிரிழப்புகள் அதிகரித்துள்ளது. ஆகவே எந்த ஒரு அரசும் இப்படியான அழிவுகள் நிறைந்த ஒரு பிணக்கை நீண்ட நாட்களுக்கு விட்டுவைக்க முடியாது. உயிரிழப்புகள் இருதரப்பிலும் அதிகரிக்கும் போது நிட்சயம் அதைத்தடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கப்படும். ஆகவே தீர்வுக்கான நகர்வுகள் நிகழும். உங்கள் கேள்வியின் இரண்டாவது பகுதிபற்றி: இரகசியப் பேச்சு வார்த்தைகள் பற்றி பல வதந்திகள் கடந்த சில மாதங்களாக அடிபடுகின்றன. உண்மையில் அவைகளின் உண்மை நிலை பற்றி எனக்குத்தெரியாது.

**அருவி:** இலங்கை–இந்திய ஒப்பந்தத்தின் விளைவாக உருவாகிய 13வது திருத்தச் சட்டம் பூரணமாக நடைமுறைப்படுத்தப்படவில்லை. பாராளுமன்ற விவாதங்கள் பலவற்றில் த. வி. கூட்டணியும், ஈழமக்கள் புரட்சிகர முன்னணியும் 13வது திருத்தச்சட்டத்தை அரசு திட்டமிட்டே சிதைத்துவருவதாக பலமுறை குற்றம் சாட்டியுள்ளன. உதாரணமாக பிரதேசச் செயலகங்கள் நிறுவும் பிரேரணையைச் சொல்லலாம். அரசு அதிகாரப் பரவலாக்கல் பற்றிப் பேசுகின்றது. அதிகாரப்பகிர்வையல்ல. இலங்கை இந்திய ஒப்பந்தத்திற்கு உத்தரவாதம் அளித்தவர்கள் என்ற ரீயில் 13வது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்படாததையிட்டு உங்கள் அபிப் பிராயம் என்ன?



**மீண்டும் இந்தியப்படை: நடைமுறைச்சாத்தியமற்றது**

**ஜா:** இந்தவருடம் ஐப்பசி மாதத்தில் எமது ஜனாதிபதிதமது உரையில் இது பற்றிக் கூறியதை நினைவுபடுத்த விரும்புகின்றேன். அதில் 13வது திருத்தச்சட்டத்தின் கீழ், இன்னும் கூடுதலான அதிகாரப்பகிர்வின் தேவையைப்பற்றிக் கூறியுள்ளார்.

**அருவி:** சர்வதேச சக்திகள் சில எல். ரீ.ரீ.ஈ க்கும் இலங்கை அரசுக்கும் இடையில் மத்தியஸ்தம் வகிப்பதற்கான விருப்பத்தைத் தெரிவித்துள்ளன. இதையிட்டு இந்திய அரசின் நிலைப்பாடு என்ன?

**ஜா:** உங்கள் இரண்டாவது கேள்வியுடனும் இது தொடர்புடையது. இந்தியாவில் விடப்பட்ட கூட்டறிக்கையில், இலங்கையர்கள் தமது பிரச்சினையைத் தாமே தீர்த்துக்கொள்ளவேண்டுமென குறிப்பிடப்பட்டிருந்தது. அதன் அர்த்தம் யாரும் வந்து என்னவும் செய்யலாம் என்பதல்ல. வெளிசக்திகளின் நேரடியான அல்லது மறைமுகமான தலையீடுகள் இல்லாமல் இலங்கையர்கள் தாமே தீர்வைக்காணவேண்டுமென்பதே அதன் அர்த்தம்.

**அருவி:** அதாவது ஐரோப்பியர்களோ, அவுஸ்திரேலியர்களோ வந்து மத்தியஸ்தம் வகிப்பதை இந்திய அரசு விரும்பவில்லையா?

**ஜா:** ஐரோப்பியர்களோ, அவுஸ்திரேலியர்களோ என்று நாம் யாரையும் சுட்டிக்காட்டவில்லை. நாம் சொல்வது என்ன வென்றால் நீங்களே உங்கள் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளுங்கள். அதாவது மூன்றாவது நபரின் பிரசன்னம் விரும்பத்தக்கதல்ல.

**அருவி:** அது இந்தியாவையும் சேர்த்துத்தானே?

**ஜா:** நிட்சயமாக. அந்த கூட்டறிக்கை அப்டித்தான் கூறுகின்றது. அப்படித்தான் நாம் விளங்கிக்கொள்கிறேம்.

**அருவி:** ஆனால் கடந்த 40வருடங்களாக எமது பிரச்சினைகளை நாம் எமக்குள் தீர்க்கமுடியவில்லை. அத்துடன் பெரும்பான்மையான சிங்களக்கட்சிகள் ஒரு இராணுவத்தீர்வையே முன்வைக்கின்றன. எல். ரீ. ரீ. ஈ யும் ஆயுதப் போராட்டத்தைக் கைவிடவில்லை....

**ஜா:** நான் இங்கு அரசியல்தீர்வையே வலியுறுத்த விரும்புகின்றேன். இராணுவத்தீர்வையல்ல. கடந்த 2வருடங்களாக நாம் இதையே கூறிவருகின்றேம். வன்முறையைக்கைவிட்டவர்களுடன் ஒரு அரசியல் தீர்வுக்கு வாருங்கள். இனிமேல் கைவிடப்போகின்றவர்களோடல்ல. இதை நாம் தெளிவாகக் கூறியுள்ளோம்.

**அருவி:** எமக்குள் நாமே தீர்வைக் காணவேண்டுமென்பதை, பெரும்பான்மையான சிங்களக்கட்சிகள் இராணுவத்தீர்வுதான் என்று விளங்கிக்கொண்டுள்ளன. அதாவது 1958, 1977, 1981, 1983ம் ஆண்டுகளில் நடந்த கலவரங்கள் மூலமோ, கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்கள் மூலமோ, கொக்கட்டிச்சோலைப் படுகொலைகள் மூலமோ சிங்கக் கொடியைப் பறக்கவிடவேண்டும்....

**ஜா:** இல்லை, இராணுவத்தீர்வு சாத்தியமாகாதென்பதை அவர்கள் உணர்ந்துகொண்டுள்ளார்கள் என நினைக்கிறேன். இராணுவத்தீர்வுதான் சரியென்று 4, 5 வருடங்களுக்கு முன்பு எண்ணியிருக்கலாம். இப்போ அப்படியல்ல என்றுதான் எண்ணுகின்றேன்.

**அருவி:** எல்.ரீ.ரீ.ஈயை இராணுவரீதியில் பலவீனப் படுத்தியபின்பு அரசாங்கம் ஒரு குறைந்தபட்சத்தீர்வை, அதாவது, மிகக்குறைந்த அதிகாரங்களைக்கொண்ட தீர்வை முன்வைக்கலாமல்லவா?

**ஜா:** ஆனால் இரு தரப்பாரும் பலவீனப்பட்டுள்ளார்கள் என்றே நான் கேள்விப்பட்டேன்.

**அருவி:** முதலில் எல்.ரீ.ரீ.ஈயைப் இராணுவரீதியில் பலவீனப்படுத்துவோம், பின்பு அவர்களைப்பேச்சுவார்த்தை மேசைக்களைப்போம். என்று சிங்களத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**அகதிகளை இந்தியா கட்டாயப் படுத்தவில்லை?**

தரப்பில் இருந்து பலமுறை கூறக் கேட்டுள்ளோம்.

**ஜா:** உண்மையிலேயே இலங்கையரசு அப்படி நினைத்தால், அதாவது எல்.ரீ.ரீ.ஈயை பலவீனப்படுத்தி பலவந்தமாகத் தீர்வொன்றைக் காணமுடியுமென்றெண்ணினால், அப்படிப்பட்ட ஒரு மனோபாவத்தையோ அல்லது மன உணர்வையோ ஏன் இந்திய அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும்? எந்தவொரு அரசாங்கமும் இப்படியொரு மன உணர்வை வெளிப்படுத்தினால், எந்தவொரு நாடும், தனது நாட்டின் ஒருபகுதியில் உள்ள கிளர்ச்சிக்காரர்களை, முளங்காலில் பேச்சுவார்த்தைக்களைந்து அல்லது இழுத்து வரவேண்டுமென்ற இந்த மனோபாவத்தை ஒருவருமே எற்றுக்கொள்ள மாட்டார்கள்.

**அருவி:** திரு. ராஜீவ்காந்தியின் படுகொலைக்கு முன்பு எல்.ரீ.ரீ.ஈ.கரும் இந்திய அரசுக்குமிடையில் ஏதோஒரு விதத்தில் தொடர்பிருந்ததல்லவா?

**ஜா:** 1987ம் ஆண்டிற்குப் பின் எந்தவொரு தொடர்பும் இருக்கவில்லை. ராஜீவ் காந்தி கொல்லப்பட்டது 1991ம் ஆண்டு.

**அருவி:** ஆனால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பின்பு பல பேச்சுவார்த்தைகள் நடந்தனவே?

**ஜா:** ஒப்பந்தத்தின் பின்பு ஓரிருமாதங்கள் தான். ஐப்பசி 87க்குப்பின் எந்தவிதத் தொடர்பும் இருக்கவில்லை. நான் சொல்லவிரும்புவது இது தான் எல்லாத்தரப்பினரும் இந்தநாட்டில் அமைதியை, சமாதானத்தை நிலைநாட்டப் பங்களிப்புச் செய்யவேண்டும். இந்த நாட்டில் சகஜநிலைதிரும்புவது மிக அவசியம். தமிழ்மக்களின் நியாயமான அபிலாசைகள் திருப்திப்படுத்தப்பட்டால் மட்டுமே அதுவும் விரைவில் நடந்தால் மட்டுமே சாத்தியமாகும். இது தான் எங்கள் நிலைப்பாடு அன்றும் இன்றும். அதில் மாற்றம் கிடையாது. இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் அதற்கான அடிப்படைகள் உருவாக்கப்பட்டுள்ளது அரசியல் யாப்பில் 13வது திருத்தச்சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. இவற்றில் இருந்து ஆரம்பிக்கலாம். அமைதியை நிலைநாட்டவேண்டுமென்ற உண்மையான அவா இருந்து, இதயசுத்தியுடன் செயற்பட்டால் இருதரப்பினரும் அங்குமிங்கும் சில விட்டுக்கொடுப்புகள் செய்து, சிலவற்றைக் கொடுத்து, சிலவற்றை எடுத்துச் செயற்பட்டால் நிட்சயம் தீர்வைக்காண முடியும்.

**அருவி:** நன்று. பாராளுமன்றத் தெரிவுக் குழு இப்படிப்பட்ட கொடுத்தல், எடுத்தல் போன்ற விடயங்களை பேசுவதற்கு சிறந்தஇடமல்லவா. இருந்தும் பிரதான சிங்களக்கட்சிகள் தங்கள் தீர்வுகளை, யோசனைகளை முன்வைக்கவில்லையே.

**ஜா:** யுத்தம் நடந்துகொண்டிருப்பதால் அவர்களால் அதைச் செய்ய முடியாமல் இருக்கலாம். அதாவது தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை தீர்ப்பதற்கான சமாதான சூழ்நிலையொன்று இல்லாததால் இருக்கலாம். ஒருவர் சொல்லலாம், தமிழ்மக்களின் பிரச்சினை தீர்க்கப்படவில்லை, அதனால்தான் யுத்தம் நடக்கிறது என்று. மற்றவர் சொல்லலாம் யுத்தம்நடக்கிறது, அதனால்தான் அபிலாசைகள் தீர்த்து வைக்கும் சூழ்நிலையில்லை என்று.

**அருவி:** ஆனால் யுத்தம் என்பது ஒரு பிரச்சினையின் ஆரம்பமல்ல. அது ஒருபிரச்சினையின் விளைவாகத்தான் இருக்கமுடியும்.

**ஜா:** அது உங்கள் கருத்து. ஏனையோர் வேறுவிதமாகப் பார்க்கலாமல்லவா?

**அருவி:** இவ்வளவு அழிவுகளுக்கும் உயிரிழப்புகளுக்கும் பின் கூட, இலங்கையரசின் பேரினவாதக்குணாம்சம் மாறாமல் இருப்பது தான் காரணமாக இருக்குமோ? அதனால்தான், நீங்கள் கூறிய கொடுத்தல், எடுத்தல், விட்டுக்கொடுத்தல்போன்றவை நிகழாமல் இருக்கின்றது. கொழும்பில் உங்கள் பல வருட அனுபவங்களின் அடிப்படையில் உங்கள் கருத்தென்ன?

**ஜா:** இதைப்பற்றி நான் கருத்துக்கூற விரும்பவில்லை.

**அருவி:** கடந்த 2 1/2 வருடங்களாக கொழும்பில் கடமைபுரியும் உங்களால், இனப்பிரச்சினைக்கான தீர்வுக்கு ஏதாவது பங்களிப்புச் செய்ய முடிந்ததா?

**ஜா:** தனிப்பட்ட ரீதியில் யாராலும் எந்தவித பங்களிப்பும் செய்ய முடியாது. ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதில் இருந்து பல மாற்றங்கள் நடந்துவிட்டது. அத்துடன் இப்பிரச்சினையின் ஒரு தரப்பான எல்.ரீ.ரீ.ஈ உடன் எமக்கு எந்தவிதத்தொடர்பும் இல்லை. சம்பந்தப்பட்ட சகலரும் ஏதாவதொரு விதத்தில் தீர்வைநோக்கிச் செயற்பட்டால் மட்டுமே, பங்களிப்புகள் வெற்றியளிக்கும். அதுதான் இங்கில்லையே. ஆனால் அதே நேரத்தில் நிலமை இன்னும் மோசமடையவிடாமல் தவிர்ப்பதற்கும், இரு நாடுகளின் உறவுகளிலும் இன்னும் விரிசல்கள் தோன்றாமல் தடுப்பதிலும் பங்களிக்க முடிந்துள்ளது. முன்பு இருந்தநிலையல்ல இன்று உள்ளது. இறையநிலையில் தனிப்பட்ட ஒருவரின் பங்களிப்பால் பெரிதாக ஒன்றையும் சாதிக்கமுடியாது.

**அருவி:** சர்வதேச சக்திகளின் உதவியோடு ஒரு சமாதானத்தீர்வுக்கு வந்தார்களானால் அதை அமுல்ப்படுத்த ஒரு கருவி தேவை. அதாவது இந்திய அமைதிகாக்கும் படை, ஒப்பந்தத்தை அமுல்ப்படுத்தவந்தது போல. அப்படியானால் எப்படியான ஒரு இராணுவசக்தியால் இது முடியும்? ஐக்கிய நாடுகள் சபையால் முடியுமா?

**ஜா:** இல்லை. ஐ.நா சபையால் இது முடியாது. அவர்களுக்கு இப்படிப்பட்ட விடயங்களில் அனுபவம் இல்லை.

**அருவி:** சார்க் நாடுகளின் சார்பில் ஒரு படை...

**ஜா:** அந்தப்பேச்சிற்கே இடமில்லை.

**அருவி:** மீண்டும் இந்தியப்படையா?

**ஜா:** இது மிகவும் நடைமுறைக்கு சாத்தியமற்ற, அனுமானிக்கப்பட்ட கேள்வி.

**அருவி:** தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகள், பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானமுறையில் நிறைவேற்றப்படுமா? இலங்கையில் இந்தியத் தூதுவராக இருந்த உங்கள் அனுபவங்களின் அடிப்படையில், இதைவிட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அரசியற்தீர்வையே வலியுறுத்துகின்றேன் இராணுவத்திர்வையல்ல

உங்கள் கணிப்பீடு என்ன?

**ஜா:** விட்டுக்கொடுக்க இயலாத நிலைப்பாடுகளை இருதரப்பினரும் கொண்டிருப்பது மிகவும் துர்அதிஸ்டமானது. முதலாவது கடந்த 30, 40 ஆண்டுகளாக இத்தீவில் நடந்தவை, தமிழ்மக்களின் நம்பிக்கையை வென்றெடுப்பதற்கு உதவவில்லைஎன்பதை சிங்களப்பெரும்பான்மையினர் உணரவேண்டும். அதற்கான காரணங்கள் எதுவாக இருப்பினும் தமிழ்மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கவில்லை என்பது கசப்பான உண்மை. இந்த யதார்த்தை உணர்ந்து அதை நிவர்த்திசெய்வதற்கான மார்க்கங்களைக்காண வேண்டும். இன்னும் அதற்குக்காலம் கடந்து விடவில்லை. ஒரு ஐக்கிய இலங்கைக்குள், தமிழர்களுக்கு சமமான உரிமைகள் வழங்கப்பட வேண்டும் என்று கூறும் சிங்களவர் பலர் இன்று உள்ளனர். ஆனால் இவர்கள் 15 வருடங்களுக்கு முன்னர் இப்படிக் கூறியிருக்க மாட்டார்கள். இலங்கையில் ஏற்படும் எந்தவொரு ஸ்திரமற்ற நிலைமையும், நம்நாட்டில் நிட்சயமாகப் பிரச்சினைகளைத்தோற்றுவிக்கும். இதனால் தான் நாம் இதில் தலையிடவேண்டி வந்துள்ளது. இந்த யதார்த்த உண்மையைப் புரிந்து கொள்ள வேண்டும். 58ம் ஆண்டிலும் 60ம் ஆண்டுகளிலும் தமிழ மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காண்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டன. அதேநேரம் சிங்கள மக்களின் எல்லா அமைப்புகளும் பிக்கு சங்கமோ அல்லது எந்த சங்கமாயிருந்தாலென்ன, இதுவரை தமிழ்மக்களின் நியாயமான பிரச்சினை தீர்க்கப்படவில்லை என்பதை விளங்கிக் கொள்ளவேண்டும். அதேநேரத்தில் தமதுநாடு துண்டாடப்படுவதை எந்த சிங்களவரும் விரும்பமாட்டார்கள் என்பதையும், சிங்களமக்கள் மத்தியில் சமஷ்டி என்ற சொல்லை ஒருவித பயத்துடன் நோக்குகின்றார்கள் என்பதையும் தமிழர்கள் புரிந்துகொள்ள வேண்டும். இந்த உலகத்தில் சமஷ்டி அமைப்பைக் கொண்ட எத்தனையோ நாடுகள் உள்ளன. அமரிக்கா, ஜேர்மெனி, அவுஸ்திரேலியா எல்லாமே சமஷடிக் குடியரசுகள் தான். தமிழர்களும் முக்கியமாக, தனிநாடு, பாரம்பரியபிரதேசம் என்று கூறுபவர்களும் சிங்களமக்களின் பயத்தையும் புரிந்து கொள்ளவேண்டும். யதார்த்தத்தில் நிலைமைகள் எப்படி இருக்கின்றனவோ அப்படியே ஏற்றுக்கொள்ள வேண்டும். எப்படி இருக்கவேண்டும் என்பதல்ல எப்படி இருக்கிறது என்பதைத்தான் உணரவேண்டும் இந்த அடிப்படையில் கடந்த 40 வருடங்களில் இலங்கையில் பெரியமாற்றம் ஏற்பட்டுள்ளதாக எனக்குத் தெரியவில்லை.

**அருவி:** கடந்த 6 அல்லது 7 வருடங்களில் தமிழ் மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துவிட்டார்கள். அத் துன்பங்களின், வேதனைகளின் உண்மையான நிலை உங்களுக்குத் தெரியுமா?

**ஜா:** நிட்சயமாக. யுத்தம் என்பது மிகவும் வேதனையும் துன்பமும் தரவல்லது. அதிலும் உள்நாட்டு யுத்தம் மிகவும் மோசமானது.

**அருவி:** உடல் உள ரீதியான துன்பம் ஒருபுறம், ஆனால் ஒரு தேசியஇனத்தின் அடித்தளமே சிதைக்கப்பட்டுவிட்டது. 35 லட்சம் தமிழ் மக்கள் என்று இருந்தது. 10 லட்சம் இந்தியத்தமிழர்களை அன்னியப்படுத்தி, 12 லட்சம் முஸ்லீம் தமிழர்களை அன்னியப்படுத்தி, 3 லட்சம் அகதிகள் ஐரோப்பாவில், 2லட்சம் இந்தியாவில், 31/2லட்சம் சொந்தநாட்டில் அகதிகளாக. இது தான் மிகவும் துயரமானது.

**ஜா:** நிட்சயமாக தமிழ்மக்கள் அனுபவிக்கும் வேதனைகள் துயரங்கள் மிகவும் கொடியது. 15,16 வயதுச் சிறுவர்கள் கொல்லப்படுகின்றார்கள். எதிர்காலச் சந்ததி அழிகின்றது. இதை நான் மறுக்கவில்லை. அதனால்தான் நான் மீண்டும் சொல்கிறேன் எங்கேயாவது ஆரம்பியுங்கள். சமஷ்டி, பாரம்பரிய பிரதேசம் போன்ற பதங்களுக்கு புதிய சரியான அர்த்தங்களை உணருங்கள். இந்த நாட்டின் இரத்தை உறிஞ்சும் இந்தப்போரை முடிவுக்குக் கொண்டு வாருங்கள். தமிழர்களும், சிங்களவர்களும் மிகுந்ததுன்பங்கள் அனுபவித்து விட்டனர். இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கவேண்டாமா? ஆகவே யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளுங்கள். ஓரிடத்தில் ஆரம்பியுங்கள். இன்று உள்ள ஒரேயொரு ஆவணம் இந்திய-இலங்கை ஒப்பந்தம். அதிலிருந்து ஆரம்பிக்கலாம்.

**அருவி:** நன்றி.



**அகதிகள் திரும்புதற்கான சிறந்த சூழ்நிலை தற்போது இலங்கையில் உள்ளதென்று நான் கூறவில்லை. ஆனால் அவர்களை கட்டாயமாக இந்தியா திருப்பியனுப்புகிறதென்பதில் உண்மையில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது திரைப்படங்கள் கைப்பணிப்படைப்பிற்கு ஒப்பானவை

ஒரு படைப்பாளி தனது சக ஜீவிதர்களோடு தொடர்பை ஏற்படுத்திக்கொள்ள, "தன் அனுபவங்களை அவர்களோடு பங்கிட்டுக் கொள்ள விரும்புகிறான் இதற்காகவே அவன் படைக்கிறான்." என்று இந்தியாவின் புகழ் பெற்ற இயக்குனர்களில் ஒருவரான மலையாளத்திரைப்பட இயக்குனர் அடூர் கோபாலகிருஸ்ணன் அண்மையில் கொழும்பில், ரஷ்ய கலாச்சார நிலையத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின் போது குறிப்பிட்டார்.

நமது நாட்டில் திரைப்பட ரசனையை வளர்க்கும் பணியில் ஈடுபட்டு வரும் ஆசிய திரைப்பட மையத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இந்தக் கலந்துரையாடலுக்கு முன்னதாக அடூர் கோபாலகிருஷ்ணனின் எலிபதாயம் என்ற திரைப்படம் திரையிடப்பட்டதும், அதை ஒட்டி கலந்துரையாடல் ஆரம்பித்து, பின்னர் சினிமாத்துறை சம்பந்தமான பரந்துபட்ட கருத்துப்பரிமாற்றத்துக்கு ஏற்ற வகையில் விரிவடைந்ததும், இக்கலந்துரையாடலில் பங்குகொண்டோருக்கு பயனுடையனவாக இருந்தன.

இந்த இடத்தில் மனதை நெருடுகிற ஒரு நிகழ்வு- இக்கலந்துரையாடலில் மட்டுமல்ல இதற்குமுன்பு நடைபெற்ற பல திரைப்பட விழாக்களின் போதும் நமது தமிழ் ரசிகர்களின், கலாபிமானிகளின் பங்களிப்பு வெகு குறைவானதாகவே இருந்தது. சகோதர மொழி பேசும் கலைஞர்கள் கலாபிமானிகள் பலரை இந்நிகழ்சிகளில் காணக்கூடியதாக இருந்தது.

கேரள மாநிலத்தின், அடூர் என்ற சிறிய நகரத்தில் பிறந்த கோபாலகிருஷ்ணன், கதகளி என்ற பாரம்பரைக் கலையை வளர்த்த குடும்பப் பின்னணியைக் கொண்டிருந்தார். தனது திரைப்படங்களின் உருவாக்கலுக்கு, கதகளியுடனான நெருங்கிய தொடர்பும் ஆதாரமாக அமைந்தது என்று அவரே இந்தக்கலந்துரையாடலின் போது குறிப்பிட்டார். தனது 8 வயதிலேயே மேடை நாடகத்துறையில் ஈடுபட்ட இவர், தொடர்ந்து பல்கலைக்கழக காலத்தில் சிறந்த நாடக எழுத்தாளராகவும் பரிணமித்தார். திரைப்படக்கல்லூரியில், புலமைப் பரிசில் பெற்று, பயின்று உத்வேகம் பெற்று, இளம் இயக்குனராக வெளிவந்த கோபாலகிருஷ்ணன், 1972ம் ஆண்டில் உருவாக்கிய முதல்திரைப்படமான சுயம்வரம், சிறந்த படம், சிறந்த நெறியாளர் உள்ளிட்ட பல தேசிய விருதுகளையும், மாநிலவிருதுகளையும் பெற்றுக் கொடுத்ததோடு சர்வதேச திரைப்பட விழாக்களில் இவருக்குக் கணிப்பையும், பாராட்டையும் பெற்றுத் தந்தது. கொடியேட்டம், எலிபதாயம், முகாமுகம் (சில காலத்துக்கு முன்னர் இதே ஆசியத் திரைப்பட மையத்தினரின் ஏற்பாட்டில் நடந்தேறிய எண்பதுகளின் இந்தியக்



– அடூர் கோபாலகிருஷ்ணன் –

கலைப்படவிழாவில் இத்திரைப்படம் திரையிடப்பட்டது.) போன்ற குறிப்பிடற்குரிய திரைப்படங்கள் பலவற்றையும் 25க்கு மேற்பட்ட குறுந்திரைப்படங்களையும் விவரணப் படங்களையும் உருவாக்கிய கோபாலகிருஷ்ணன், 1983இல் இந்தியாவின் கலைஞர்களுக்கான அதி உயர் விருதான பத்மஸ்ரீ விருதினையும் பெற்றுக்கொண்டார்.

கலந்துரையாடலின் போது "கலாநிகழ்வு என்பது, வாழ்க்கையோடும் கலாச்சாரத்தோடும் தொடர்பு உடையதான, அவற்றிலிருந்தே உருவாகி கிளைவிடும் ஒரு அம்சமே!" என்று கூறிய கோபாலகிருஷ்ணன், கதகளி என்ற கேரள பாரம்ப[illegible] எலிபதாயம் திரைப்படத்தில் வர்ணங்களைத் தீர்மானிப்பதில் எவ்வாறு துணைபுரிந்தது என்றும் சுவைபடக்கூறினார்.

இத் திரைப்படத்தில் பகைப் புலனுக்குரிய வர்ணமாக, படம் முழுவதுமே விளங்கும் சாம்பல் நிறம், அழிவின், சிதைவின் குறியீடாக விளங்குகின்றது. சிதைந்து போகும் நிலப்பிரபுத்துவ முறையினை, அதன் எச்ச சொச்சங்களில் ஒன்றான பாத்திரத்தின் சீர்குலைவைச் சித்தரிக்கவே சாம்பல் நிறம், பின்னணி வர்ணமாகக் கையாளப்பட்டது.

இத்திரைப்படத்தில் வரும் முக்கிய பாத்திரங்கள் அணியும் ஆடைகளின் நிறங்கள், எவ்வாறு அவர்களின் குணாம்சங்களை விளக்கும் குறியீடுகளாக அமைந்தன என்பதையும் அடூர் விளக்கினார்.

"பிரதான பாத்திரம் உண்ணி அணியும் சேட்டுகளில், காணப்பட்ட குறுக்கான கோடுகள், அவனது நிலையற்ற மனப்போக்கைச் சித்தரித்தன. விரும்பியவனோடு ஓடிப்போகும் இளைய சகோதரி, எப்போதும் சிவப்பு வர்ண ஆடைகளையே அணிந்திருக்கிறள். சிவப்பு நிறம்- எதிர்ப்பு, புரட்சி போன்ற குணங்களை குறித்து நின்றது. எதற்கும் பணிந்து போகும் இரண்டாவது சகோதரி ராயம்மா அணியும் நீல வர்ண ஆடைகள் அமைதி அடக்கம் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும். உரிமைக்காகத் தட்டிக் கேட்கும் மூத்த சகோதரியின் பச்சை வர்ண ஆடைகள். உயிர்ப்புத் தன்மையை குறிக்கின்றன." இவ் விளக்கம் பார்வையாளருக்கு ஒரு படைப்பாளியின் தனித்துவமான ஒரு முகத்தை இனம் காட்டியது.

எலிபதாயத்திலிருந்து கலந்துரையாடல் முகாமுகம் திரைப்படம் பற்றி திசை திரும்பிய பொழுது, முகாமுகம் நாயகன் ஸ்ரீதரன் பற்றி அதிகம் யாருக்குமே தெரியாது- அவனைப்பற்றி மற்றவர்கள் பேசிக் கொள்வதைத் தவிர அவனின் குணநலன்களை யாருமே அறிந்திருக்கவில்லை.- ஏன் எனக்குமே தெரியாது. என்று குறிப்பிட்டார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்குனர்.

"வர்த்தக, மசாலாசினிமாவும், தன் அளவில் தன் பங்கை ஆற்றத்தான் செய்கிறது. ஆனால் அது திரைப் படங்களைப் பார்க்கும் போது இருக்கும் உணர்வுகளுக்கு, எதிர்மாறான ஏமாற்றப்பட்ட நிலையிலேயே 'பார்வையாளர்கள் வெளியில் வந்த பின்னர் விளங்குகின்றார்கள்" என்றும். "நாம் பார்வையாளர்களின் அறிவாற்றலை மதிக்கிறோம். எங்கள் திரைப்படங்களில் இருந்து ரசிகர்கள் மேலும் மேலும் பலவிடயங்களைப் பெற்றுக் கொள்ளும் சந்தர்ப்பங்களை நாங்கள் வழங்குகின்றோம்" என்று நவ சினிமாப் படைப்பாளிகளின் சார்பில் அடூர் கோபாலகிருஷ்ணன் மேலும் கூறினார்.

"நடிகர்கள் அடுத்து என்ன நிகழப் போகிறதென்பதை அறியாதவர்களாக இருக்க வேண்டுமென்பதே எனது அபிப்பிராயம்" என்று கோபாலகிருஷ்ணன் குறிப்பிட்ட பொழுது, - Method Acting என்ற நடிப்பு முறையின் ஒரு உதாரணமாகக் கருதப்படும் மார்லன் பிராண்டோ எவ்வாறு ஒரு படத்தில் தான் ஏற்றுக் கொண்ட ஒரு அங்கவீனனான இராணுவ வீரன் பாத்திரத்தை சிறப்புற சித்தரிப்பதற்காக, அத்தகய இராணுவ வீரர்கள் சிகிச்சை பெறும் மருத்துவ மனையிலேயே தங்கி, அவர்களின் செயற்பாடுகள் எண்ணங்கள் என்பவற்றை அறிந்து உள்வாங்கி திரைப்படத்தில் அப்பாத்திரத்தை சிறப்பாகச் சித்தரித்து வெற்றி கண்டார். - தான் ஏற்கும் பாத்திரத்தின் தன்மையை, அடுத்து என்ன நிகழப்போகிறது என்பதையே அறியாத ஒரு நடிகன், எவ்வாறு அறியக்கூடும்? என இந்தக்கட்டுரையாளன் கேள்வி எழுப்பிய பொழுது- இயக்குனர்களின் செயல்முறைகள் ஆளுக்காள் வேறுபடும், தனது பாணி இதுதானென்றும் அதற்காக Methord Acting முறைமையினை சரியல்ல எனக் கூறவில்லை எனவும் அடூர் குறிப்பிட்டார்.

"கேரள ரசிகர்கள் கலைப்படங்கள் என முத்திரை குத்தப்பட்ட படங்களுக்கும் சிறப்பான ஆதரவை வழங்கி வருகின்றார்கள். ரசிகர்களை தரமான சினிமா ரசனை உடையவர்களாக மாற்றும் பணியில் கேரளத்திலும் வங்காளத்திலும் திரைப்படக் கழகங்கள் அரும் பணி ஆற்றி வருகின்றன."

இத்தகைய கழகங்கள், எமது நாட்டில் பரந்து பட்ட அளவில் அமைக்கப்பட வேண்டிய அவசியத்தை இக்கூற்று



அடூர் கோபாலகிருஷ்ணனின்

# "எலிபதாயம்"

பிரபுத்துவ முறையின் வீழ்ச்சியினை முன்கதையாகக் கொண்டு அந்தப் பகைப்புலனில் இத்திரைப்படம் தொடங்குகிறது.

கிராமத்தில் வாழ்பவர்களால் கனம் பண்ணப்பட்ட குடும்பம். நாற்சார வீடு. அங்கு வாழ்பவர்கள், உண்ணி என்ற சகோதரனும் அவனது இளைய இரு சகோதரிகளும் தான். மூத்த சகோதரி திருமணமாகி, வேறு இடத்தில் வாழ்பவள். சொத்தில் தனக்கும் பங்குண்டு என்பதை உண்ணிக்கு வலியுறுத்தும், வாதாடும் அவள் ஒரு வகை என்றால், இரண்டாவது சகோதரி ராயம்மா, தன் சகோதரன் சொற்படியே அடங்கி நடக்கும் குணமுடையவள். இளையவளோ தன் விசைப்படி வாழ விருப்பப்படுபவள்.

உண்ணி, தனது சுகத்தையே பிரதானமாகக் கருதுபவன். ஆறஅமர இருந்து உடம்பு முழுவதும் எண்ணை தேய்த்து, ராயம்மாவிடம் சொல்லி வெந்நீர் வைப்பித்து குளிக்கும் அவன், அதை ஒரு சடங்காகவே செய்கின்றான். ராயம்மாவிற்கு திருமணம் பேசி வருகின்றார்கள். கணவனை இழந்தவனுக்கு இரண்டாந் தாரமாக அவள் வாழ்க்கைப்பட வேண்டாம் என்று மறுப்பவன், அவளுக்கு வேறு இடத்தில் திருமணம் செய்து வைக்கும் முயற்சியிலும் ஈடுபடாமல் எல்லாவற்றையும், எழுந்த மானத்திலேயே விட்டு, நடப்பதை எதிர்கொள்ளும் சோம்பேறி ஆகின்றான். கிராமத்துப் பெண்ணொருத்தியின் சீண்டல்கள், அவன் உணர்வைத் தூண்டினாலும், அதற்கும் அவனது பய உணர்வு அணைகட்டுகின்றது.

தனது கவலையை, பயத்தை ஏன் எந்த உணர்வுகளையுமே மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளத் தயங்குகின்றான். கொஞ்சம், கொஞ்சமாக மற்றவர்களுடனான உறவைத் துண்டித்துக் கொண்டு, தனக்குள்ளே வாழத் தலைப்படுகின்றான்.

இந்த நிலையில் இளைய சகோதரி யாருடனோ ஓடிப் போய் விடுகின்றாள். இப்போதும் உண்ணி கல்லுப் பிள்ளையார் தான்! சகோதரி என்ன ஆனாளோ என்று துடிக்கும் ராயம்மாவின் வார்த்தைகளும் அவனை அசைக்கவில்லை.

வாயில்லாப் பூச்சியாக வாழும் ராயம்மா, இறுதியில் நோயுற்று, இறந்து விடுகின்றாள். உண்ணி மாற்றங்களுக்கு முகம் கொடுக்கத் தயங்கியவனாக, தன் வட்டத்தைக் குறுக்கிக் கொண்டு, எலிவளைக்குள் புகுந்து கொள்ளும் எலி போல் ஆகின்றான். இவனை இறுதிக்கட்டத்தில், குண்டுக்கட்டாகத் தூக்கிக் கொண்டு போய், நடு நிசியில் குளிர்ந்த நீருள்ள குளத்தில் எறிந்து விடுகின்றார்கள் ஊரவர்கள். வெடவெட என நடுங்கியவாறே, உண்ணி குளத்தில் இருந்து எழுந்து வருவதோடு எலிபதாயம் நிறைவு பெறுகின்றது. □



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முகாமுகம் : நாயகன் பற்றி யாருக்குமே தெரியாது.

நமக்கு உணர்த்துகின்றது.

"கலைப்படங்கள், வர்த்தகப்படங்கள் என்பவற்றுக்கிடையே இடைநிலையில் படங்கள் உருவாக்கப்படலாம என்பது எனக்கு உடன்பாடானதல்ல" என்று கூறிய இயக்குனர், "சத்யஜித்ரே, நவ சினிமாத் துறையின் ஒரு மாபெரும் புருஷன்" என்றும் நிஜ வாழ்வோடு நெருங்கிய திரைக் காரியங்களையும் உருவாக்கலாம் என்ற நம்பிக்கையை தனக்குப் பின் வந்த பல இளம் இயக்குனர்களுக்கு கொடுத்தவர் என்ற வகையில் மறக்கப்பட முடியாதவர்" என்றும் குறிப்பிட்டார்.

"எனது திரைப்படங்கள் கைப்பணிப் படைப்புக்கு ஒப்பானவை. அவற்றின் ஒவ்வொரு அம்சத்திலும் எனது நெருக்கமான பங்களிப்பு இருக்கும்" எனக்கூறிய அடூர், "இசை திரைப் படங்களில், காட்சிகளோடு ஒன்றித்துப் போகும் ஒலியாகத்தான் இருக்க வேண்டுமேயொழிய முழுமையான ராகங்களாக இருக்க வேண்டுமென்ற அவசியமே இல்லை" என்றும் "அந்த ஒலி தனித்துக்கேட்கப்படும் போது, ஒரு சீரான மெட்டாகக் கூட இருக்கக்கூடாது" என்றும் வலியுறுத்தினார்.

இலங்கைப் படைப்பாளிகளில் லெஸ்டர் ஜேம்ஸ் பீரிஸ் படைத்த "கம்பெரலிய" தான், திரைப்படக் கல்லூரியில் பயின்று கொண்டிருக்கும் பொழுது, அங்கு பார்த்துப் பயில்வதற்குரிய முன்னுதாரணமாகத் திரையிடப்பட்ட தென்ற வகையில், லெஸ்டர் மீது தனக்குள்ள மதிப்பை கோபாலகிருஷ்ணன் எமக்குப் புரிய வைத்தார். "மற்றய இலங்கைப் படைப்பாளிகள் பற்றி தான் அதிகம் அறியவில்லை" எனவும் குறிப் பிட்டார்.

பிரான்ஸ் நாட்டில் நவ சினிமாத் துறையின் ஆரம்பத்திற்கு வழிவகுத்ததாகக் கருதப்படும் "கஹியே டு சினிமா" என்ற சஞ்சிகை வலியுறுத்திய கோட்பாடு ஒன்றினை இங்கு முன் வைக்கலாம்.

"ஒரு படைப்பாளியின் படைப்புகளாகும் திரைப்படங்கள் மனிதவாழ்வினைச் சித்திரிப்பதோடு வாழ்க்கை பற்றிய ஆழமான பார்வையை, அவனுக்கே உரித்தான, தனித்துவமான, இனங்கண்டு கொள்ளக் கூடிய முறையிலே சித்திரிப்பனவாக இருக்க வேண்டும்."

அடூர் கோபாலகிருஷ்ணன் என்ற படைப்பாளியின் தனித்துவமான அணுகு முறையினை, அவரது படைப்பின் மூலமும், தொடர்ந்த விளக்கத்தின் மூலமும், அறிந்து கொள்ள வழி வகுத்த ஆசிய திரைப்பட மையத்தினருக்கும் அதன் உற்சாகமான அமைப்பாளருமான அஷ்லி ரட்ண விபூஷணவிற்கும் தரமான சினிமாத்தாகம் கொண்ட ரசிகர்கள் நன்றி கூறக்கடமைப்பட்டவர்களே!

-வந்தியத்தேவன்-

கலைப்படங்கள்,வர்த்தகப்படங்கள் என்பவற்றுக் கிடையே இடைநிலையில் படங்கள் உருவாக்கப் படலாம் என்பது எனக்கு உடன்பாடானதல்ல : முகாமுகம்



# 1993 ல் இருந்து மாதந்தோறும் ஒழுங்காக அருவி வெளி வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்பதை அருவி வாசகர்களுக்கும், விற்பனையாளர்களுக்கும் மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்

சந்தாதாரர்கள் விண்ணப்பிக்கவும்

| நாடுகள் | 12 இதழ்கள் |
|---|---|
| இலங்கை | Rs. 150 |
| இந்தியா | In. Rs. 90 |
| ஜேர்மெனி | Mark. 48 |
| பிரான்ஸ் | Fr. 120 |
| கனடா | C.D. 24 |
| அமரிக்கா | U.S.$. 22 |
| இங்கிலாந்து | Pounds. 12 |
| ஏனையநாடுகள் | U.S.$. 22 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகவல் தொழில்நுட்பம்

# கணனியின் ஒரு புதுப்பரிமாணம்.

கணனியைப்பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது என்று சொல்வது ஒரு தரக்குறைவான விசயமென்று யோசிக்கின்ற காலம்! அந்த அளவிற்கு அது ஒரு அத்தியவசியமான சாதனமாக மாகிவருகின்றது. அண்மையில் கொழும்பில் நடந்த INFOTEL கண்காட்சியும் இதற்குத் திரண்ட மக்களும் யாவரும் அறிந்ததே. எனினும் கண்காட்சியின் அடிப்படைக்கருத்தை அறிந்தவர்கள் மிகச்சிலராகவே இருப்பர்.

கணனியை வெறும் கணக்குப் பார்க்கின்ற, தட்டெழுத்து வேலை செய்கின்ற ஒன்றாகப் பாவிக்கின்ற நிலையில்லேயே இன்று பலர் உள்ளனர். அது தொலைத் தொடர்புச் சாதனங்களுடன் இணைக்கப்படும் பொழுது, முற்றிலும் புதிய பரிமாணத்தைப் பெறுகின்றது. அங்குதான் தகவல் தொழில்நுட்பம் (Informatin Technology) என்ற பதம் பொருத்தமாகவும் அமைகின்றது. எந்த ஒரு தரவும் அது ஒழுங்குபடுத்தப்பட்டு தகவல் தேவைப்படுபவர்களுக்கு வினியோகிக்கப்படாமல் இருக்கும் வரை அந்தத் தரவினால் எந்தப் பிரயோசனமும் இல்லை. இப்படிப் பலஇடங்களில் இருந்து தரவுகளைச் சேகரிப்பதற்கும், பின் அவற்றை ஒழுங்குபடுத்தி தேவைப்படுபவர்களுக்குத் தகவல்களாக வினியோகிப்பதற்கும் மிக அவசியமான ஒரு சாதனம் இந்தக் கணனிதான். தரவைச்சேகரித்து வினியோகிப்பதற்கு பல தூர இடங்களில் உள்ள கணனிகளை ஒன்றாக ஒரு பெரிய கணனியுடன் இணைக்க வேண்டிஉள்ளது. இங்குதான் தொலைத் தொடர்புத் தொழில் நுட்பம் முக்கிய இடத்தைப் பிடிக்கிறது.

அண்மையில் உருவாக்கப்பட்ட சில தொழில்நுட்பச்சாதனங்களில் முக்கியமான இடத்தை வகிப்பது, Tele Conferencing என்பது. எல்லாப் பிரதிநிதிகளும் ஒரேஇடத்தில் கூடாமல் மகாநாடு நடத்த ஒரு வழியைக்கண்டு பிடித்திருக்கின்றார்கள். இதுவரை நாம் சந்தித்த மகாநாடுகள் எல்லாம் பிரதிநிதிகளை வரவேற்று ஒரு மண்டபத்தில் கூட்டித்தான் நடப்பதாக அறிந்தோம். இனி இவையொன்றும் அவசியமில்லாமல் போய்விடும். இங்கு நடந்த கண்காட்சியிலும் ஒரு காட்சிப்பொருளாக இருந்து,ரூபவாகினியிலும் Arthur C. Clark இப்படி ஒரு மகாநாட்டை நடத்திக் காண்பித்தார். இன்றைய தொலைத்தொடர்பு மூலம் உருவங்களை வேண்டிய இடத்திற்கு அனுப்பலாம். அதே நேரம் ஒவ்வொரு கணனியையும் ஒரு பொதுக்கணனிக்கு இணைப்பதன் மூலம், தொலைபேசி போல கணனிகளையும் தகவல் பரிவர்த்தனைக்குப் பாவிக்கலாம். இவற்றையெல்லாம் வைத்துக்கொண்டே இந்த Tele Conferencing உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு மகாநாட்டை நடத்துவதற்கு முக்கியமாகத் தேவைப்படும் புலன்கள், கேட்டல் பார்த்தல் மட்டும் தான். யாரும் பெரிதாக மற்றவர்களைத் தொட்டுக் கதைக்கமாட்டார்கள் தானே. எனவே ஒரேநேரத்தில் வெவ்வேறு இடங்களில் உள்ள பிரதிநிதிகள் நமக்கு முன்னே கணனியை வைத்துக்கொண்டு இவற்றைச் செய்யலாம். இங்குள்ள பிரதிநிதி என்ன பேசுகிறாரோ, அதை பதிவு செய்து, இவருடைய அந்தநேர உருவத்துடனே மற்ற எல்லோருடைய கணனியிலும் படம் போட்டுக்காட்டும்.சிலநேரம் அட்டவணையில் இருந்தோ, சலாகை வரைபில் இருந்தோ வட்டமிட்டு மற்ற எல்லோருக்கும் காட்ட வேண்டும் என்றால் அதையும் உடனே செய்ய முடியும். இப்போது பெரிய அட்டவணைவடிவில் உள்ள தகவல்களெல்லாம் கணனியில் தானே சேகரித்து வைக்கப்படுகின்றது. எமக்குத்தேவையான அட்டவணையை திரையில் எடுத்து விரும்பிய இடத்தில் வட்டம் போடுவதற்குக் கூட திரையில் விரும்பிய கலர்ப் பேனையை எடுக்கலாம். இப்படி வட்டம் போட்டபின்னர் மற்றய எல்லாப் பிரநிதிகளுடைய கணனித் திரையிலும் உடனடியாகத்தெரியும். இதே போல இன்னொரு பிரதிநிதி அவர் அமரிக்காவில் இருக்கிறார் என்று வையுங்கள், அவர்தன்னுடைய கணனியில் நான் விவரித்துக்காட்டிய அட்டவணையிலேயே தானும் ஏதேனும் கோடிட்டுக் காட்டலாம். அதுவும் எல்லோருடைய கணனியிலும் தெரியும். இது ஒரு கரும்பலகையை பல பிரநிதிகள் பாவிப்பதற்குச் சமனாகும்.

இன்னோர் கண்டு பிடிப்பு, இலங்கையில் இந்த வருடம் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

இதன் பெயர் Electronic Mail. இலத்திரனின் வேகத்தில் உலகில் எங்கிரு ந்தும், எங்கும் தபால் அனுப்பலாம். கடிதம் எழுத பேப்பரும் தேவையில்லை. தபாலுறை, முத்திரையும் தேவையில்லை. இதுவும் கணனியால் தான் செய்யப்படுகின்றது. முன்னேறிய நாடுகளில் வீட்டுடிற்க்கு வீடு கனனியுள்ளது தானே. இந்தக் கணனிகளெல்லாம் ஒரு பொதுக்கணனியுடன் இணைக்கப்பட முடியும். பின்னர் எமது வீட்டில் உள்ள கணனிக்கு ஒரு தபால்பெட்டி இலக்கம் தரப்படும். இதே போல எமது உறவினர், நண்பர்களின் வீட்டுக் கணனிகளின் தபாற்பெட்டி இலக்கமும் தெரியுமென்றால் கணனி மூலமே கடிதத்தைத் தயாரித்து அவர்களுடைய கணனித்தபாற்பெட்டிக்கு அனுப்பச்சொன்னால் அடுத்த கணமே அவர்களுக்குக் கிடைக்கும். தபாலை வாங்கக்கூட ஆள் தேவையில்லை. அது பெட்டியுள்ளேயே இருக்கும். இதேபோல எமக்குவரும் இலத்திரன் கடிதங்களையும் நாம் விரு ம்பிய போது வாசித்துவிட்டு அழித்து விடவோ பதிந்து வைக்கவோ முடியும்.

இதன் முக்கியத்துவம் என்னவென்றால் இதன் வேகமும், விரும்பியபோது தபாலை அனுப்பக்கூடிய வசதியும் தான். தற்போது இது பல்கலைக்கழகமட்டத்தில் தான் அறிமுகப்படுத்தப்படுகிறது. விரைவில் பொதுமக்களிந பாவனைக்கும் வந்து விடலாம்.

இவ்வளவு தொழில்நுட்பமும்வசதிகளும் மனிதனின் சிந்தனையை எப்படி மாற்றப் போகிறது. நிச்சயம் மாறத்தான் வேண்டும். ■

–செல்வன்–





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடை

பரமநாதன் அடிக்கடி கதவின் வெளியேபார்த்துக்கொண்டான். மழை. பரமநாதனுக்குச் சினம் சினம் சினமாய் வந்தது. யாரோடும் காட்ட முடியாத சினம்.

மழை இவனைச் சட்டை செய்த பாடில்லை. தன் பாட்டிற்கு, நிலைய வித்துவானின் வயலின் கச்சேரி போல அது ஒரு தனிராகத்தில்..... மழை என்றால் ஒன்றில் ஒரேமுறையில் அடிச்சூத்தி விட்டுப் போய்விட வேணும். இல்லா விட்டால் இரவு நேரத்தில்பெய்து முடித்துப்போட வேணும்.ஆனால்இதுமழையா.... அழுகுணி மழையல்லவோ! நொச்சு நொச்சென்டு கொண்டு. போதாக்குறைக்கு வீட்டுக் கூரையும் தகரம். ஈ மொய்த்தாற் பொல் ஒரே இரைச்சல் சத்தம். சினம் தான் வரும்.

பரமநாதனுக்குச் சினமேறக் காரணமேதென்றால் இந்தச் சிணுங்கல் மழை மட்டுமல்ல.

பிரதான காரணமெ..ன வென்றல் அது அவனே தான். அது எப்படி அவன் காரணமாகினான் என்றால் நேற்றய தினம் நடந்நதை நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

நேற்று!

என்றும் போல விடியல். சேவல் கூவி, காகம் கரைந்து, குளத்தில் தாமரை மொட்டவிழ்ந்து, பொல பொலவென இருள் கிழிந்து பிரசவமாகும் கிராமத்து விடியல்அல்ல. எலாம் மணிக்கூடு விழித்துக்கொண்டு திடீரென அலற வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்து கதவைத் திறந்து, கண்ணைக்கசக்கி அவசரமேறிவிட்ட தெருவைப்பார்த்து தனக்கும் அவசரத்தைத் தொற்றுவித்துக்கொண்டு, வாசலில் வீசப்பட்ட அன்றைய செய்தித்தாளைஅதேஅவசரத்துடன் பொறுக்கி உலகத்தின் ஒரு பொழுதின் மாற்றங்களை மேலோட்டமான ஒரு பார்வை ஓட்டத்தில் தேடிப்பார்க்கும் பட்டணத்து விடியல். பரமநாதனின் விடியலும் பட்டணத்து விடியல் தான். எனினும், இது பட்டணத்தின் வாடகைக்கு எடுத்த ஒரு குச்சறையின் விடியல். சிலருக்கு அதிஸ்டம் கொண்டு வரும். சிலருக்கு அதுவே துர்அதிஸ்டம் பிடித்ததாகவும் ஆகிவிடும். பரமநாதனுக்கு இந்த விடியல், நான் சொல்லாமலே அனுமானித்திருப்பீர்கள். சொல்லி வைத்தாற் போல் துர்அதிஸ்டம். பரமநாதனுக்கு என்ன சந்தேகம் என்றால் இந்த துர்அதிஸ்டம் தனக்கென எழுதப்பட்டஒன்றா என்பதுதான்.

ஏனென்றால் பரமநாதன் ஒரு இடத்துக்கு அவசரமாகப் போக பஸ் ஒன்றை அவசரமாகப் பார்த்தபடி நிற்பான். பஸ் வராது. மணிக்கூட்டை அடிக்கடி பார்ப்பான். கையைப்பொட்டுப் பிசைவான். பஸ் வரவே வராது.

வேறொரு நாள் அதே இடத்தில் வேறொரு பஸ்ஸிற்கு நின்றால், முன்னைய நாள் தேடிய பஸ் இப்போது அவனுக்கு முன்னால் சிரித்துக்கொண்டு போகும். திரும்பி வரும். ஆனால் இப்போது தேடுகின்ற பஸ்ஸோ.... வராது. இது என்ன, எந்த ஒரு சின்ன விஷயத்திலும் இதேதான். ஒரு கடிதத்தை அவசரமாகத்தேடினால் அது எல்லாக் கடதாசிகளையும் பிரித்துப்பார்த்த பின், கடைசியாகத்தான் கிடைக்கும். ஒரு சிகரட்டை உருவினால் பில்டர் வாயின் எதிர் முனையில் இருக்கும். நெருப்புப் பெட்டியைத் திறந்தாலோ குச்சியின் தலைப்பக்கம் தான் முதலில் வரும். இதே போல் தான் பரமநாதனுக்குக் குடை விசயமும்.

மாரி காலமென்று குடையை எடுத்துப் போனால் அன்று முழுக்க மழையே வராது. குடை ஒரு சுமை போல திரும்ப அவனோடு அறைக்கு வரும். இன்னொரு நாள் நல்ல வெயில் எறிக்கும். இன்றைக்கு மழையே வராது என்று என்று நினைத்து குடையை விட்டுவிட்டு வேலைக்குப் போவான். ஆனால் வேலை முடிந்து வீடு திரும்பும் நேரம் பார்த்து மழை கொட்டோ கொட்டென்று கொட்டும். தெருவில் குடை குடையாக எல்லோரும் நடந்து போக இவன் ஒரு கடை ஓரத்தில் ஒதுங்கி நிற்பான். கடையில் தூங்கும் குடைகூட இவனைப்பார்த்து சிரிப்பது போல இருக்கும். வீட்டில் சும்மா ஒரு குடை தூங்கிக் கிடக்க அவனாவது இன்னொரு குடை வாங்குவதாவது? வெறுமனே மழையையே பார்த்த படி நிற்பான். மழை தன் பழி முழுதும் தீர்த்து இவனை வீடு செல்ல விட்ட பின்னர் அறைக்குத் திரும்பினால் குடை மேசை மீது வைத்த படி அழகாக இருக்கும். பரமநாதனும் துர்அதிஸ்டமும் இப்படியே நாளும் பிணக்குப் பட்ட படி காலம் கடத்துவது வெளியே தெரியாத சுவாரிசியமான கதைதான்.

இனியும் நான் உங்களுக்கு நேற்றய சம்பவத்தைப்பற்றி சொல்லா விட்டால் நீங்கள் என்னைத் திட்டத்தொடங்கி விடுவீர்கள். நேற்று அப்படி என்ன விசேசம் என்றால் இலங்கையை ஒரு சூறாவளி தாக்கியது. அதிர்ந்து விடாதீர்கள். நீங்கள் பரமநாதனின் குடையை அந்தக் கதவு மூலையில் எட்டிப் பாருங்கள், புரியும். புயல் வந்ததற்கு என்ன ஆயிரம் காரணங்களை நீங்கள் சொன்னாலும், பரமநாதன் இப்போது அடித்துச் சொல்வான், தன்னுடைய குடையை முறிக்க வேண்டும் என்று திட்டம் போட்டுத்தான் இந்தப்புயல் வந்திருக்கிறது என்று. நீங்கள் அவனது குடையின் கதியைப் பார்த்தீர்கள் என்றால் அவன் சொல்வதை மறு பேச்சின்றி ஒப்புக் கொள்ளத்தான் வேண்டி இருக்கும். ஒவ்வொரு கம்பியையும் ஒவ்வொரு திறுசாக முறித்துப் போட்டிருந்தது. நல்ல வேளை குடை ஒரு உயிரில்லாச் சடப் பொருளாய் போயிற்று. இல்லையேல் அந்தச் சித்திரவதையில் அது துடிதுடித்துச் செத்திருக்கும். இதை உங்களுக்குச் சொல்ல நீங்கள் சிரிக்கலாம். இதென்னடா இப்ப இது மனுசனுக்கு சர்வ சாதாரணமாக நடந்து கொண்டிருக்க, இவன் ஒரு குடைக்காக அழுகிறான் என்று. அது வேற விடயம். ஆனால் குடைக்கு நடந்த கதியை நான் அப்படித்தான் சொல்ல வேண்டி உள்ளது. ஏனென்றால் மழையில் பரமநாதனும் குடையும் ஆடிய தாண்டவத்தை நீங்கள் நின்று ரசித்திருக்க மாட்டீர்கள். பரமநாதனின் தலையைக்காக்க -ஆம் தலையை மட்டும்-தான்- மீதி உடலும் உடையும் மழையில் நன்றாகக் குளிப்பாட்டப்பட்டு விட மீந்திருந்தது தலை மட்டும் தான். அதனால் தலையைக்காக்க அந்தச் குடை எவ்வளவு போராடியது, தியாகம் செய்தது.

ஒவ்வொரு கம்பியாய் முறிக்கப்பட்டு கிழிக்கப்பட்டு குலையும் குற்றுயிருமாகி இறுதியில் மடிந்தது என்பதை அறிந்தால் நீங்கள் மனதாலாவது அதற்காக ஒரு நிமிடம் அஞ்சலி செலுத்துவீர்கள். இப்போது அடிபட்ட வெளவால் போல அந்தக்குடை கதவின் மூலையில் தேடுவாரற்றுக் கிடக்கிறது. பரமநாதன் மழையை முறைத்தபடி வாசலைப் பார்ப்பதும் மணிக்கூட்டைப் பார்ப்பதுமாக இருக்கிறான். அவனுக்குச் சினம் சினமாக வந்தது.

ஆமாம் பரமநாதனின் சினத்துக்கு மழை ஒரு காரணம். மழையை விட அவனே பிரதான காரணமெனச் சொல்லி இருந்தேன். ஏனென்று இன்னும் சொல்லவில்லை. தயவு செய்து கொஞ்சம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுத்துக் கொள்ளுங்கள். முதலில் நான் உங்களுக்கு எங்கள் கதாநாயகன் பரமநாதனுக்கு, இந்தக் குடை கிடைத்த வரலாற்றைச் சொல்கிறேன்.

இந்தக் குடை உண்மையில் பரமநாதனுடையது அல்ல. இப்படிச் சொல்வது உங்களுக்கு இன்னும் திகிலூட்டுவதாக இருக்கும். எனவே நான் கதையை ஆரம்பத்தில் இருந்து சொல்கிறேன். கேளுங்கள்.

பரமநாதனின் மைத்துனர் ஒரு சிவில் எஞ்சினியர். அவருக்கு வெளிநாட்டு வேலை கிடைத்து நாட்டை விட்டுப்போகும் போது தனது அறையில் மீந்திருந்த சில்லறைப் பொருட்களையெல்லாம் பரமநாதனை எடுக்கச் சொல்லியிருந்தார். அப்படிக் கிடைத்த பொருட்களில் ஒன்றுதான் ஒரு முதலை மாாக் குடை. அந்தக் குடையை எஞ்சினியர் தனது தந்தையாரது ஞாபகப் பொருளாய் வைத்திருப்பாரோ என்று பரமநாதனுக்குப்பட்டது. ஏனெனில் அது நன்றாகப் பழசேறி குடையென்ற பெயரைத் தவிர மற்றெல்லாவற்றையும் இழந்து போயிருந்தது. மேலும் அதை ஒரு ஊன்று கோலாகவும் எஞ்சினியர் பாவித்திருக்க வேண்டும். உயர்ந்த மாடிக் கட்டடமொன்றைக் கட்டும் வேலையில் இதை ஊன்றிச் சாய்த்து அண்ணாந்து அடிக்கடி பார்த்திருக்கக்கூடும். ஏனென்றால் அதன் இரும்பு முனை ஒரு கிளியின் சொண்டு போல வளைந்து ஒரு கோணத்தில் நின்றது. அத்தோடு சீமெந்து வேலைகளுக்குத் தருவிக்கப்பட்ட ஈரமணலில் புதையுண்ட காரணத்தால் நன்றாகக் கறள் ஏறியும் இருந்தது.

இருப்பினும் இந்தக் குடை கிடைத்தது பரமநாதனுக்கு ஒரு பொக்கிசம் போல என்று கூறுவது தப்பாகாது. ஒவ்வொரு மழைக்காலம் வரும் போதும், பரமநாதன். இம்முறை ஒரு குடை வாங்க வேண்டும் என்று நினைப்பான். நினைத்தபடியே அவன் இருக்க மழைக்காலம் போய்விடும். வெய்யில் காலம் வந்து விடும். இனி ஏன் வாங்குவான் என்று நினைப்பைக்கைவிட்டு விடுவான். மீண்டும் மாரி காலம் வரும். பழைய படி குடைவாங்கலாமா என்று நினைப்பான். அவன் முடிவெடுக்கு முதல் வெயில் காலம் வந்து விடும். இவ்வாறு குடை வாங்குவதற்கான விவாதம் அவனது மனப் பாராளுமன்றத்தில் எடுக்கப்படுவதும் கை விடப்படுவதுமாக இலங்கைத்தமிழர், அரசியல் தீர்வு போல் ஒத்திப்போடப்பட்டுக் கொண்டே இருக்க இப்படி என்றாலும் குடை கிடைத்தது அவனது அதிஸ்டமன்றோ!

அந்தக் குடையைப்பற்றி நையாண்டிப் பேச்சுக்கள் சுற்று வட்டாரத்தில் உலாவுவது அவனுக்குத்தெரியும். பக்கத்து வீட்டுப்பிள்ளைகள் அதற்கு பாட்டா குடை என்று பெயரும் வைத்திருந்தார்கள். அவன் தெருவில் இறங்கினால் அக்கம் பக்கம் பார்ப்பதில்லை. நேரே அலுவலகம் தான். ஆனாலும் ஆபிசில் கிண்டல் பேச்சுக்களுக்குக் குறைவில்லை. முக்கியமாக அந்த டைப்பிஸ்ட். லீனாவோ... ரீனாவோ..., என்னவோ! வாயில் வராத பெயர். என்ர குடையை எடுத்துக்கொண்டு உங்கடை குடையைத் தருவீங்களா என்று, வந்து கேட்பாள். பரமநாதனுக்கு அவள் சீரியசாகவா பகிடியாகவா கேட்கிறாள் என்று தடுமாறி ஏன் என்பாள். "இல்ல, ஊரில பாட்டி வளக்கிற ஆட்டுக்கு பிலா இலை குத்த உதவும்". சொல்லி விட்டு பெரிய ஜோக்கடித்த மாதிரி "கொல்" என்று சிரிப்பாள். அதோட ஒரு கூட்டமும் சேர்ந்து சிரிக்கும். பரமநாதனுக்கு அசடு வழியும். அவன் ஒருமுறை ஏதோ சமாளிப்பதற்காக "ஓல்ட் இஸ் கோல்ட்" என்று சொல்லி விட்டான். இளம் பெண்களோடு அதிகம் பேசப்போகக் கூடாது. அவர்கள் மட்டம் தட்ட வெளிக்கிட்டால் ஒரு குருவிக் கூட்டம் போல சேர்ந்து கொண்டு கீச்சிடுவார்கள். ஒரு சின்னப் பகிடிக்கும் "கிளுக்" "கிளுக்"கென்று கொண்டு..... விசர் தான் பத்திக்கொண்டு வரும். இதற்கு நடுவில் ஆபீஸ் பியோனுக்கு தானும் ஒரு பகிடிக்காரன் என்று இந்தப் பெண்களிடம் பெயரெடுக்க ஒரு நினைப்பு.ஆபீஸ் விடும் நேரம் பார்த்து பரமநாதனின் குடையைக் கொண்டு வந்து "ஐயாவோட கோல்ட் "என்று கொண்டு கொடுக்க இந்தப் பெண்டுகள் சிரிக்க அவன் காற்றிலே நடந்து போவான். பரமநாதன் கோபப்படமாட்டான். பட்டாலும் யாரும் சட்டை செய்ய மாட்டார்கள். அவனது கோபத்தையும் ஒரு பகிடியாக்கிப் பேசுவார்கள். அவன் எதுவுமே பேசாமல் தான் ஏதோ சீரியசாக இருப்பது போல் இருந்து விடுவான்.



**என்ன பிழை ? நீ திருடினாயா? இல்லையே. அந்த வயோதிபர் தானே உனது குடையை மாறி எடுத்துக் கொண்டுபோனார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இப்படி அவன் பாடு போய்க்கொண்டிருக்க,**

**நேற்று!**

நான் முன்னர் குறிப்பிட்ட விடியல். சூரியன் பவ்வியமாக வெளியே தோன்றி தன் முழுக்கிரணங்களையும் வெட்ட வெளிச்சமாக்கிச் சிரித்தபடி மேலே நின்றான். பரமநாதன் சூடு கண்டபூனை. இந்தப் பாசாங்கெல்லாம் குடையை விட்டு விட்டு தன்னை வெளியே போகச் செய்யத்தான் என்பது அவனுக்குத் தெரியும். பின்னர் தன்னைஒரு கடை வாசலிலேயோ அல்லது வந்திறங்கிய பஸ்டான்டுக்குள்ளேயோ அடைத்து வைத்து மழைகொட்டி வேடிக்கை பார்க்க சூரியன் ஒளிந்து விடும். எனவே அவன் றிஸ்க் எடுக்காமல் குடையை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

இப்போது அவனுக்கு முதலில் ஒரு அவசர வேலைமுடிக்க வேண்டி இருந்தது. ஒரு கடிதத்தை பதிவுத் தபாலில் அனுப்ப வேண்டும். தபாற் கந்தோர் இரண்டு பஸ்டான்ட் தூரம். ஆனால் அதற்கென்று ஒரு பஸ்ஸா?, நடந்தே போகலாம். அவன் நடந்தான். தபாற் கந்தோரை எட்டும் போது வானம் மெதுவாக இருளத்தொடங்கியது. இம்முறை, தான் குடையை எடுத்து வந்தது பிரயோசனமான காரியம்தான் என்று பரமநாதன் மனதினுள் நினைத்துக் கொண்டான். தபாற் கந்தோர் மூலையில் குடையைச் சாத்தி வைத்து விட்டு தனது கடிதத்தை றிஜிஸ்டர் செய்யக்கொடுத்தான். அப்போது யாரோ அவனது தோளைத் தட்டினார்கள். திரும்பிப் பார்த்தான். "தம்பி இந்தக் கடதாசியில இருக்கிற விலாசத்தை இந்தக் கடிதத்தில ஒருக்கா எழுதித் தாரும்." இரண்டு போத்திலோடுகள் பாரத்தோடு மூக்குக் கண்ணாடி அணிந்திருந்த வயதான மனிதர் ஒரு கடதாசித் துண்டையும் கடிதத்தையும் நீட்டியபடி சிநேகிதச்சிரிப்போடு நின்றார். அவன் பேசாமல் வாங்கி எழுதிக்கொடுத்தான். "மை ஐசையிட் இஸ் புவர்" அவனது சிரமத்துக்கு மன்னிப்புக் கேட்குமாப் போல் தன் பாட்டில் சொல்லிக் கொண்டவர், பின்னர் கடிதத்தை வாங்கிக் கொண்டு "தாங்யூ தம்பி" என்று விட்டு அகன்றார். இவன் தான் குடுத்த முத்திரை ஒவ்வொன்றின் மீதும் சீல் விழுகிறதா என சந்தேகம் தீரப்பார்த்து விட்டு அலுவலகம் போகத்திரும்பினான். அப்போது தான் வெளியே அந்த வயதான மனிதர் இவனுடைய குடையைப் பிடித்தபடி பஸ்டான்டை நோக்கி மெல்ல மெல்ல போய்க் கொண்டிருப்பதைக் கண்டான். தனது குடை இருந்த இடத்தை அவசரமாகப் பார்த்தான். அங்கே வேறொரு குடை சாத்தப்பட்டிருந்தது. அவசரமாகக் கூப்பிட வாயெடுத்த அதே வேளை மீண்டுமொரு முறை சாத்தியிருந்த குடையைக் கண்கள் நோட்டமிட, மூளையில் ஏதோஒரு பொறி அவனது நாஅசைவதைத் தடுத்து நிறுத்தியது. அந்தக் குடையை படபடப்புடன் கண்களால் அளவெடுத்தான் புதுக்குடை. வெளிநாட்டுக்குடை. வயோதிபர் பார்வை மாறாட்டத்தில் தனது குடையை மாறி எடுத்துக் கொண்டு போகிறார் என்பதை மனது நிமிடத்தில் புரிந்து கொண்டது. அவர் பஸ்டான்டை நெருங்கிக் கொண்டிருக்கிறார். அவரைக்கூப்பிடு என்று ஒரு மனம் சொன்னது. வேண்டாம், வேண்டாம் என்று இன்னொரு மனம் சொன்னது. கூப்பிடுவதா விடுவதா, கூப்பிடுவதா விடுவதாஎன்று அவன் இரண்டு மனதுக்குமிடையில் தடுமாறிக்கொண்டிருக்க, ஒரு பஸ் வந்து நிற்க, அவர் அதில் ஏறுவதையும், பஸ் நகர்வதையும் பின்னர் வெறும் தெருவையும் பார்த்துக்கொண்டே இருந்தன கண்கள். நெஞ்சில் படபடப்பு ஓய்ந்த பின் அவன் அந்தக் குடையை எடுத்து விரித்தான். துமித்துக் கொண்டிருந்த மழைக்குள் விறு விறு என பஸ்டான்டை நோக்கி நடந்தான். இன்னும் மனதுக்குள் கேள்வி குடைந்தது. "நீ செய்தது சரியா?" பஸ் வந்தது. ஏறி ஜன்னலோரமான ஒரு சீற்றில் இருந்து கொண்டு வெளியே பார்த்தான். மழை உரக்கத்தொடங்கியிருந்தது. "நீ செய்தது சரியா?" அவன் அருகில் வந்த கொண்டெக்டரிடம் டிக்கட்டை வாங்கிக்கொண்டான். அதற்குள் அவனது மற்ற மனம் தனது பதில்களை தயார்படுத்திக்கொண்டது. "என்னபிழை? நீ திருடினாயா? இல்லையே, அவராகத்தானே உனது குடையை எடுத்துக்கொண்டு போனார். உனது குடை புதுக்குடையாக இருந்திருந்தால் அவர் செய்தது தானே திருட்டு. நீ ஏன் வீணாக மனதைக் குழப்பிறாய். இன்றைக்கு உனக்கு ஏதோ சின்ன அதிஸ்டம். வழமையாய்க் கிடைக்காத அதிஸ்டம். தானாக வந்திருக்கு. அதைப் பற்றி சந்தோசப்படு. சரி, யோசிச்சு என்ன, குடையைத் திரும்பவா கொடுக்க முடியும்?"

பரமநாதன் மெதுவாகச் சமாதானமாகினான். இப்போது அவன் குடையை ஆவலோடு பார்த்தான். நல்ல புதுக்




**குடைக்கம்பிகள் ஒவ்வொன்றாக முறிய, குடைச்சீலை கிழிய அவன் பிரயத்தனங்களெல்லாம் பாழாகி.....**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடை.. மடிப்புக்கூடக் கலையவில்லை. "வீட்டில் பிள்ளைகள் மறந்துபோகாமல் திரும்பக் கொண்டுவாருங்கோஎன்று சொல்லிக் கொடுத்தார்களோ சொல்லாமற் கொடுத்தார்களோ.... சீச்சீ அவரைப் பற்றி நினைக்கக்கூடாது. அப்போ யாரைப்பற்றி நினைப்பது? ஆம். அந்த டீனா. இந்தப் புதுக்குடையைப் பார்த்ததும் வாயடைத்துப் போவாள். அந்தப் பீயோனுக்கும் இன்றையோடு கொட்டம் அடங்கிவிடும். நிட்சயம் எல்லாரும் இது எங்கால என்று கேட்பார்கள். என்னவென்று சொல்லலாம்....?

அவனது உதடுகளில் ஒரு சங்கோசப் புன்னகை அவனை அறியாமலே நெளிந்து மறைந்தது. வெளியில் மழை உரத்துக்கொண்டு வந்தது. அவன் மனம் ஆபீசை வட்டமிட்டது. நிட்சயம் செய்தி பரவும். ஒவ்வொருத்தரும் "எங்க பாப்பம் உங்கட புதுக்குடைய" என்று கேட்டு வாங்கிப்பார்ப்பார்கள். இது ஒன்றும் பெரிய விசயம் இல்லை என்பது போல் முகத்தை வைத்துக்கொள்ள வேண்டும். எங்கால என்று கேட்கும்போது என்ன சொல்வது? வாங்கினதாகவா... அல்லது வெளிநாட்டில் இருந்து வந்த உறவினர் தந்ததாகச் சொல்லலாமா...? இரண்டில் எது பெருமை சேர்க்கும் என்பது பரமநாதனுக்குச் சிக்கலாக இருந்தது. வெளிநாட்டில் சொந்தக்காரர் இருப்பதாகக் காட்டினாலும் ஒரு பெருமை. சொந்தக் காசு செலவளித்து இதை வாங்கினதாகச் சொல்வதிலும் ஒரு பெருமை. எதைத் தெரிவு செய்வது என்று முடிவு செய்ய முடியாமல் பரமநாதன் இறங்க வேண்டிய இடத்துக்கு வந்து சேர்ந்தான்.

பஸ்ஸால் இறங்கிய பின்னர்தான் இவ்வளவு மோசமாக மழை அடிக்கத்தொடங்கியும் தனக்கு அது தெரியாமல் விட்டதை உணர்ந்தான். அவன் நேரத்தைப் பார்த்தான். ஆபீசுக்குச் சுணங்கி விட்டது. அவசரமாகக் குடையைப் பிடித்தபடி நடக்கத் தொடங்கினான். சற்றுத் தூரம் நடந்திருக்க மாட்டான். ஒரு காற்று சுற்றிச்சுற்றி வீசியது. காற்றோடு மழை அள்ளுண்டு வந்து உடம்பு முழுக்க நனைந்தது. குடை கிடுகிடுத்து. மறுபடி மறுபடி காற்று. மழை எந்தப்பக்கமாய் வருகிறது எனப்புரியவில்லை. குடையைத் திருப்பி மழையைத் தடுத்தபடி அலுவலகத்தின் பக்கம் அவசரமாக ஓடினான். இன்று இலங்கையின் கிழக்குக் கரையை புயல் தாக்கக்கூடும் என்ற இரவு வானொலிச்செய்தி இப்போது தான் உறைத்தது. அந்தப் புயல் இங்கும் வந்து விட்டதோ? நினைப்தற்கு நேரம் இல்லை. காற்று குடையைப்பிடுங்கி எறிவேன் என்று நின்றது. அவன் இறுகப்பிடித்துக் கொண்டான். குடை காற்றின் வீச்சோடு பிறவளமாய்த் திரும்பியது. மறுபடி இன்னொரு காற்றிற்கு சரிவளமானது. பின்னர் ஈடுகொடுக்க முடியாமல் கம்பிகள் ஒவ்வொன்றாய் முறிய, இவனது பிரயத்தனங்கள் எல்லாம் பாழாகி இறுதியில் குடையைச் சுருக்க முயல, முறிந்த கம்பிகள் குடைச்சீலையைக் கிழித்தன.- அவன் பரிதாபகரமாக மழைநடுவே நிராயுத பாணியாய் நின்றான். பின்னர் ஆபீஸ். என்னென்ன கேட்டார்கள், என்னென்ன பதில் சொன்னான் என்பது அவனுக்கே தெரியாது. லீவு போட்டுக்கொண்டு அறைக்குத் திரும்பியவன் தான்.

மறுநாள். இன்று காலை. மறுபடி மழை. அலுவலகம் போக நேரம் போய்க் கொண்டிருக்கிறது. அவனுக்குச் சினம் சினமாக வந்தது. ஒருவரிடமும் காட்ட முடியாத சினம். பழைய குடைஎன்றால் காற்றிற்கு ஒரு மாதிரித் தாக்குப் பிடித்திருக்குமோ... ? யோசித்தென்ன? இருந்த குடையும் போய்விட்டது. பொறுத்திருக்க வேண்டியதுதான். மழை நிற்கும். வெயில் வரும். புதுக்குடை வாங்குவதா என்று பரமநாதன் மெல்ல மெல்ல ஒரு தீர்மானத் துக்கு வந்து விடுவான் ஆனால் சற்று நாளெடுக்கும்.

**-மனுதர்மன்.-**

**கனடாவில், அகதிகள் வருகையைக் கட்டுப்படுத்த**

# ஒரு புதிய சட்டம்

நீங்கள் கனடாவிற்கு வேறு ஒரு நாட்டிற்கூடாக வந்தீர்களா? நீங்கள் உங்கள் சொந்த நாட்டில் இருந்து தப்புவதற்கு பொய்யான ஆவணங்களை உபயோகித்தீர்களா? நீங்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபடும் ஒரு அமைப்பின் உறுப்பினராக இருந்தீர்களா? 1993-தைமாதத்திலிருந்து இக் கேள்விகளுக்கு "ஆம்" என்று பதிலளித்தால் முன்னரைப்போலன்றி இனி அவர் கள் கனடாவிற்குள் நுழைவது தடுக்கப்படும். இது கனடா அமுல்படுத்த உள்ள புதிய சட்டம்.(சி-86)

அகதிகள் தங்கள் நாட்டில் இருந்து நேரடியாகக் கனடாவுக்குள் வராவிடில் அகதிநிலை கோருவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள். அவர்கள் கடந்து வந்த ஏதாவது ஒரு நாட்டில்தான் அகதி நிலை கோரவேண்டும். அங்கு அகதி நிலை மறுக்கப்பட்டாலோ அலது சொந்தநாட்டிற்கு அனுப்பப்பட்டாலோ கனடியஅரசு அதைப்பற்றி கவனத்திற்கொள்ள மாட்டாது.அகதிநிலை கோருபவர்கள் சட்டவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்களெனக் கனடிய அதிகாரிகள் நம்புமிடத்தும் அவர்களைத் திருப்பி அனுப்பமுடியும்.

புதிய சட்டத்தின்படி எல்லைகளில் பணியாற்றும் அதிகாரிகள் அங்கு வைத்தே விசாரணையின்றியே, சட்டத்தரணிகளின் சேவைகளைக்கூடக் கோரமுடியாதவாறு அகதிகளைத்திருப்ப அனுப்பக்கூடிய அதிகாரங்களைக் கொண்டிருப்பர். அகதிகள் தடுத்து வைக்கப்பட்டிருந்தால் தற்போதயதிலும் பார்க்க நீண்டகாலம் தடுத்து வைக்கப்படுவர்.தற்போது 7 நாட்களுக்கு ஒரு முறை மீள் பரிசீலிக்கப்படும் தடுப்புக்காவல் உத்தரவானது புதிய சட்டத்தின் கீழ் 30 நாட்களுக்கொருமுறைமட்டுமே மீள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.அகதி நிலை பெறுவது மென்மேலும் கடினமாகும். தற்போது அகதி நிலை அந்தஸ்துப்பெற விசாரணைசபையின் ஒரு அங்கத்தவரைமட்டும் நம்பவைத்தால் போதுமானது. இனி சபையின் இரு அங்கத்தவர்களையும் நம்பச்செய்தல் வேண்டும். இதில் புதிய சான்றுகளைச் சமர்ப்பிக்கவோ, பிழைகளைச் சுட்டிக்காட்டவோ, மேல்லுறையீட்டுக்கோ இடமில்லை.

பொதுமக்களின் கருத்துக்களுக்கு அனுமதிக்காமல் கடந்த ஆனிமாதம் கனடியப் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு 93 தைமாதம் முதல் அமுல்படுத்தப்படவுள்ள சி. 86 என அழைக்கப்படும் இச்சட்டமானது அகதிகளை- குறிப்பாக இலங்கையரை- பெரிதும்பாதிக்கும்.

**தகவல்: தேடல்(கனடா)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொப்பேக்கடுவ விவகாரம்

# மீண்டும் தோண்டப்படும் புதைகுழி.

1992 ஆவணி 8ம் திகதி அராலித்துறையில் ஒரு குண்டுவெடிப்பு. அதுதந்த செய்திதான், இந்நாட்டின் பெரும் படைத் தளபதிகளின் ஒன்றடியான உயிர்துறப்பு. இன்று மரணச்சடங்குகளும் முடிந்து, அடக்கமும் முடிந்து அதிர்ச்சி நீங்கி யாவரும் அயர்ந்திருக்கும் வேளை. ஆனால் மர்மநாவல் போல் இப்போது புறப்படுகிறது புதியபிரச்சினை. ஆம். கொப்பேக்கடுவவின் சவக்குழி தோண்டப்படுகின்றது. இறந்தவர் திரும்ப எழுவது பற்றி நிறையக் கட்டுக்கதைகள் உண்டு. ஆனால் இப்போது மீண்டும் உயிர்க்கும் கொப்பேக்கடுவ நியமா, அல்லது இறந்தகொப்பேக்கடுவ நியமா என்ற ஆராய்ச்சி நிட்சயம் பெரியதாக்கத்தை விளைவிக்கக்கூடிய ஒன்று. ஏனெனில் இது மக்கள் அரசில் வைத்திருக்கும் நம்பிக்கைக்கே உலைவைத்துவிடும் தன்மையுடையது.

கொப்பேக்கடுவ தன் சகாக்களுடன் இறந்தபோது அது புலிகளினால் வைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடியொன்றாலே நிகழ்ந்தது என அரசாங்கம் அறிவித்தது. விடுதலைப்புலிகளும் தாமேதான் அதைச்செய்ததாக உரிமை கோரியிருந்தார்கள். ஆனால் புலிகளுக்கும் அரசுக்கும் ஏற்பட்ட தர்க்கம் என்னவென்றால், அராலியை இராணுவம் கைப்பற்றமுன்னர் வைக்கப்பட்ட பழைய கண்ணிவெடியென்று அரசும், தமது உளவுப்படையின் துணையுடன் இலக்கறிந்து வைக்கப்பட்ட புதிய கண்ணிவெடியென்று புலிகளும் கூறிக்கொண்டனர். ஆனால் மரணம் நிலக்கண்ணிவெடியால் தான் நிகழ்ந்தது என உறுதியாகக் கூறப்பட்டது.

இதையடுத்து, அரசு தானே தீர்மானித்து இம் மரணங்கள் பற்றி சுதந்திரமான விசாரணையொன்றை ஏற்பாடு செய்தது. இது இஸ்மைல் எனும் ஓய்வுபெற்ற நீதிபதியின் தலைமையில் நடைபெற்ற தனி நபர் விசாரணைக் குழுவாகும். இந்த விசாரணையும் முடிந்து, அறிக்கையும் சமர்ப்பிக்கப்பட்டது. அது, இம் மரணங்கள் நிலக்கண்ணிவெடியால் ஏற்பட்டதென மீண்டும் உறுதி செய்தது. ஆனால் இப்போது புதிய கதை இப்போது திடீரென்று முளைத்துள்ளது. 2.12.92 இல் ஒப்ரோய் ஹொட்டலில் நடந்த ஒரு பத்திரிகை மகாநாடு. அதில் திருமதி கொப்பேக்கடுவ வீற்றிருந்தார். அத்துடன் சூழ இருந்த முகங்கள் அரசாங்கத்திற்கு எதிரானவை. குறிப்பாக



கொப்பேக்கடுவ:
இறந்த கொப்பேக்கடுவ நிஜமா?
மீண்டும் உயிர்க்கும் கொப்பேக்கடுவ நிஜமா?
மக்கள் அரசில் மீது வைத்துள்ள நபிக்கைகே உலைவைக்கக்கூடிய விடயம் இது

லலித், காமினி, சிறீமாவோ பண்டாரநாயக்கா. இதிலிருந்து இன்னோர் பரிமாணமும் கூடவே தெரிகின்றது. அதுயாதெனில் இங்கே உண்மை தேடும் ஆர்வம் மட்டுமன்றி அரசியல்நலன்களும் சேர்ந்துதான் உள்ளதென்பதே. இந்த பத்திரிகை மகாநாட்டில் லலி கொப்பேக்கடுவவினால் விடப்பட்ட அறிக்கைதான் இந்த சர்ச்சையைக்கிளப்பியது. அது அரசாங்கத்தையும் அனைத்துப் பிரஜைகளையும் சமயத்தலைவர்களையும் நோக்கி, தனது கணவரின் மரணம் குறித்து விசாரிக்க ஒரு சர்வதேச விசாரணைக் கொமிசன் ஒன்றை நியமிக்கும்படி கோரியது. அதில் இம் மரணம் நிலக்கண்ணிவெடியால் ஏற்பட்டதல்ல, வாகனத்தில் பொருத்தப்பட்ட வெடிகுண்டால் ஏற்பட்டதென்று ஒரு வெடிகுண்டு நிபுணர் ஆராய்ந்து கூறியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதுதான் பிரச்சினையைக் கிளப்பி விட்டுள்ளது.

அத்துடன் லலி கொப்பேக்கடுவ தனது அறிக்கையில், தனது கணவனுக்கு இருந்து வந்த அதிருப்தி பற்றியும் அபாயங்கள் பற்றியும் குறிப்பிடுகின்றார். இராணுவத்தின் தலைமைப்பதவி அவருக்கு சமீபித்து வந்த போது தான் இத்தகைய அபாயங்கள் முளைக்கத் தொடங்கி, திரைமறைவில் அவருக்கெதிரான சதிகள் மேற்கொள்ளப்பட்டன. இரு தடவைகள் அவர் இறந்து விட்டதாகவும் கதைகள் கட்டப்பட்டன. அவரைப் பதவியில் இருந்து இறக்கவும், போர்க்களத்தில் அதிகாரத்தைப் பறிக்கவும் அவரை ஓரங்கட்டுமுகமாகவும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் அவர் ராஜினாமாச் செய்யவும் தீர்மானித்திருந்தார். ஆனாலும் மேற்கொள்ளப்பட்ட சமரசப் பேச்சுக்களையடுத்து தனது சேவையைத் தொடர முன்வந்தார்என லலி கொப்பேக்கடுவ மேலும் குறிப்பிட்டார். இதன் மூலம் அவர் மறைமுகமாகச் சுட்டிக்காட்டுவது, இம் மரணங்களுக்கு புலிகள் காரணமாகவல்லாமல் வேறு பின்னணிகளும் இருக்கக் கூடுமோ என்ற வலுவான ஐயத்தைத் தான். லலி குறிப்பிட்ட வெடிகுண்டு நிபுணர் ஜே.ஆர். உவெற் எம்.பி.ஈ என்பவர். இவர் அண்மையில் ஓய்வு பெற்ற மூத்த பிரித்தானிய இராணுவ வெடிகுண்டு நிபுணர். இவர் முன்னர் ஃபாக்லன்ட் தீவுகளின் யுத்தப் பிரதேசங்களில் வெடிகுண்டகற்றும் பணியில் உயர் அதிகாரியாக றோயல் எஞ்சினியேர்ஸ் ஸ்தாபனத்தில் பணிபுரிந்தவர். இராணுவ வெடிகுண்டுக்கல்லூரியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்றுனராகக் கடமையாற்றியவர். ஈராக்கில் கண்ணிவெடியகற்றும் பணியில் ஈடுபட்ட பிரித்தானிய ஸ்தாபனமொன்றுக்கு ஆலோசகராகப் பணி புரிந்தவர்.

இவரின் சர்ச்சையைக்கிளப்பிய ஆராச்சி முடிவுகள் அங்கு எடுக்கப்பட்ட புகைப் படங்களைக்கொண்டே தீர்மானிக்கப் பட்டவை. இவரின் முடிவுகளை பக்க பலமாகக் கொண்டு திருமதி கொப்பேக்கடுவ எழுப்பிய சந்தேகத்தையும், அதை நிவர்த்தி செய்வதற்கான சர்வதேச விசாரணைக்கான வேண்டுகோளையும் அரசாங்கம் உடனடியாக ஏற்று. லலி அவர்களையே எந்த சர்வதேச அமைப்பு விசாரணை நடத்த வேண்டுமென தெரிவிக்கும்படியும் கேட்டுக் கொண்டது. இதையடுத்து இஸ்மாயில் கொமிசனின் பூர்ண அறிக்கைகளையும் கேட்டதாகக் கூறப்பட்டதையடுத்து அவரின் பூரண அறிக்கையும் பத்திரிகையில் வெளிவந்தது. ஆனால் லலி அவர்கள். தான் அப்படிக் கோரவில்லையென பின்னர் மறுத்திருந்தார். இதேபோல் ஒபரோய் ஹொட்டல் பத்திரிகையாளர் மகாநாடு பற்றியும், தனக்கொன்றும் தெரியாமலே ஏற்பாடு செய்யப்பட்டதென்றும் இதனால் அரசிற்கு ஏற்படக் கூடிய அசௌகரியத்துக்கு மனம் வருந்துவதாகவும் தெரிவித்திருந்தார். இவை அரசிற்கும் எதிரணியினருக்கும் இடையேயான பூசலில் கொப்பேக்கடுவ விவகாரம் இழுத்துவிடப்பட்டமையை தெளிவாகக் காட்டுகின்றது. அப்படியான அரசியல் நோக்கங்கள் எதுவுமின்றி உண்மையைக் கண்டறியும் நோக்குடன் இவ் விடயம் ஆராயப்படவேண்டியது அவசியமாகும். இவ்விடயத்தில் லலி கொமன் வெல்த் நாடுகளின் விசாரணையை சிபார்சு செய்துள்ளார். இந்த அளவில் விடயம் தற்போது சூடு தணிந்துள்ளது. மேற்கொண்டு விசாரணைகள் எவ்வாறு அமையும், அதன் முடிவுகள் எப்படி இருக்கும் இஸ்மையில் கொமிசன் அறிக்கைக்கான மதிப்பு எவ்வளவு காக்கப் படும் என்பன பொறுத்திருந்து பார்க்கப் படவேண்டிய தொடர் கதை. எனினும் துலங்கப்படாத மர்மம் என்னவென்றால் இத்தனைக்கும் மூலகாரணமான அந்தப் புகைப் படங்கள் எப்படி அரசாங்கத்திற்குக் கிட்டாமல் உவெற்றின் ஆராச்சிக்கு கிடைத்தன? அவை யாரால் எப்படி எடுக்கப்பட்டவை என்பதே.

சஞ்சாரன்.-

## வெடிகுண்டு நிபுணர் உவெற்றின்

# முடிவுகளும் சான்றுகளும்.



**புகைப்படச் சான்று: கண்ணிவெடி நிகழ்ந்த இடம்.**

1.இந்தக்குண்டு வெடிப்பு புதைக்கப்பட்ட நிலக்கண்ணிவெடியொன்றால் நிகழவில்லை என்பதற்கு வலுவான சான்றுகளைக் காணக்கூடியதாக உள்ளது.

2.இது நிலத்தின் மேல் வைக்கப்பட்ட குண்டொன்றால் நிகழ்ந்திருக்கலாமெனினும், அத்தகைய குண்டொன்றின் தேவைப்படும் பருமனைக் கருதுமிடத்து அது கண்பார்வைக்கு தவறிவிடும் வாய்ப்பு மிகமிகக் குறைவு.

3.வாகனத்தின் கீழ்ப்புறமாக வலதுபக்கப் பின்புறச் சில்லுக்கு அண்மையில் இந்தக் குண்டு பொருத்தப்பட்டிருக்கக் கூடிய வாய்ப்பே கூடுமானபட்சம் நிகழ்ந்திருக்கக் கூடியதாகத் தெரிகின்றது. இக்குண்டு. தொலைவிலிருந்து பல வழிகளாலும் வெடிக்கச்செய்யப்பட்டிருக்கலாம்.

## இவற்றிற்கான ஆதாரங்கள்.

முதலாவதாகக் குழி- கண்ணிவெடியால் ஏற்பட்ட குழியானது ஒரு "V" வடிவில் இருக்கும். ஆனால் இது அப்படியல்ல. குழியின் விளிம்பு உடைந்திருக்கும் விதமும், குண்டுவெடிப்பு நிலத்திற்கு மேலே தான் நடந்ததாகத்தான் காட்டுகிறது என்கிறார்.

அடுத்து, இறந்தவர்களின் உடலில் ஏற்பட்ட காயங்கள்- அண்மையிலிருந்து மிக வேகமாகத் தாக்கிய குண்டு வெடிப்பால் ஏற்பட்டது போல் வெட்டியும் பிய்ந்தும் காணப்பட்டன. ஆனால் நிலக்கண்ணிவெடியானால், அதன் தாக்கம் குறைவாக இருந்து உடல்கள் பெரும்பாலும் காயப்படுத்தப்படாமல் இருக்கும்.

மூன்றாவதாக வாகனத்திற்கு ஏற்பட்ட பாதிப்பு- இதில் வாகனத்தின் முன்பகுதி சேதப்படாமல், பின்பகுதியே சேதப்பட்டிருக்கிறது. அத்துடன் சைலென்சரைப் சேதப்படாமல் இருந்திருக்கிறது. வலது பக்கப் பின்சில்லு அதிகபாதிப்பிற்குள்ளாகியுள்ளது. இதில் நிலக்கண்ணிவெடியாக இருந்திருந்தால் வெடியின் விசை மேல்நோக்கியும் வெளிநோக்கியும் இருந்திருக்கும். மாறாகச் சில்லு 90 பாகைக்கு முறுக்கப்பட்டுள்ளது. மேல் நோக்கிய வளைவு மிகக் குறைவாகவே உள்ளது. மேலும் இங்கு வாகனத்திற்கு ஏற்பட்ட காயங்கள் மிக அண்மையில் இருந்து வெடித்த குண்டின் வேகமான தாக்கத்திற்கு உட்பட்டதைப்போன்று வெட்டுக்காயங்களாக இருந்ததேயன்றி புதைக்கப்பட்ட கண்ணிவெடியின் தொலைவான தாக்கம் போல் இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முந்திய நாட்களில்

முன்பு
எங்களுக்குத் தேவையான
எல்லாம் இருந்தன.
எதையும் நாங்கள்
எவர்க்கும் அஞ்சாமல்
சுதந்திரமாய்ச் செய்பவர்களாய்
இருந்தோம்.

முன்பு
பயந்த பார்வைகள்,
பயமுறுத்தும் பார்வைகள்
எதுவும் இருக்கவில்லை.
அதற்குத்தேவையும் இருக்கவில்லை.
பெண்களோடு பெண்களாய்
வீட்டுக்குள் ஒளிந்து கொள்ளும்
அவசியமும்,
அப்போது எங்களுக்கில்லை.

இரவு உறங்கும்வரை நீண்டிருக்கும்.
நிலவு- நல்ல வெண்மையாய் நிழல் பரப்ப,
முற்றத்தில் பாய்விரித்து, கூடிக்களித்து
சந்தோசமாய்க் கதைப்போம்.
அமாவாசை இருட்டில் கூட
நாங்கள் அப்படித்தான் இருந்தோம்.

முன்பு
சிறுவர்கள் கூடி விளையாடும்
சூழல் இருந்தது.
மரங்களின் மறைவில் நின்று
காதல் பேசும் காலமும் இருந்தது.
வயல் இருந்து, வாய்க்கால் இருந்தது,
தோட்டம் இருந்தது, தோப்பும் இருந்தது,
கடை இருந்தது, பாட்டியின் கடையில்
வடையும் இருந்தது:
நல்ல வரவும் இருந்தது, செலவும் இருந்தது,
நல்ல வரனும் வந்தது,
அதற்கேற்ற மணமும் நடந்தது.
இப்படிஎங்களுக்குத் தேவையானஅனைத்தும்
எங்கள் சொந்த ஊரில் நடந்தன, இருந்தன.

இப்போது என்ன இருக்கிறது?
"அகதிகள்" என்ற பட்டத்தை தவிர!!

- ஸ்நேகதூதன் -13.09.92

## வேண்டுகோள்

சென்னிறச்சூரியனே
செப்பனிட்டுத் தருவாயா
உன் இதயம் போன்று
என் இதயத்தை.

காலை எழுந்து
கரங்களைப் பரப்பி
சலிப்பே இன்றி
தேவைகள் தீர்க்கும்
உன் இதயம் போன்று,

துமின்று போகும்
உயிர்களுக்கெல்லாம்
வர்க்கபேதம் எதுவுமின்றி
எழுச்சியூட்டும்
உன் இதயம் போன்று,

மானிட இருப்பில்
நம்பிக்கை இழந்த
மனிதர்க்கெல்லாம்
புத்துயிர்ப்பூட்ட.

செப்பனிட்டுத்தருவாயா
உன்னிதயம் போன்று
என் இதயத்தை
சென்னிறச்சூரியனே.

-ஜீவகன்-

## எழுந்து வா

உனக்குச்சொல்ல ஆயிரம் உண்டு
பெண்ணே!
மனித உறவுகள் எல்லைகள் அற்றது.
விழிகளில்
பிறக்கிற ஒரு ஒளி
உன் இதயமெங்கும்
ஊடுருவி வரும் போது
உனைப் படித்து விடுவேன்.

முடுதிரை விலக்கி
எழுந்து வா.
உன் விரல்களைப் பற்றி இழுப்பேன்.
ஆத்மாவை என்னிடம் தந்தபின்
வார்த்தைகள் தேவையில்லை.
மானிட தேசம்
எல்லைகளைத்தகர்க்க
முடியாதென்பதில்லையே!

-இந்திரன்-

## இடியை விழுங்கி.....
## மின்னலை ஈர்த்து...

தோழனே!
உன்னை
எலும்புக்கூடாய் உருக்கிய
மண்ணில்
இரும்புக்கோட்டைகள்
எழும்பின உன்னால்:

இடியால், மழையால்,
கோடைவெயிலால்,
கொடும்பனிக்குளிரால்
நொந்து மடிந்த
உன் உணர்வுக்கு
வாழும் உரிமைகள்
மான உணர்வுகள்
மறுக்கப்பட்டால்:

உன்னை நசித்த
இடியும் மின்னலும்
அடிமைத்தளை அறுக்கும்
கருவியாக்கிடுவோம்.
இடியைவிழுங்குவோம்.
மின்னலைக்
கண்களில் ஈர்ப்போம்.

எலும்புக்கூடாய்
நடைபிணமாய்
கொத்தடிமையாய்
உன்னை மாற்றிய
கோட்டைகள் தகர்ந்திட
இடியைப்போட்டு
முடியைத்தகர்ப்போம்
மின்னலை வீசி
அடக்குமுறையெனும்
அடிமைத்தளையெனும்
மேகத்தை எரிப்போம்.

சாம்பலைக்கொண்டே
சந்ததி மறவா
சரித்திரம் படைத்திட
நாம்
எழுவோம்.

விடியலை நோக்கி
அலைகடலென
படைப்புயலென
எழுவோம்!

-தோட்டக்காட்டான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போய் வா மகளே....

சிட்டே...
உன் சின்னக் கூட்டினுள்
கல்லெறிந்தது யார்?
விதியா?
குஞ்சே பறக்கத்தெரியாத சிறுவயதில்
பிரிக்கப்படுகிறாய்- இனி நீ நிர்க்கதியா?

தாய்ப்பறவை
தனிமையில் இங்கு சிறையில்
தவியாய்த்தவிக்கிறது
தன்குஞ்சைக்காண....
தழுவி இரை கொடுக்க...
நெஞ்சோடு அரவணைத்துப் படுக்க....
ராஜ பாட்டையில்
ரதமேறி ஊர்வலம் போகவேண்டிய
ரதிதேவி நீ....
வெயில்எரிக்கும் வீதியில்
வெற்றுக்காலுடன் வந்து
வேடுவன் வாசலில்
காவல் நிற்கிறாய்
கால் கடுக்க.
கண்ணீர் வடியும் முகத்தோடு
அம்மாவைக்காண....
தாயன்பின் கதகதப்பில்
குளிர் காய வேண்டிய
தளிர்க்கொடி நீ...
சிறகொடிந்த அன்னையின்
அரைமணிநேர அரவணைப்புக்காய்
அனல்கக்கும் வெய்யிலில்
சருகாய் வாடுகிறாய்

உலகம் என் கண்களில்
விழுந்து சுழல்கிறது...
இமயம் என் இதயத்தில்
ஏறி மிதிக்கிறது....
இனி உன்னை
என்று காண்பேன்
என் செல்வமே!

நந்தவனத்தின்
நறுமணப்பூவே...
நாதியற்றவளா நீ?
தந்தை இருந்தும்
சொந்தங்கள் இருந்தும்
அநாதையா நீ.......
செஞ்சிலுவையின் அடைக்கலத்தில்
செல்கிறாயா அகதியாய்
உறவைத்தேடி...?

சின்னப்பூவே-உன்
சுகந்தத்தை சுவாசிக்க,
சிட்டுக்குருவியே-உன்
சங்கீதக்கவிதையை ரசிக்க...
இந்த ஞாலத்தில்
யாரும் இல்லையா..?
போங்கள்
பொல்லாத மனிதர்களே....
போய் விடுங்கள் என்னை விட்டு.
நீங்கள் எல்லோருமே
கல்நெஞ்சக்காரர்கள்.......
அற்ப மானிடர்கள்
என் கண்மணியின்
கண்ணீருக்கு அர்த்தம் தெரியாதவர்கள்.
என் உணர்வை வதைத்து
என் உயிரைப்பிரிக்கும்
சதிகாரக்கூட்டம்...
இறைவா இனி நீ மட்டுமே
இந்த இளவரசிக்குத்துணை.

பரிவாரங்களுடன்
பல்லக்கில் ஏறி
பவனி வர வேண்டிய
தேவதை ஒருத்தி
இன்று தன்னந்தனியே .......
பூங்குருவிகளே-இவள்
போகும் இடமெல்லாம்
பூபாளம் பாடுங்கள்.
பூ மரங்களே-இவள்
பட்டுப்பாதங்கள்.
பதியும் இடமெல்லாம்
பூ மொட்டுக்களைத் தூவுங்கள்.
பூந்தென்றலே
சாமரம் வீசு.
இயற்கையே- தாயே
இந்த இளவரசி
இனி உந்தன் பிள்ளை.
இந்தா சுவீகரித்துக்கொள்!

போய்வா மகளே!
போய் வா.
தேவனின் சாம்ராச்சியம்
உனக்குத்தான்
இனிச்சொந்தம்....

உன் சந்தோச நினைவுகளை
இதயவீணையில்
இரை மீட்டியபடி
இந்த சின்னச் சுவருக்குள்
இனி என் காலம் கழியும்...

காத்திருப்போம் கண்மணியே
காலம் ஒருநாள்- எம்மை
ஒன்றாய் சேர்க்கும்.
வாழ்க்கை அப்போது
வசந்தம் பாடும்.

-தமிழினி-

இந்தக்கவிதைக்குப் பின்னால் சோகக்கதை ஒன்றுள்ளது. இக்கவிதை தற்போது விசாரணையை எதிர் நோக்கியபடி சிறையில் வாடிக்கொண்டிருக்கும் இளம் தாய் ஒருவரால் எழுதப்பட்டது. சந்தர்ப்பம் சூழ்நிலைகள் ஏற்படுத்திய சந்தேகத்தால்அரசியல் குற்றம் ஒன்று தொடர்பாக அவசரகாலச்சட்டத்தின் கீழ் அவரது நான்கு வயதான ஒரே மகள் நிராதரவானாள். மனிதாபிமானமுள்ள சட்டத்தரணி ஒருவரின் உதவியால் அவளது மகள் செஞ்சிலுவைச் சங்கத்தின் கப்பலில் தன்னந்தனியாக தாய்வீடு அனுப்பப்பட்டாள். அந்த அன்புமகள் புறப்படுவதற்கு சில நிமிடங்களே இருக்கும் போது தன் அன்னையை கடைசித்தடவையாகக் காண்பதற்கு பொலிஸ் நிலையம் வந்தாள். அந்த சந்திப்பை, அப்போது ஏற்பட்ட மன உணர்வை, அவ் இளம் தாய் இவ்வாறு கவிதையாக வடித்துள்ளார். □





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



sister's sacrifice

கிறிஸ்மஸ் வந்தது

எங்கும்
குதூகலம் வந்தது.

யாரோ உண்டு
வீசிய மீதி
என் முன் வீழ்ந்தது.

யேசுவுக்கு நன்றி!

வாழ்வின் இருப்புக்காய்
எச்சில் இலையில் ஓர்
பருக்கை மீந்து வைத்த
என் யேசுவுக்கு நன்றி!

நத்தார் மாமா
பரிசுப்பொதியுடன்
இவ் வீதியாற போவதை
நான் கண்டேன்.

மழலைகள் யாவும்
குலுங்கிச் சிரித்தன.
படலைகள் திறந்தன.
பாட்டும் கூத்தும்.
நாயும் கூட
வாலாட்டி நின்றது.

தலையின் மேலே
அண்ணாந்து பார்த்தால்
வானத்தை மறைத்த
நட்சத்திரங்களைப்
பூமியிற் சோடித்த
மத்தாப்பூக்கள்.

கண்களைக் கசக்கி விட்டு,
மீண்டும் நான்
எச்சில் இலைமீது
பருக்கினைத் தேடுகிறேன்.

யேசுவிற்கு நன்றி!

-மதுரகவி-

னைத்துத் தொடர்புகளுக்கும் ARUVI, P.O.BOX. 1354, COLOMBO,SRILANKA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Published by Aruvi Publishers P. O. Box 1354 Colombo.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org